87

ஜகன்மோகினி

1—7—1949. 26-வது ஆண்டு. அணா நான்கு

ஆசிரியை: வை.மு.கோதைநாயகி அம்மாள்.

687
OFFICE OF THE REGISTRAR OF BOOKS
1 10 949
MADRAS

3L
MWI N22Jm
N49·267

...ந்த இதழில் ஆரம்பம்.

இதர முக்கிய அம்சங்கள்.

- ஆசாரியன் யார்? சீடன் யார்?
- கவியோகியின் ஆத்மசோதனை.
- சகோதரி சுபலக்ஷ்மியின் சுயசரிதை.
- வனிதாமண்டலத்தில் உணவு ப்ரச்னை.
- திருக்கோளூர் ரஹஸ்யம்.
- வெற்றி எதற்கு? (சிறுகதை.)
- சிதறிய பழமொழி.
- ஆவிதன்னில் சோதி.

ஜகன்மோகினி

ஐயுணர் வெய்தியக் கண்ணும் பயமின்றே
மெய்யுணர் வில்லா தவர்க்கு.
- திருவள்ளுவர்

ஜகன்மோகினி யென்னுஞ்
சஞ்சிகையைக் காக்க
ஜகன்மோ கினி!
மனத்தைச் சார்ந்து
- வீராகவ கவி

Vol. 26. விரோதி ஞூ, சுதந்தர சகாப்தம் July.
No. 7. ஆனி மீ 24-ம் திங்கள். 1949.

தத்துவமும் யுக்தமும்

அந்நாத் பவந்தி பூதாநி என்று தொடங்கும் கீதாச்லோகத்தின் தத்துவத்தையுணர்ந்து, பிறகு அன்னவிஷயமான நேருஜியின் தேசிய வேண்டுகோளைக் கவனித்தோமாகில் நாட்டுமக்களின் கடமை நன்கு புலப்படும்.

இதை சொல்லுகிறது: "ஒரு மனிதனும் ஒருநாளும் கர்மத்தைச் செய்யாதவனாக ஒரு நிமிஷங்கூட இருக்கமாட்டான்... கர்மத்திற்கு ஸாதனமாகும் தன்மை ஜீவாத்மாவினால் அதிஷ்டானம் செய்யப்பட்ட சரீரத்திற்கே உண்டு. அந்த ஜீவனுக்கு அதிஷ்டானம் செய்யும் சக்தியும் அன்னம் பானம் முதலியவற்றால் உண்டாக்கப்பட்ட த்ருப்தியைக் காரணமாக உடையது... ஆக, ஜீவாத்மாவினால் அதிஷ்டானம் செய்யப்பட்ட சரீரம் அன்னத்தினால் உண்டாகிறது. ஸர்வப்ராணிகளும் ஆஹாரத்தினால் உண்டாகின்றன; அன்னம், மழையினாலுண்டாகிறது; மழை, யஜ்ஞத்தாலுண்டாகிறது; யஜ்ஞம், பணம் சம்பாதித்தல் முதலிய கர்த்தாவின் கர்மத்தினாலுண்டாகிறது; கர்மம், சரீரத்தினாலுண்டாகிறது. ஆகையால் சரீரம் எப்போதும் வேள்வியையே ஆதாரமாய்ப் பற்றியிருக்கிறது."

இவ்விதமாக பகவானால் ப்ரவ்ருத்திப்பிக்கப்பட்ட சக்கரத்தைக் கவனிக்குமிடத்து, கர்மயோகத்தைவிட்டு விலக நமக்கு அதிகாரமில்லை யென்பது தெளிவாகிறது. அதாவது கர்மாநுஷ்டானத்தை அவரவர் நிலைக்கேற்றவாறு பகவதாராதன ரூபமாகவே ஸ்வப்ரயோஜனத்துக்காகவன்றிச் செய்யவேணும். அன்னரஸமயமான சரீரம் என்பது மண் என்ற ஒரே த்ரவ்யத்தின் பல நிலைகளில் ஒரு நிலையே: அதாவது, மண்ணிலிருந்து தான்யம், தான்யத்திலிருந்து அன்னம், அன்னத்திலிருந்து சரீரம், சரீரவியோகத்திற்குப்பின் மண். ஆகையால், சரீரமுள்ள நிலையில் நமக்குண்டான கர்மத்தை நாம் செய்யவே வேண்டும்.

"அன்ன உற்பத்தியை —தான்ய விளைவை— அதிகரிப்பதானது உண்மையில் ஏழ்மை, அறியாமை, அரைத்உணவு, அதிக விலைகள் ஆகிய நான்கு எதிரிகளின்மீது கனத்த போர் தொடுப்பதேயாகும்" என்று கூறுகிறார் நம் நேருஜி, தமது 29-6-49உ ரேடியோ ப்ரசங்கத்தில். 1951க்குள் நமது உணவு உற்பத்தியைப் போதிய அளவு அதிகரித்தால்தான் அதுமுதலாவது வெளிநாட்டிலிருந்து உணவை வரவழைப்பதை நிறுத்தமுடியும். தான்யங்களை உற்பத்தி செய்வோரும், உபயோகிப்போரும் ஒத்துழைக்க வேணுமென்று இந்த சந்தர்ப்பத்தில் அவர் வற்புறுத்தியது மிக யுக்தமே. ஒத்துழைப்பது நமது கடமையே.

— வை. மு. ஸ்ரீ.

OFFICE OF ... BOOKS
1 AUG 1949
MADRAS



பி.ஸ்ரீ.

5. ஆசாரியன் யார்? சீடன் யார்?

உப்பிட்ட உத்தமர்கள்.

'உப்பு' என்றதும் 'இதுதானா?' என்று தோன்றுகிறது, ஒரு பிச்சைக்காரனுக்குகூட! 'உப்பில்லாப்பண்டம் குப்பையிலே' என்று சொன்னாலும்கூட, உப்பைக் குப்பையில் சிந்திவிட்டால், பிச்சைக்காரனுக்கு அதிக வருத்தம் ஏற்படுவதில்லை. எனினும் இந்தச் சாதாரண உப்பு ஒரு காலத்தில் பண்டமாற்றுதலுக்கும் ஒரு சாதனமாய் இருந்திருக்கிறது. அதாவது, நாணயமாக உதவியிருக்கிறது. எப்படி, தெரியுமா? உப்புக்கட்டிகள்மீது அரசர்களின் முத்திரையிட்டுச் சில பிரதேசங்களில் அக்கட்டிகளை நாணயமாக வழங்கியிருக்கிறார்கள். இத்தகைய உப்பை நாணயமான பெரியோருக்கும் உபலட்சணமாக வழங்கியிருக்கிறார்கள்.

'பக்தர் தாமே!' என்று, வித்யாகர்வமும் ஜாதிகர்வமும் ஐசுவரியகர்வமும் வாய்ந்த முக்குறும்பர்கள் சாதாரணமாய்ப் பேசலாம். ஆனால், உண்மையான பாகவதர்கள் சாமானியர் அல்லர். 'கடல் எல்லாம் உப்பு' என்று சொல்வதுபோல் உலகெல்லாம் பக்திமயம் என்று யாரே சொல்லமுடியும்? எம்பெருமானுடைய முத்திரை தரித்த பாகவதர்கள் சிலராகவேயிருந்தபோதிலும் உப்பைப்போல் உலக நலத்திற்கு இன்றியமையாதவர்கள்.

சில நோய்களுக்குத் தாற்காலிகமாக உப்பில்லாப் பத்தியம் விதிக்கும் வைத்தியம் உண்டு. ஆனால், பக்தியில்லாப் பத்தியம் விதிக்கிறார்களே வாழ்க்கைக்குச் சிலர் பகுத்தறிவின் பெயரால், அந்த வைத்தியம் பைத்தியம்தான்!

அவர் அன்றோ ஆசாரியர்!

'உப்பைப்போல் இருப்பான்' என்று பாகவதலட்சணம் சொன்னபெரியார், அந்த லட்சணத்தைச் சாதாரணமாகப் பாகவதர்களுக்கும், சிறப்பாக ஆசாரியர்களுக்கும் சொல்லியிருக்கிறார் என்பது என் தாழ்மையான அபிப்பிராயம்.

தான் அழிய மாறிக் கறியமுதக்குச் சுவைதரும் உப்பைப் போல், கைங்கரியத்திலே தன்னை முழுக்க இழந்துவிடுவர் பரம பாகவதர் அல்லது ஆசாரியர் என்பது, 'உப்பைப்போல் இருப்பான்' என்பதற்கு உட்பொருளென்று சாதாரணமாகச் சொல்லுகிறார்கள். ஆனால், உப்பை ஆசாரியனுக்கு உபமானமாக்கும்போது, வேறு பொருள்களும் தொனிக்கக்கேட்கலாம். ஊறுகாய்களைச் சுத்த மாகக் காப்பாற்றிவைப்பது உப்பல்லவா? இப்படிச் சீடர்களின் வாழ்க்கையையும் தூய்மையாகப் பாதுகாத்து இறைவனுக்கு அர்ப்பணம் செய்யவேண்டியது நல்லாசிரியர் கடமை.

முதலாழ்வார்களில் மூன்றாமவராகிய பேயாழ்வார், திருமழிசை யாரைச் சீடராக்கிக்கொண்டு,

"மறம் துறந்து வஞ்சம் மாற்றி ஐம்புலன்கள் ஆசையும்
துறந்து, நின்கண் ஆசையே தொடர்ந்துநின்ற நாயினேன்"

என்று எம்பெருமானை நோக்கித் திருமழிசையாரே விண்ணப்பித் துக்கொள்ளுமாறு, இவர் வாழ்க்கையையும் இறைவனுக்கு இசைந்த பொருளாக்கிவிட்டாரல்லவா? இதே பணியை நம்மாழ்வாரும் சீடரான மதுரகவியாழ்வாருக்குச் செய்தருளினர்.

பகவானே அன்புமிகுதியால் அடியார்களோடு கலந்ததும் அடியாரோடு அடியாராக ஐக்கியமாகி விடுகிறானும், உப்பு நீரோடு நீராய்க்கலப்பதுபோல. இத்தகைய இறைவனின் திருவருள் அடி யாரோடு அடியாராக ஒன்றுபடுவதுடன் நின்றுவிடாமல், கடல் போல் கரைபுரண்டு அந்த அடியாரோடு தொடர்பு பெற்றவர்களை யும் தழுவிக்கொள்ளும் என்று நம்மாழ்வார் தெளிவாகக் கூறியுள் ளார். பிள்ளைலோகாசாரியர் தம்முடன் பலரும் தொடர்புபெற்று உய்யவேண்டுமென்று கருணைகொண்டு தமது அருட்செயல்களால் தாமே தம் தொடர்பைப் பலருக்கும்—தாவரம் முதலியவற்றுக்கும் உண்டாக்கிக்கொண்டாராம்.

இத்தகைய ஆசாரியர்கள் சித்து, அசித்து, ஈசுவரன் என்ற மூவகைத் தத்துவத்தையும் தெரிந்துகொண்டவர்கள்.

"சித்(து) அசித்தோ(டு) ஈசன் என்று செப்புகின்ற மூவகைத்
தத்துவத்தின் முடிவுகண்ட சதுமறைப் புரோகிதன்"

என்று பரமாசாரியரான நம்மாழ்வாரைக் குறிப்பிடுகின்றார் பாரதம் பாடிய வில்லிபுத்தூரார். இந்த முப்பொருளோடு 'அர்த்த பஞ்சகம்' என்ற ஐம்பொருளுண்மையையும் உணர்ந்து உணர்த்தும் ஆற் றல்பெற்றவரே ஆசாரியர் என்பது ஸ்ரீ வைஷ்ணவப் பெரியோர் களின் தேர்ந்த அபிப்பிராயம். உலக வியாபாரமார்க்கங்கள் உப்பின் உற்பத்தி நிலையங்களை நோக்கிச் செல்வதுபோல், முப்பொருளும் ஐம்பொருளும் உணர்ந்த ஆசிரியர்களை நோக்கிச்செல்லும் நல்லவர் களின் வாழ்க்கை நெறிகள்.

இவரன்றே சீடர்

இனி, நாம் சிஷ்யலட்சணத்தையும் ஒருவாறு தெரிந்துகொள்ள முயல்வோம். பேயாழ்வாரின் உபதேசம் பெற்றவராய்,

தமிழ்நாடு ஆவணக் காப்பக நூலகம்
18315

"வாசித்தும் கேட்டும் வணங்கி வழிபட்டும்
பூசித்தும் போக்கினேன் போது"

என்று தம்மைக் கலாபோகியாக்கிக்கொண்ட திருமழிசையார் எத்தகைய உத்தம சிஷ்யரத்தினம்!

'நம்மாழ்வாரைத் தவிர வேறு தெய்வம் அறியேன்' என்ற மதுரகவியாழ்வார்,—'அருமறைகள் தமிழ் செய்தான் தாளே கொண்டு தன்பற்ற மதுரகவி' என்று ஸ்ரீ வேதாந்ததேசிகன் போற்றிய ஆழ்வார்—நம்மாழ்வாரின் உத்தமசிஷ்யரத்தினமல்லவா? நம்மாழ்வாரின் அருளை எட்டுத்திசைகளிலும் பரப்புவதாகச் சங்கற்பித்து ஸ்ரீ வைஷ்ணவத்தைப் பிரசாரம் செய்தவரல்லவா?

உப்பின்வருமானத்தால்நாடுநகரங்கள் நன்மையடைந்து செல்வமும் செல்வாக்கும் பெற்றிருப்பதுபோல், திருமழிசையார், மதுரகவியார் போன்ற சிஷ்யரத்தினங்களின் கைங்கரியங்களால் ஸ்ரீ வைஷ்ணவ சமுதாயத்தின் ஞானபக்திச் செல்வமும் அதிகரித்திருக்கிறதல்லவா?

திருமழிசையாழ்வாரின் சிஷ்யனான கணிகண்ணன் என்ற புலவனும் ஒரு சரியான சிஷ்யரத்தினம். காஞ்சீபுரத்தில் ஆண்டுவந்த பல்லவமன்னன் ஒருவனுக்கும் கணிகண்ணனுக்கும் இடையே நடந்த ஒரு சம்பாஷணைத் துணுக்கு இது:

'உம்முடைய குருவை அரண்மனைக்கு அழைத்துவாரும்; அந்தப் பெரியவர் நம்மைப் புகழ்ந்து பாடவேணும்'

'பகவானுக்கு அல்லவா அவருடை தமிழ் உரியது?'

நீராவது நம்மை வாழ்த்திக் கவிபாடவேணும்'

'இந்த நாக்கைக்கொண்டு மானிடம்பாடுவேனா?'

'உன்னை நாடு கடத்தும்படி உத்தரவு செய்யப்போகிறோம்'

'இன்றே, இப்போதே போய்விடுகிறேன்!'

சிஷ்யனைக் குரு பின்தொடர்ந்தார். குருவைப் பெருமாள் பின்தொடர்ந்தாராம், 'சர்ப்பசயனம்' என்ற மெத்தையைச் சுருட்டிக்கொண்டு. அரசன் மன்னிப்பு வேண்ட, குருவும் சிஷ்யனும் திரும்பினார்கள். பெருமாளும் திரும்பிவந்து 'பைந்நாகப்பாய்' விரித்துக்கொண்டாராம். இப்படி ஆழ்வார் சொன்னவண்ணம் செய்த பெருமாளுக்குச் 'சொன்ன வண்ணம் செய்த பெருமாள்' என்றபெயர். இந்தக்கதை வைஷ்ணவர்களோடு சைவர்களையும் வசீகரித்துவிட்டது. ஹிந்துஸ்தானி பாஷையும் கற்று வடஇந்தியாவிலுள்ள மகம்மதிய அரசர்களையும் வசமாக்கிக்கொண்ட குமரகுருபர சுவாமிகள், 'பைந்தமிழ்ப் பின்சென்ற பச்சைப் பசுங்கொண்டலே' என்ற அழகான சொற்றொடரில் மேலேசொன்ன கதையை அகங்குளிர வாய்குளிரப் பாடியிருக்கிறார். இவ்வளவு சிறப்பும் கணிகண்ணன் என்ற சீடனுக்கு உரியதன்றோ? ஸ்ரீராமானுஜாசாரியர் ஆசார்யலட்சணத்திற்குப் பூர்ண இலக்கியமாக விளங்கியதுபோல் சிஷ்யலட்சணத்திற்கும் ஒரு பேரிலக்கியமாகத் திகழ்ந்தார். இவருடைய ஆசிரியர்களில் ஒருவர் என்று சொல்லத்தக்க திருக்கச்சிநம்பி என்ற பெரியார் வைசியகுலத்திலே தோன்றியவர். ராமானுஜர் காஞ்சீபுரத்தில் இல்லறம் நடத்திவந்த காலத்தில் ஒரு

நான் தம்முடைய இல்லத்தில் அமுது செய்யவேண்டுமென்று திருக்கச்சிநம்பியை அழைத்திருந்தார். ராமானுஜர் கோவிலிலிருந்துஇல்லத்திற்குத் திரும்புவதற்குமுன்னமே நம்பி அங்கே சாப்பாட்டை முடித்துக்கொண்டு போய்விட்டார். அவருடைய பெருமையை ராமானுஜரின் மனைவியார் உள்ளபடி உணர்ந்துகொள்ளவில்லையாம். ஜாதிபேத உணர்ச்சியுடன் திருக்கச்சிநம்பி சாப்பிட்ட இலையை ஒரு கோலால் தள்ளி எறிந்துவிட்டுத் தாம் நீராடியிருந்தார். ராமானுஜர் வந்ததும் விஷயம் தெரிந்துகொண்டு, 'பாகவத அபசாரம் நேர்ந்துவிட்டதே!' என்று பெரிதும் வருந்தி, அந்தக் குற்றத்தைத் தம் மனைவியார் செய்த மூன்று பெருங் குற்றங்களில் ஒன்றாக மதித்துத் துறவியானார்.

இதுவன்றோ தலைநகரம்!

'உப்பிட்டவரை உள்ளளவும் நினை' என்பது ஒரு பழமொழி. மேலே சொன்ன ஆசாரியர்களும் சிஷ்யர்களும் உப்பாக உதவி ஸ்ரீ வைஷ்ணவம் என்ற பக்திமதத்திற்குச் சிறப்பாகச் சுவை தந்திருக்கிறார்கள். இத்தகைய பெரியோர்கள் ஞானராஜதானியாக மதித்தது ஸ்ரீரங்கத்தை. இங்கேயிருந்து பாகவதர்கள் நாடெங்கும் சென்று பக்திமதத்தைப் பரப்பினார்கள் என்று ஊகிக்கலாம்.

இங்கிலாந்தில் வூர்ஸெஸ்டர்ஷைர் (Worcestershire) என்ற தலத்திற்கும் ஐரோப்பாக்கண்டத்திற்கும் இடையே நடைபெற்ற உப்புவாணிபத்தை முன்னிட்டுத்தான் உலகத்தின் தனிப்பெருந்தலை நகரமாகிவிட்டது லண்டன்மாநகரம் என்பர். ஸ்ரீரங்கமோ, பலநூற்றாண்டுகளாகத் தொடர்ந்து நடந்த ஞானவாணிபத்தையும் பக்தி வாணிபத்தையும் முன்னிட்டு ஒரு தனிப்பெருந்தலைநகரமாக விளங்கியது.

* * * * * *

சாதாரண உப்பு எத்தனையோ சண்டைசச்சரவுகளுக்கும் காரணமாக இருந்திருக்கிறது. ஆனால், பக்திமதத்திலே குருவும் சிஷ்யரும் உப்பைப்போல் கலந்து தொண்டாற்றிவந்தார்களே, இவர்கள் இட்ட உப்பு, சமாதானத்திற்கும் ஆன்மநேச ஒருமைப்பாட்டுக்கும் காரணமாக இருந்திருக்கிறது.

ஆம், ஜாதித்துவேஷம், நிறத்துவேஷம் பழைய வைஷ்ணவ, சைவ ஆசாரியர்களிடத்தில் எள்ளளவும் கிடையாது. 'குணம் பெரிது, குலம் அன்று' என்பது அவர்கள் கொள்கை.

1930–ல் காந்தியடிகள் நடத்திய உப்புச்சத்தியாக்கிரகமும் இந்தியாவின் ஆன்மநேச ஒருமைப்பாட்டுக்கு உதவவில்லையா? வைஷ்ணவத்திலும் சைவத்திலும் குரு சிஷ்யக்கிரமத்தைக் குறிப்பிடும் வரலாறுகளெல்லாம் பக்தியுலகை வாழ்விக்கவந்த ஒருவகை உப்புச் சத்தியாக்கிரகம் என்றே என் புத்தியில் படுகிறது.

ஜகன்மோகினி	இந்தியா, ஸிலோன்.	பர்மா	வெளிநாடு.
தனிப்பிரதி	அணா 4.	0—4—6.	0—5—0.
வருடச் சந்தா	ரூ. 3—0—0.	3—8—0.	3-12—0.

"குருவிக்கேத்த ராமேச்வரம்"

லக்ஷ்மி:—என்ன ஸரஸ்வதி! ஆடிப்பாலுக்கு மருமகப் பிள்ளையை அழைக்கவேண்டாமா! சீர்வரிசைகள் தடபுடல்தானே! பாத்திரங்கள் செய்துவிட்டாயா?....

ஸரஸ்வதி:—என் நிலைமை தெரிந்து என்னைக் கேட்கிறாயே லக்ஷ்மீ! உன்னைப்போல் நான் என்ன பெரிய செல்வச்சீமாட்டியா? ஏதோ எப்படியோ ச்ரமப்பட்டுக் கல்யாணத்தை ஒருவாறு முடித்தாயிற்று. நான் ஒவ்வொரு பண்டிகைக்கும் செய்வதற்கு எங்கு போவேன்! ஏதோ பொன்வைக்குமிடத்து பூவை வைத்துத்தான் செய்யவேண்டும். ஆசை என்னவோ அதிகமாகத்தான் இருக்கிறது. ஆசை இருக்கு தாசில் பண்ண, அதிர்ஷ்டமிருக்கு கழுதை மேய்க்க...அதுபோலத்தான் என்னிலைமையும். வெள்ளிகூஜாவாவது ஆடிப்பாலுக்குச் செய்ய ஆசை இருக்கு. காலத்தின் நிலையில் எவர்ஸில்வர் கூஜாகூட வாங்க சக்தி இருக்குமோ இருக்காதோ! என்னமோ "குருவிக்கேத்த ராமேச்வரம்" என்பார்களே அது போல வெங்கலகூஜாவாவது வாங்கிக்கொடுத்து ஒப்பேத்துவது....

லக்ஷ்மி:—என்ன!...என்ன!...நீ சொன்ன பழமொழியை இன்னொருதரம் சொல்லு....

ஸரஸ்:—குருவிக்கேத்த ராமேச்வரம்...ஏன்? இதில் என்ன இத்தனை ஆச்சரியமாய் கேட்கிறாய்? இது தலைமுறைதத்துவமான பழமொழிதானே...

லக்ஷ்மி:—ஆமாம். தலைமுறைமட்டுமல்ல. யுகாந்தரமான பழமொழி என்றுகூடச்சொல்லலாம். குருவிக்கேத்ததாவது, ராமேச்வரமாவது? இந்தப் பழமொழி சொல்லத்தெரியாதவர்கள் வாயில் புகுந்து கிளம்பி சிதறிவிட்டது. மனுஷ்யர்களுக்குத்தான் ராமேச்வரப்ராப்தி உண்டு. அதிலும் கொடுத்துவைக்காதவர்களுக்கு இல்லை, குருவிக்கும் காக்காய்க்கும் ராமேச்வரமாவது? இந்த பழமொழியின் சரியான வாக்யம் எது தெரியுமா? குறிக்கேற்ற ராம சரம் என்பதாகும். உலகத்தில் எத்தனையோ சரங்கள் (சரம் என்றால் பாணம்) இருக்கின்றன. அவைகளில் அனேகம் தோல்வியடைந்துவிடும். ஆனால், ஸ்ரீராமனுடையசரங்கள் இருக்கின்றனவே அவற்றுக்குத்தான் தோல்வி என்பதோ வைத்தகுறி தவறியது என்பதோ அகராதியிலேயே கிடையாது. அந்த சரத்தை ஸ்ரீராமன் ஏவும்போது "மூக்கு நுனியில் இந்தபாகத்தைத்துளைத்து வா" என்றால் அப்படியே துளைத்து வெற்றியை அடையும். அத்தகைய சிறந்த சக்தி அதற்கு இருப்பதை உணர்த்தி அதன் பெருமையைக் காட்டவே, "குறிக்கேற்ற ராமசரம்" என்ற பழமொழி பிறந்தது. இதன் தத்துவமும் அறியாது, பதங்களின் சேர்க்கையின் அர்த்தமும் அறியாது குருவிக்கேத்த ராமேச்வரம் என்று வேறு ஒவ்வாத அர்த்தம் த்வனிக்க உச்சரித்துவிட்டு அதற்கான வார்த்தைகளையும் விஷயங்களையும் பேசி கடைமுறையில் கொண்டுவந்துவிட்டார்கள். அதையே நீ சொல்கிறாய். இது உன் குற்றமில்லை.

எனினும் பழமொழிகளின் பதங்களை நீ கூர்ந்து கவனித்துப் பார்த்தால் சிறிது அறிந்திருக்கலாமில்லையா?...

ஸரஸ்:—லக்ஷ்மீ! நீ இப்போது சொல்லித்தான் இந்த பழமொழியின் உண்மை வாக்யத்தை நான்கேட்கிறேனேயல்லாது இந்த நிமிடம்வரையில் எனக்குத் தெரியாது. சொல்லியபிறகு யோசித்துப் பார்த்தால் ஒருவாறு புலனாகிறது. 'குறிக்கேற்ற ராமசரம்'என்ற திவ்யவாக்யம் எங்கே! குருவிக்கேத்த ராமேச்வரம்...என்ற சிதறிய வாக்யம் எங்கே....வாஸ்தவம். இதுபோன்ற விஷயங்களைப் புரிந்து கொள்ளாமல் தத்துபித்து என்று உபயோகித்துப் பேசுவதை நிறுத்தி உன்போன்றவர்களிடம் அறிந்து பேசினால் மிகவும் நல்லது.

லக்ஷ்மி:—யதார்த்த பழமொழிக்கும், சிதறிய பழமொழிக்கும் இப்போது வித்யாஸம் தெரிந்ததா? குறிக்கேற்ற ராமசரம் என்கிற சரியான வார்த்தையுடைய பழமொழிக்கு எப்படி உபமானங் காட்டி அர்த்தம் செய்யலாம் என்றால், "அடாடா! அவளுடைய புத்தி இருக்கிறதே, மகா கூர்மையானது; குறிக்கேற்ற ராமசரம் போல் கூர்மையாக நினைத்ததை நினைத்தபடிச் செய்யும் சக்தி வாய்ந்தது. இந்த காரியத்தை இப்படித்தான் செய்யவேண்டும். குறிக்கோளுடன் திட்டம் வகுத்தால் அதேமாதிரி திராசு நிறையாகச் செய்துமுடிக்கும் ஆற்றலன்றோ மெச்சத்தக்கது!......என்ற முறையில் வைத்துப் பேசினால் பொருந்தும். இதுபோல் இன்னும் எத்தனையோ உதாரணங்களுக்கு உபயோகித்துப் பேசலாம்.

(அடுத்த இதழில் இன்னொரு பழமொழி)

இந்த மாதம்

ஆழ்வார் ஒருவரும் ஆசார்யச்ரேஷ்டர்கள் மூவரும் திருவவதரித்த தனிச் சிறப்புடையது இந்த மாதம்: ஸ்வாதியில் பெரியாழ்வாரும், எங்களாழ்வானும், வடக்குத்திருவீதிப்பிள்ளையும் முச்சுடர்ச் சோதிகளாகவும், அநுஷத்தில் நாதமுனிகள் குருபரம்பராஹாரத்தில் நடுநாயகமாகவும் உதித்தருளினர்.

ஆனிதன்னில் சோதி

ஆனிதன்னில் சோதி (ஸ்வாதி)யில் தோன்றிய சோதியான பெரியாழ்வாரின் வைபவம் ப்ரஸித்தம். ஏற்கெனவே பல அம்சங்களை மோகினி இதழ்களிலும் மலர்களிலும் ரஸித்திருக்கிறோம். இவரது "திருமொழி" அநுபவம் இங்கு நமக்குப் பரமபோக்யம்—

1. பல்லாண்டு பல்லாண்டு: ஸ்ரீய: பதியான ஸர்வேச்வரனே பரமபுருஷன் என்று வேண்டிய வேதங்கள் ஓதி விரைந்து கிழி யறுத்து, ஸ்ரீவல்லபதேவன் என்னும் பாண்டியன் கொண்டாட மதுரைத் திருவீதியில் யானைமீது பவனிவருகிறார் பெரியாழ்வார். இக்காட்சியைக் காணவந்த எம்பெருமானே கருடாரூடராய் ஆகாசத்தில் ஆழ்வார்க்குத் தோன்றுகிறான். அவனுடைய ஸௌந்தர்யாதி குணங்களில் ஈடுபட்டு இவ்விருள்தருமாஞாலத்திலே இத்திருமேனிக்கு என்ன தீங்குநேருமோ என்று கலங்கிக் காலதத்வமுள்ளதனையும் இச்செவ்வி மாறாதே நித்யமாய்ச் செல்லவேணும்

என்று தனக்கென ஒன்றும்வேண்டாது அவனுக்கு மங்களா சாஸனம் பண்ணுகிறார். இங்கும் தாம் தனித்து அநுபவிக்கவல்ல ல்லாமல் ஐச்வர்ய கைவல்ய பகவத் காமரென்னும் அதிகாரிகளை யும் அழைத்து அநுபவிக்கச்செய்கிறார்.

2. வண்ணமாடங்கள் சூழ்திருக்கோட்டியூர்: திருவாய்ப்பாடியில் கண்ணன் பிறந்தபோது கோவலர் கொண்டாடியதை திருக் கோட்டியூரில் அநுபவித்தல்.

3. சீதக்கடலுள் அமுதன்னதேவகி: கண்ணன் திருவடிகளில் நின்றும் திருமுடியளவாகத் தாய்மார் அநுபவம்.

4. மாணிக்கம்கட்டி: கண்ணன் மேன்மையையும் நீர்மையை யும் சேர்த்து அருளிச்செய்து தாலாட்டுதல்.

5. தன்முகத்துச்சுட்டி: கண்ணன் தவழ்ந்த புழுதி படிவது சந்திரனை அழைப்பது.

6. உய்யஉலகு உண்ட மணிவயிறு! செம்மையான பாட்டைப் பாடுவதும் அதற்கு ஏற்ப பாலக்ருஷ்ணனை ஆடச்சொல்வதுமான தமிழர் துறையிலே செங்கீரைஆடுக என்றல்

7. மாணிக்கக் கிண்கிணி ஆர்ப்ப: சப்பாணிகொட்டிடருளே என்று கைகளைக் கூப்புவதும் கொட்டுவதுமான லீலை.

8. துடர்சங்கிலிகை: தளர்நடை நடவானோ என்று சின்னஞ்சிறு பாதங்களைத் தத்திவைத்து நடைபழகும் அழகு.

9. பொன்னியல் கிண்கிணி: முன்புறம் கண்டு கட்டியணைக்க ஆசைப்படுவார் பேசும் "அச்சோ அச்சோ" என்னும் லீலை.

10. வட்டு நடுவே: பின்புறமாக வந்து முதுகுகட்டி விளையாடும் புறம் புல்குதல் என்னும் ரஸம்.

11. மேச்சூது சங்கம்:சிறுபிள்ளைகள் அப்பூச்சி காட்டிவிளையாடுதல்

12. அரவணையாய்! பால்குடிப்பது மறந்து உறங்க அவனை எழுப்பி அம்மம்உண் என்று பால்குடிக்கக் கால்பிடித்தல்.

13. போய்ப்பாடுடைய நின்தந்தையும்: அவன்பேர் பன்னிரண்டும் பேசி காது குத்திக்கொள்ள அழைத்தல்.

14. வெண்ணெய் அளைந்த குணுங்கும்: நீராடவாராய்! என்று புழுதியளைந்த பொன்மேனிக்குத் திருமஞ்சனம் செய்ய அழைத்தல்.

15. பின்னை மணாளனை: குழலைவாரிப் பின்னிவிட அவன் இடந் தாராதபோது பேச்சுக்காட்டிப் பின்னிவிட குழல்வாராய் அக்காக்காய் என்று அழைத்தல்.

16. வேலிக்கோல்வெட்டி: கன்றுகாலிகள் மேய்ப்பதற்குக் காக் கையைக் கோல்கொண்டுவா என்பது.

17. ஆனிரைமேய்க்க நீ போதி: அமரர் சென்னிப்பூவானவனுக் குப் பூச்சூட்டி அலங்கரிக்க அழைத்தல்.

18. இந்திரனோடு பிரமன்: கண் எச்சில் படாமைக்கு திரு அந்திக் காப்பிடுதல்.

19. வெண்ணெய் விழுங்கி: வெண்ணெய் களவாடல் முதலிய பால லீலைகள்.

20. ஆற்றிலிருந்து: கண்ணன் தீம்புகளை யசோதையிடம் ஆயர் மங்கையர் முறையிடுதல்.
21. தன்னேராயிரம் பிள்ளைகள்: அதிமானுஷமான செயல்களைக் கண்டு யசோதை முலைகொடுக்க அஞ்சினது.
22. அஞ்சனவண்ணனை: கண்ணனைக் கன்றின்பின்போக்கி அநுதபித்தல்.
23. சீலைக்குதம்பை: கோதுளி படியக் கன்றுமேய்த்துவரக் கண்டு களிப்படைதல்.
24. தழைகளும் தொங்கலும்: ஆயர்சிறுமியர் கண்ணனைக்கண்டு காமுறுதல்.
25. அட்டுகுவி சோற்றுப் பருப்பதம்: கோவர்த்தனமலையைக் குடையாய்ப்பிடித்து ஆநிரையுடன் ஆயரைக்காத்தல்.
26. நாவலம் பெரியதீவினில்: கண்ணன் வேய்ங்குழலூதற் சிறப்பு.
27. ஐய புழுதி உடம்பு: தலைமகள் இளமைகண்டு நற்றாய் இரங்குவது.
28. நல்லதோர் தாமரைப்பொய்கை: தலைமகனுடன் சென்ற தன் மகளைக் குறித்துத் தாய் பலபடியாய் வருந்துதல்:
29. என் நாதன் தேவிக்கு: "உந்தீபற" என்னும் துறையில் அவதார சேஷ்டிதங்களை இரு தோழிப்பெண்கள் எதிரெதிராகப்பேசுதல்.
30. நெறிந்த கருங்குழல் மடவாய்: சீதாபிராட்டியினிடம் அநுமான் ராமதூதனாகவந்து அடையாளம் தெரிந்துரைத்தல்.
31. கதிராயிரம் இரவி: கண்ணனைத்தேடுவார் சிலரும் கண்டார் சிலருமாகப் பேசுதல்.
32. அலம்பா வெருட்டா: 33. உருப்பிணி நங்கைதன்னை: திருமாலிருஞ்சோலைச் சிறப்பு.
34. நாவகாரியம் சொல் இல்லாதவர்: திருக்கோட்டியூர் வைபவம்.
35. ஆசைவாய்ச்சென்ற: பகவானிடம் அன்பில்லாத ஸம்ஸாரிகளுக்கு ஹிதோபதேசம் செய்தல்.
36. காசும் கறையுடை: அவத்தப்பேரிடும் அறிவிலார்க்கு, பகவானுடைய நாமங்களை இட்டு அழைக்கும்படி உபதேசித்தல்.
37. தங்கையை மூக்கும்: தேவப்ரயாகை என்னும் கங்கைக் கண்டமென்னும் கடிநகரின் மஹிமை.
38. மாதவத்தோன்புத்திரர்: 39.மரவடியைத தம்பிக்கு:திருவரங்கம் பெரியகோயிற் சிறப்பு.
40. துப்புடையாரை. அரங்கன் தாளிணைகளில் அந்திம காலத்தில் கடாக்ஷிக்கும்படி அப்போதைக்கு இப்போதே சரணம் புகுதல்.
41. வாக்குத்தூய்மை: நைச்யாநுசந்தானம் பண்ணுதல்.
42. நெய்க்குடத்தைப்பற்றி: எம்பெருமான் திவ்ய தேசங்களில் உகந்து வாசம்செய்வதுபோல் தமது நெஞ்சிலும் புகுந்துள்ளான் என்றுகூறி நோய்களை அகன்றுபோம்படி எச்சரித்தல்.
43. துக்கச் சுழலை: திருமாலிருஞ்சோலை எம்பெருமான் ஆழ்வார் சிந்தையிலே திகழ அவனைப் போகவொட்டாது தடுத்தல்.
44. சென்னியோங்கு: எம்பெருமான் தன் உள்ளத்தில் நின்று செய்த நன்மைகளை உருக்கமாகக் கூறுதல்.

— ஸ்ரீவைஷ்ணவதாஸன்.

ஆத்ம சோதனை

★

கவியோகி
ஸ்ரீ சுத்தானந்த பாரதி

★

● சுயசரிதை ●

II. வளர்ந்த கதை

13. ஊர் சுற்றி

என் பெயர் செல்லையா; ஆனால் நான்வரும்போதெல்லாம் "ஏண்டா செல்லையா, சீரழிஞ்சஐயா! எங்கே ஊர்சுற்றினாய்? ஹூம்!" என்பர் வீட்டில்... ஆம் நான் ஊர்சுற்றிதான். தியானத்தில் அமர்ந்தால் பொழுதுபோவதே தெரியாது. யாராவது சாதுக்கள் பேசினால் கேட்டுக்கொண்டேயிருப்பேன். மற்றநேரமெல்லாம் சும்மா சுற்றித் திரிவேன். அரைமணிகூட ஒரே இடத்தில் இருக்கமாட்டேன். சில நாட்கள் வீட்டிற்கே வராமல் சுற்றுக்கிராமங்களில் திரிவேன். தேர் திருநாள் என்றால், வீட்டில் சொல்லாமலே ஓடிப்போவேன். பத்துப் பதினைந்துநாள்கூட என்னை வீட்டார் காணமுடியாது. மகான்கள் கண்ணில் பட்டால், உலகையே மறந்து அவர்களுடன் சென்று கைங்கரியம் செய்வேன். அதன் பயனாக எங்கள் உபாத்தியாயர் பிரப்பம்பழம் கொடுத்து பெஞ்சுமேல் ஏற்றி நெற்றியில் சுன்னம் போட்டாலும் "ஓம்! சுத்தசக்தி" என்று பிராரப்தகர்மத்தைப் பொறுத்துக்கொண்டிருப்பேன். சிவகங்கையைச்சுற்றி சோழபுரம், ஒக்கூர், மதகுப்பட்டி, நாட்டரசன்கோட்டை, காளையார் கோயில் முதலிய பல ஊர்கள் உண்டு. அந்த ஊர்களுக்குத் திருவிழாக்காலங்களில் அவசியம் சென்று பஜனைபாடுவேன்....தடபுடலாக பிரசங்கமும் செய்வேன். மற்ற நாட்களில் கிராமவாசிகளின் வாழ்க்கையைக்காணவே செல்வேன். உள்ளூரில் தினம் முறைவகுத்துக்கொண்டு சுற்றுவேன். எங்களூரில் கோவில்களும் பஜனைமடங்களும் புராண மடங்களும் அதிகம்.

எங்கள் வீடு புனிதமாக அமைந்தது. அடுத்தவீடு வக்கீல் வீடு; என்வீட்டிலும் அண்ணா ஜ. வேங்கடராமையர் வக்கீலே. மூன்றாவது வீடு ருக்வேத கனபாடிகள் வீடு. அங்கிருந்து வேதகானமும் உபநிஷத்தும் வந்துகொண்டேயிருக்கும். கிழக்குபுறம்

சாமவேத கனபாடிகள் வீடு.........அங்கிருந்து "ஹா உஹா உஹா வூ" என்று சாமகானம் செவிகுளிரவரும். மகாமேதாவி யான அவர் பிள்ளை சுந்தரச்ரௌதிகளும் பாகவதம், ராமாயணம், ஸ்காந்தம் முதலிய புராணங்களை தினம் படிப்பார். நான் தவறாமல் கேட்பேன். அது பெரிய அறிவுப்பயிற்சியாயிருந்தது. எங்கள் வீட்டிற்கு இருபது முப்பதடி தள்ளி, பெரிய சிவன்கோயில் விசுவநாதர் ஆலயம். அங்கே மேளவாத்யம், வேதாத்யயனம், தேவாரதிருவாசகபாராயணம் எல்லாம் நடக்கும். நான் எல்லாக் கால பூஜைகளுக்கும் தவறாது சென்று நடராஜசந்நிதியிலும் விசாலாட்சி சந்நிதியில் உள்ள வில்வமரத்தடியிலும் அமைதியாக தியானம்செய்து பாட்டெழுதுவது வழக்கம். ஐந்தாண்டுவரையில் வீட்டில் காணாதுபோனால் சிவன்கோயிலிலேதான் என்னைக் காணலாம். எனக்குக் கோயில் அப்படி இன்பமளித்தது. எங்கள் தெருவின் இருமுனைகளிலும் பஜனை மடங்கள். கிழக்கே திருவாவடுதுறை பஜனைமடம். அதில், முன்னே ராமகிருஷ்ணமடமும் இருந்தது. அங்கே ஒரு புத்தகசாலையும் உண்டு. பதினைந்து வயதிற்குப்பிறகு நான் அந்தமடத்திலேதான் பெரும்பாலும் வசித்தேன். சுந்தரமூர்த்தி பாகவதரும் நரசிம்மபாகவதரும் அமோகமாக பஜனைசெய்தார்கள். அந்த பஜனையில் நானும் கலந்துகொண்டு பாடுவேன், கடம்வாசிப்பேன், வாய்த்தாளம் போடுவேன், தீபப்பிரதட்சிணம் செய்வேன். வேதாந்தபாடங்கள் படித்து விளக்குவேன். அந்த மடத்தில் அடிக்கடி துறவிகள் வருவார்கள். உபசரிப்பேன். ஞானரகசியங்களையும் யோகரசியங்களையும் கற்பேன். தெருவின் மேற்குக் கோடியில் ராஜாக்கள் வசித்தனர்—பெரிய வஸ்தாதுகள். அவருள் பிடில் ராமசாமி ராஜு, பெரிய வித்வான். இவர் எனக்கும் இசை பயிற்றினார். அவர் கிருஷ்ணமராஜா பஜனைமடத்தில் வாசித்தார்; அந்த பஜனையில் அவசியம் சேர்ந்து, நானும் ராஜாக்களுடன் பாடுவேன். தீபப்பிரதட்சிணம் செய்வேன்.

ராஜாக்கள் தெருவைத்தாண்டினால் வேளாளர்தெரு. அங்கே தேவார திருவாசகங்கள் முழங்கும். செவிகுளிரக் கேட்டுருகுவேன். எங்கள் தெரு தெப்பக்குளத்தெரு. பெரிய தெப்பக்குளம் அங்கே ஊருக்கு உதவியாயிருக்கிறது. அந்தத் தெப்பக்குளப்படித்துறைதான் எனக்குக் கதாசிலையம், நாடகசாலை, உலகறிவு மன்றம்... அங்கே ஆண்பெண்கள் அடிக்கும் வம்புதும்புகளெல்லாம் என் கதைகளில் கதம்பமாகச் சேர்ந்துவரும். அந்தத் தெப்பக்குளத்தை இரண்டாக்குவோம் குட்டிப்பயல்கள். நாராயணஅண்ணு ஒரு அதட்டுப்போட்டு இழுத்து, கரையில் எறியுமட்டும் நடுத்தெப்பக் குளத்தில் துளைந்து முழ்கி மண்ணெடுப்போம். நான் குளித்து அங்கே சந்தியாமடத்தில் ஜபம்செய்யத்தவறமாட்டேன். குளத்தங் கரையில் ராஜா சத்திரம்; அங்கேதான் சங்கராசாரியார் மத்வாசாரியார் முதலிய பெரிய துறவிகளும் குருமார்களும் இறங்குவார்கள். சாப்பாடு பலமாகக்கிடைக்கும். அந்தக்காலங்களில் வீட்டை எட்டியேபாராமல், அங்கேயே பிரசங்கம் கேட்டு பூஜை பார்த்து பெரியோருக்குத் தொண்டுசெய்து கொண்டிருப்பதும் உண்டு.

எங்கள் தெப்பக்குளத்தெருவிற்கு அடுத்தது இரட்டைத்தெரு; அதன் கிழக்குக்கோடி சிவாலயம். மேற்குக்கோடி பெருமாள் கோயில்—எதிரெதிரே. உள்ளூர் கனதனவான்களெல்லாரும் அந்தத் தெருவிலேதான் இருக்கிறார்கள். சிவன்கோவிலை அடுத்து வடமர் பிரஹத்சரணம், இன்னும் தள்ளி நடுத்தெருவில் பெரிய வக்கீல்கள் உத்தியோகஸ்தர்கள், பெருமாள்கோவில் தெருவில் வைணவர் சுமார்த்தர் கலந்து வசிக்கின்றனர்; இடையே ஒரு சந்தையுண்டு, மளிகைக்கடைகளும் உண்டு. இந்தத்தெருவில் வேதபாடசாலை இருந்தது; வேதஒலி கேட்கும். அதைத் தாண்டி சிவகடாக்ஷம் பாகவதர் மடம் இருந்தது. அதில் ஸ்ரீராமநவமி உற்சவம் நடக்கும். நடுத்தெருவில் கதை புராணம் நடக்கும். பெருமாள்கோயில் தெருவிலே என் வணக்கத்திற்குரிய ராமதாஸ் பாகவதர் மடத்தில் அடிக்கடி கதை, சச்சேரி பஜனைகள் நடந்துகொண்டேயிருக்கும். இராமதாஸ்பாகவதர் பிள்ளை தசரதராம பாகவதரின் ராமாயண காலக்ஷேபம் வெகுஇனிமையாயிருக்கும். பஞ்சாபகேசபாகவதர், முத்தையா பாகவதர், மாங்குடி சிதம்பரபாகவதர், லக்ஷ்மணாசாரியார், மதுரை சேஷபாகவதர். காரைக்குடி வீணைசகோதரர், கிரீசபாகவதர், கோடீசையர் முதலிய மகனீயர்களெல்லாரும் அங்கே வந்து பாடுவார்கள்; காலக்ஷேபம் செய்வார்கள். பெருமாள்கோயில் திருநாட்களிலும் மார்கழிமாதத்திலும் திருவாய்மொழிசாதிப்பார்கள். மணிப்ரவாளம் படிப்பார்கள் புளியோதரையும்பொங்கலும் தவறாது கிடைக்கும்; ஆதலால் தவறாது நாங்களும் கூட்டமாகப் போவோம். திருக்கோஷ்டியூரிலிருந்து பாகவதர்கள் வந்து இனியகுரலில் திருவாய்மொழி பாராயணம் செய்யக்கேட்கும் செவியேசெவி.

மூன்றாவது தெரு சிறியது. அதில் சில சோதிடர்கள் இருந்தனர். அவர்கள் வீட்டுவழியே சகுனம்பாராமலே நாங்கள் உடையார் ஊருணிக்குச் சென்று நீந்துவதுண்டு. அந்த உடையார் ஊருணித்தெருவில் வெளியிடங்கள் உண்டு. அங்கே நாங்கள் துணிப்பந்துகட்டி ஆடுவதுண்டு. ஊருணியின் கிழக்கே ஒரு பரதேசிமடம் இருந்தது. பஞ்சைப்பரதேசிகளும் அன்னக்காவடிகளுமே அங்கே கூடுவதுண்டு. அதில்ஒருபெரியகிணறுண்டு; தோட்டமுண்டு. அங்கே சிலநாட்கள் குளித்து பண்டாரங்களுடன் தாயுமானார் பாடலும் கைவல்யமும் பாடுவதில் எனக்கு மகிழ்ச்சி. அந்தப் பண்டாரங்களுள் சித்திபெற்ற மகான்களைக் கண்டிக்கிறேன். அவருள் ஒருவரே எனது தியானகுருவான மாங்குடிச்சாமியார். அவருடன் இரவில் தியானித்துவந்தேன். நான் அப்படி தியானித்த இடத்திலேதான் இப்போது சுத்தானந்த சமாஜம் அமைந்திருக்கிறது—அதே இடத்தில். அதற்கருகே அரசமரம். அங்கே முனியாண்டி ஓடுவதாக ஊரில் பயம். பொதுவாகவே இருட்டினால் உடையார் ஊருணிப்பக்கம் யாரும் வரமாட்டார்கள்—"உடையார் ஊருணியில் பிடித்த பேய் உயிருடனேதான்போகும்" என்ற கிலியும் உண்டு. ஊருணிக்குச்சற்று தூரத்தில் பிரமஞானசபை காணும். அங்கே நான் குளிக்கவும் பத்திரிகை படிக்கவும் நூலாராயவும் மாடியில் தியானிக்கவும் செல்வதுண்டு. பெரியவர்கள் வந்தால் அங்கே

தங்குவார்கள். அவர்களைச்சென்று காண்பேன். எனது ஞானத் தாயகங்களில் இந்தஇடம் ஒன்று.

அதனருகே மாஜிஸ்ட்ரேட் கோர்ட்டு, முனிஸிப்கோர்டு, ஸப்கோர்ட், ரிஜிஸ்ட்ரார் ஆபீஸ், மாணவர் ஹாஸ்டல், பெண்கள் பள்ளிக்கூடம் பிரயாணிகள் பங்களா, கோகலே ஹால் முதலிய பல கட்டிடங்கள் உண்டு. அருகே செட்டி ஊருணி—நீர் அமுத மாயிருக்கும்; அதன் கரையில் ஹனுமார்கோயில். இந்த ஹனு மாரை விழுந்து கும்பிடாமல் நான் எந்தப்பாடமும் தொடங்கிய தில்லை. என் ராமஜபம் இங்கேதான் சித்திபெற்றது. எல்லாரும் மாருதிக்கு வடைமாலைசாத்துவார்கள், நான் பாமாலை சாத்தினேன்.

ஹனுமார்கோயில் தோட்டத்தில் நெல்லிக்காய் அடித்துச் சாப்பிட்டு, ஊருணித்தண்ணீர் குடித்து, உட்கார்ந்தால், பாடம் வெகு சுறுசுறுப்பாக ஓடும். ஆசிரியர் பிரம்பினின்று தப்பிப்பிழைக்க இந்த ஹனுமாரைத்தான் நாங்கள் உபாசனை செய்வோம். ஊருணிக் குக் கிழக்கெல்லாம் பெரிய மைதானம். கற்றாழைகள் நிரம்பியிருக் கும். அவற்றுள் எங்களுக்கென்று ஒற்றையடிப்பாதை, மறைவிடம் எல்லாம் தேடிவைப்போம். பள்ளிக்கூடத்துடன் சண்டைபோடப் பாசறைகூட அமைப்போம். ஒற்றையடிப்பாதை வழியாக ஓடிப் போய் ஹனுமாரை வேண்டிக்கொண்டே பயங்கரமான பள்ளிச் சிறைக்கு நான் வருவது.

அரசர் பள்ளிக்கூடம் எடுப்பான கட்டிடம். நான் படித்த கதையில் அதைப்பற்றிச்சொல்லுகிறேன். பள்ளிக்கூடத்திற்கு எதிரே பெரிய சந்தை; அதுதான் எனது சமுதாயநூல். நான் சந் தைச்சாமான் வாங்கிவருவேன். அப்போது நமது பொதுஜனவாழ் வையும் அங்கே ஊன்றிப் பார்ப்பதுண்டு. அடுத்தாற்போல் வைத்திப்பிள்ளை மடம். பள்ளிக்கூடம் அலுத்தபோதெல்லாம் ஸாரி டம் ஒண்ணுக்குக்கேட்டுக்கொண்டு, அங்கே அந்த மடத்தில் துறவி களுடன் பேசிக்கொண்டிருந்து மணியடித்தபிறகுதான் திரும்புவது வழக்கம். இங்கேதான் எனது பரமகுருவைக் கண்டுபிடித்தேன். அவர் என்னை அதோ தெரியும் அகண்ட மைதானத்தைத் தாண்டிக் கொண்டுபோய், சுடுகாட்டிற்கு சற்று தூரத்தில் உள்ள ஒரு மாஞ் சோலையில் வைத்து யோகம் பயிற்றினர்.

அவருடன் நான் செல்லும்போது, "அதோ பாருங்கஸார்! யோகி சுடுகாட்டிற்குப்போகிறான்" என்று என் அருமைத்தோழர் கோள்சொல்லிக்கொடுப்பார்கள். அந்த அகண்டமைதானத்திலே தான் புட்பால் கிரிகெட் ஹாகி, குரோகே பலீன்சடுகுடு, கபாத்து எல்லாம் நடக்கும். அதன் அருகே உள்ள மாஜிஸ்ட்ரேட் கச்சேரி யில் கன்ஸ்டேபிள்கள் "லெப்ட் ரைட்" போடுவார்கள். சிலவேளை சுடுகாட்டுக்கருகே டார்ஜெட்வைத்து, "டம் டம்" என்று துப் பாக்கி சுடுவார்கள். நான் கொஞ்சகாலம் இந்த விளையாட்டுகளில் கலந்து அமளிசெய்தேன். ஆனால், இவற்றையெல்லாம் தாண்டி ஒருமைல்தூரத்தில் உள்ள அந்த அடர்ந்த மாந்தோப்பிலேதான் எனக்கு உயிர். அங்கேதான் எனது ஞானகுரு வந்து சாதனம் பயிற்றினர். அங்கேதான் நான் அந்தராத்மசேதனம் பெற்றேன்.

பள்ளிக்கூடத்திற்கு மேற்கே ஒரு பெரியபொட்டல். மாலை மணியடித்ததும் சிலநாட்கள் அதன் வழியே ஆத்தா ஊருணி என்ற அழகான தாமரைக்குளத்திற்கு ஆவலாக ஓடுவேன். அங்கே தான் எனது தமிழாசிரியர் தெய்வசிகாமணி ஐயர் வந்திருப்பார்; அந்த ஊருணிக்கரையில் பெரிய அரசமரம் உண்டு. அதுதான் எனது கலாநிலயம். அதிகாலையில் தாமரைக்குளத்திற்கு வந்து குளித்து, அந்த அரசடியில் சூரியோதயத்தைப்பார்த்து ஜபம் செய்வேன். சிலநாட்கள் எங்கள் வீட்டு வேட்டி துணிகளையெல்லாம் சுமந்துவந்து ஆத்தா ஊருணியில் உவர்மண்போட்டுத் துவைத்து வெளுத்து உலர்த்திக்கொண்டுபோவேன். "பலே வண்ணான்" என்று எனக்குப்பட்டம் கிடைக்கும். ஆத்தாஊருணியின் கிழக்கே பெரிய கண்மாய். அதைச்சுற்றிப் பசுவயல்கள். அவற்றினூடு ஏகாந்தமாகப் பாடித்திரிவது என் இன்பம். சிலநாட்கள் அங்கிருந்து நாட்டரசன்கோட்டைவரையில் சென்று, கம்பர் சமாதியில் இராமாயணம் படித்துவருவதும் உண்டு.

ஆத்தாஊருணியிலிருந்து திரும்பும்போது, ஆவாரங்காட்டிற்குச் செல்வேன். அங்கே ஆவாரங்காட்டு துரை என்னை அன்புடன் ஏற்பார். அவர் தாயார் பழையவீரர் கதைகளையெல்லாம் அருமையாகச் சொல்லுவார். அங்கே பல துறவிகளும் வைத்தியர்களும் வருவார்கள். அவர்களால் எனக்கு வைத்தியத்திலும் ரசவாதத்திலும் பரிசயம் ஏற்பட்டது. அதற்குச் சிறிது தள்ளி மற்றோர் அரண்மனையுண்டு. அங்கே குஸ்தி சிலம்பம் வளரிவீசல் எல்லாம் நடக்கும். நானும் கையைக்காலைக்கொஞ்சம் வளைத்துப் பார்த்து வருவேன். துப்பாக்கிப்பயிற்சியும் சிறிது செய்ததுண்டு. அங்கிருந்து சென்று மேளக்கார மாயாண்டியைப்பார்ப்பேன். தவுல் சோணை தகதகதாகிட தகஜம் என்று வெளுத்துவாங்குவான். நான் பாடத்தொடங்குவேன். மாயாண்டி எனது குரலைப் பயிற்றுவார். ஸ்வரஞானம் ஊட்டுவார். அங்கிருந்து மாந்தோப்புகளூடு தர்மராஜாகோயிலுக்கு வருவேன். இது தனியான இடம். கடவுளும் நானுமே; வேறுயாரும் வந்து தொல்லைசெய்யமாட்டார்கள். இங்கே அமைதியாக அமர்ந்து பாட்டெழுதுவேன், அல்லது ஜப தபங்களைச் செய்வேன். அங்கிருந்து தோப்புகள்வழியே வந்தால், பெரிய அரண்மனை காட்சியளிக்கும்.

கௌரிவல்லபத்தேவர் அரண்மனைதான் சிவகங்கையின் அழகை எடுத்துக் காட்டுவது. அதுவே எங்கள்ஊரின் வீரக்கோயில்; சரித்திரமாளிகை. அங்கே அந்தக்காலம் வீரவேலைகள் பலமாகநடந்தன. அங்கே ஆயுதச்சாலை, தர்பார் ஹால் மணிக்கூண்டு, வித்வத்ஸபை முதலியவையெல்லாம் ஆவேசமளிக்கும் இடங்கள். பெரிய அரண்மனையில் காலைமாலை அடிக்கும் நகரா எங்கள் வீட்டிற்குக் கேட்கும். அப்போதெல்லாம் "முரசே! உன் ஒலியில் உரிமைவீறு இல்லையே!" என்று வருந்துவேன். அரண்மனை முழுதும் நான் சுற்றிப் பார்க்கப் பல சந்தர்ப்பங்கள் வாய்ந்தன. ஏனெனில் வேலுத்துரை எனது பள்ளித்தோழர்.

அரண்மனை மதிலைச்சுற்றி நாற்புறமும் சிறிய அரண்மனைகள் உண்டு. குழந்தைமகாராசா அரண்மனை, பெரியசாமித்தேவர் அரண்மனை, சிங்கத்தேவர் அரண்மனை முதலியன. அவையெல்லாம் புலமைநிலையங்கள். பெரியசாமித்தேவர் மாளிகைத் திண்ணையில் புலவர் கூடி உரையாடுவார்கள். அந்தத் தமிழ்விருந்தை நான் அள்ளி அள்ளிப் பருகுவதுண்டு. எனது இலக்கியங்களும் அங்கே அரங்கேறியதுண்டு. குழந்தைமகாராசா அரண்மனைக்கருகேதான் நாடகக்கொட்டகை. நாடகப்பைத்தியம் பிடித்த எனக்கு எப்படியாவது நடிகர் நட்புக்கிடைக்கும். நல்ல நாடகங்களைப் பார்ப்பதுடன் நானும் பெரிய நடிகனாகவேண்டுமென்று கனவுகாண்பேன். கனவில் நான் ஒரு ஜகன்மோகன மனோரஞ்சித நடனனர்த்தினி ஆய்விடுவதும் உண்டு, அந்தக்கதை பிறகு.

அரண்மனைக்குத் தெற்கே மானமதுரை ரஸ்தாவை நோக்குவோம்...எங்கும் கடைகள்...வாணிகப்பெருக்கம். அந்தப்பக்கமே நவாபுபடையும் கும்பினிபடைகளும் வந்து கொள்ளையடித்தன. அப்போது மதம்மாறிய தமிழர் இன்னும் லப்பைகளாக இருக்கிறார்கள். பள்ளிவாசலிலிருந்து "லா இலாஹி" வரும். அந்தப்பள்ளிவாசலுக்கு வெள்ளிக்கிழமை நண்பர் மதார்ஸாவுடன் சென்று குத்பா ஓதக் கேட்பேன். பெரும்பாலும் நாடகக் குத்தகைக்காரர் மதார்ஸா உறவினரே; நானும் மதார்ஸாவுடன் கொட்டகைக்குள் நுழைந்தால், யாரும் தடைசெய்யமாட்டார்கள். தமிழ் இஸ்லாமியர் வாழை வியாபாரம், பலசரக்குக்கடை, தகரக்கடை கசாப்புக்கடை, பாசிக்கடை, ஊசிக்கடைகள்வைத்து நல்ல பொருட்செழிப்படைந்தனர்.கடையில் அவர்களுடன் சீறப்புராணமும் மஸ்தான் பாடலும் இருக்கும்.

கடைவீதியின் கும்பலைத்தாண்டி மேற்கே நீளச்சென்றால் எல்லாரும் தொழிலாளர். சிலர் பொற்கலம் செய்பவர்கள்; சிலர் மளிகைவாணிகர். எங்கள் ஆசிரியர் சோக்கலிங்கம் ஆசாரியார் முதல் எனது பள்ளித்தோழர் ஆறுமுகம் செட்டியார் வரையில் பலரை எனக்குத்தெரியும். மேலும் அந்தத் தெருவிலேதான் தமிழ் ஆசிரியர் கணபதியாபிள்ளை வசித்தார். எனது நாடகங்களையும் பாடல்களையும் அவரிடம் படித்துக்காட்ட அங்கே செல்வதுண்டு. இந்தத் தெருவிலிருந்து திரும்பும் வழியில் தேவாரம் திருப்புகழ் திருவாசகம் சித்தர் பாடல்கள் ஒலித்துக்கொண்டிருக்கும். இடையே சில கிறிஸ்துவர் வீடுகள் உண்டு; அங்கே ஒரு ஆரம்பப் பாடசாலை இருந்தது. அப்பாடசாலையில் இடைக்காட்டூர் பாதிரி வந்து சுவிசேஷம் போதித்தார். அவரே எனக்கு முதலில் மத்தாய் சுவிசேஷம் தந்து "தம்பி இதுதான் சத்திய வேதம், படி" என்றார்.

இப்படியே நான் ஊரைச்சுற்றிக் கலைத்தேன் உண்ணும் வண்டுபோலத் திரிந்தேன். இப்படித் திரிந்தும் என்மனம் அமைதியடையவில்லை. அது எதையோ தேடித்திரிந்தது. இன்னதென்று எனக்கே தெரியாது. இறைவன் திருவருளே அதையும் படிப்படியாகக் காட்டி நடத்தியது.

[அடுத்த இதழில்:— கவியோகி தமது பிள்ளை விளையாட்டை ரசமாகச் சொல்லுகிறார்.]

எதற்கு வெற்றி?

பல வருஷங்களுக்குப் பிறகு அன்றுதான் என்பால்ய சினேகிதியான சியாமளா என்னைப் பார்க்கவந்திருந்தாள். நானும் அவளும் பல விஷயங்களைப் பற்றிப் பேசிக்கொண்டிருந்தோம்.

"என் லலிதா! உனக்கு எப்போது விவாகம் நடந்தது? உன் தாயார் எப்போது இறந்தாள்? கணவருடன் சந்தோஷமாகக் குடும்பம் நடத்துகிறாயா?" என்றாள் சியாமளா.

"படவேண்டிய கஷ்டமெல்லாம் பட்டுவிட்டேன். இப்போதுதான் கஷ்டம் விடிந்து கொஞ்சம் சந்தோஷமாகஇருக்கிறேன்" என்றேன்....எனக்கும் நான் அனுபவித்த துன்பங்களை யாரிடமாவது சொல்லி ஆறுதல் அடைந்தால் தேவலை என்று தோன்றியதால் சியாமளாவிடம் சொல்ல ஆரம்பித்தேன்.

"உன் தகப்பனாருக்கு வேறு ஊருக்கு மாற்றலாகி நீ போன பின்பு என் தாயார் கடுமையான ஜுரத்தினால் இறந்துவிட்டாள். என் தகப்பனார் என்னைக் காப்பாற்றும்பொருட்டு மறுவிவாகம் செய்துகொண்டார். என் சித்தி மிகவும் பொல்லாதவள். அவள் வந்ததிலிருந்து என்னை மிகவும் கொடுமைப்படுத்தி, அப்பாவிடமும் நான் செய்யாத காரியத்தை எல்லாம் செய்ததாக ஒன்றுக்குப் பத்தாகச் சொல்லி என்னை வையச்செய்து, தானும் வைவாள்.

'கல்யாணமாகி கணவன்வீட்டிற்குச் சென்றுவிட்டால் பிறகு சித்தியின் பிடுங்கல் ஒன்றும் இராது' என்ற எண்ணத்தில் எல்லாவற்றையும் சகித்துவந்தேன்.

எனக்கு வயதுவந்துவிட்டதால் வரன்தேட ஆரம்பித்தார் என் அப்பா. ஆனால், என்னைப் பார்க்கவந்த ஒரு பிள்ளையாவது என்னை மணந்துகொள்ள முன்வரவில்லை. ஒருவர் 'பெண் அட்டைக்கரி'...என்றும், இன்னொருவர் 'மிகவும் விகாரம்'...என்றும் சொல்லி என்னைத் திரஸ்கரித்துவிட்டார்கள்.

என் சித்தியின் மாமா மிகவும் ஏழையாக இருந்தார். ஆகையால், அவரிடம் 'வரதக்ஷிணை நிறைய தருகிறேன்' என்று சொல்லி, அவருடைய பிள்ளையான கோபாலனை என்னை வந்துபார்க்கும்படி என் தகப்பனார் கேட்டுக்கொண்டார். மாமாவும் கோபாலும் என்னைப் பார்த்துவிட்டு 'இந்தப் பெண்ணை பண்ணிக்கொள்வதைவிட பிரம்மச்சாரியாகவே இருந்துவிடலாம்' என்று சொல்லிவிட்டு மறுவண்டிக்கே புறப்பட்டுப்போய்விட்டார்கள்.

அவர்களும் என்னைப் பிடிக்கவில்லை என்றதும், அப்பா என்ன செய்வதென்றே புரியாமல் நிலைகலங்கிவிட்டார். என் நிலைமையோ கேட்கவே வேண்டாம். "இந்த கோரஸ்வரூபத்தை எவன் பண்ணிக்கொள்ள சம்மதிக்கப்போகிறான்? நம்மிடமிருந்தே பிராணனை வாங்க வேண்டியதுதான்" என்று சித்தி சதா இடித்துக்காட்ட முற்பட்டாள்.

* வெள்ளிவிழா சிறுகதைப்போட்டிக்கு வந்த கதைகளுள் பிரசுரத்திற்குத் தகுதியெனத் தேர்ந்தெடுக்கப்பட்டவைகளுள் 8-வது கதை இது.

என் அப்பா யோசனை செய்துசெய்துபார்த்துவிட்டு, கோபரின் தகப்பனரிடம் மறுபடியும்போய் 'கையில் மூவாயிரம் ரூபாய் தந்துவிடுகிறேன். பையனுக்கு நானே நல்லவேலை தேடித் தருகிறேன்' என்று மிகவும் இதமாகச் சொன்னதின்மேல், பணத்தில் மிகவும் ஆசைகொண்ட அவர், தன்பிள்ளையை எப்படியாவது சரிப்படுத்திக் கல்யாணத்திற்கு சம்மதிக்கச் செய்வதாகச் சொல்லி, அப்பாவிடமிருந்து பணத்தையும் வாங்கிக்கொண்டார்.

சந்தோஷத்துடன் திரும்பிய அப்பா கல்யாணத்திற்கான ஏற்பாடுகளைச் செய்வதில் முனைந்தார். சித்தியின் மாமா கல்யாணத்திற்கு அவர்கள்வரும் தேதியைக்குறிப்பிட்டு, பிள்ளை ஒரேயடியாக என்னை மணந்துகொள்ள மறுத்துவிட்டதாகவும் தன்னுடைய போதனையினுலும் கையில் ரொக்கமாகப் பணம் வருகிறதே என்ற எண்ணத்தோடும் அரைமனதாக என்னை மணந்துகொள்ளச் சம்மதித்திருப்பதாகவும் எழுதியிருந்தார்.

குறிப்பிட்ட முகூர்த்தத்தில் எனக்கு விவாகமும் நடந்தது. கல்யாணத்திற்கு வந்திருந்தவர்கள் எல்லோரும் "பிள்ளை மன்மதன் மாதிரி இருக்கிறன். பெண் மரக்குரங்குமாதிரி இருக்கிறது! இவளை மணந்துகொள்ள எப்படித்தான் சம்மதித்தானே!" என்று குசமுச என்று பேசுவது என் காதில் விழுந்தும்,முதலில் பார்த்தவர்கள் எல்லோரும் என்னைப் பிடிக்கவில்லை என்று போனதால் இவராவது என்னை மணந்துகொண்டாரே என்ற சந்தோஷத்தில் மூழ்கினேன்.

என் கணவர் ஊருக்குப் புறப்படுவதற்குமுன் அவரோடு ஒரு வார்த்தையாவது பேசவேண்டுமென்று என் பெண்ணுள்ளம் துடித்தது. என்னை நன்ருக அலங்கரித்துக்கொண்டு காப்பி டிபனைக் கையில எடுத்துக்கொண்டு அவர் இருக்கும் ரூமுக்குச் சென்றேன். ஏதோ பத்திரிகை ஒன்றைப் படித்துக்கொண்டிருந்த அவர் என்னைக் கண்டதும் எரித்துவிடுபவர்போல் பார்த்துவிட்டு, மறுபடியும் பேப்பரைப் படிக்கத் தொடங்கினர்.

கொஞ்சநாழி நானும் ஒன்றும் பேசாமல் நின்றுபார்த்தேன். பிறகு, "காப்பியும் டிபனும் சாப்பிடுங்கள்" என்று பக்கத்தில் இருந்த மேஜையின்மேல் வைத்தேன். சட்டென்று திரும்பிய அவர் "இந்த டிபனை நீ கொண்டுவரவில்லை என்று நான் அழுதேனுக்கும். வைத்துவிட்டுப் போ அப்படியே" என்ருர் கடுமையாக.

அதற்குமேல் என்னல் அங்கு நிற்கமுடியவில்லை. துக்கம் தொண்டையை அடைக்க உள்ளே சென்று என்னைக் குரூபியாகப் படைத்த தெய்வத்தை மனமாரச்சபித்து ஆத்திரம்தீர அழுதேன். என் கணவரும் மற்றவர்களும் ஊருக்குப் புறப்பட்டார்கள்.

தீபாவளி முதலான மற்ற பண்டிகைகளுக்கு அவரை வரச் சொல்லி என் தகப்பனர் கடிதம் போட்டதற்கு "உங்கள் பெண்ணை மணந்துகொண்ட எனக்கு தீபாவளி ஒனறுதான் பாக்கி. என்னல் வரமுடியாது" என்று எழுதிவிட்டார்.

கணவர் அப்படியிருந்தும், என் தகப்பனர், என்மேல் உள்ள பாசத்தினல் தன்னுடைய சிநேகிதரிடம்சொல்லி அவருக்கு பம்பாயில் ஒரு வேலையும் செய்துவைத்தார்.

நாட்கள் கழிந்தன. இதற்கிடையில் 2 வருஷகாலம் ஓடி மறைந்தது. என்னை அவரிடம் அழைத்துப்போகும்படி நான் எழுதிய ஒவ்வொரு கடிதத்திற்கும் கல்லுகூடக் கரைந்துவிடும்; ஆனால், என் கணவரின் கடின இதயத்தை நான் எழுதிய அவ்வள வும் இன்னும் கல்லாய்ச்செய்துவிட்டது. நான் வேண்டாத தெய் வத்தை எல்லாம் வேண்டி அர்தாங்க பக்தியுடன் தேவியைப் பூஜித்துவந்தேன். என் தகப்பனாரே என் கணவரிடம் நேரில் ரொம்ப மன்றாடிக் கடைசியில் என்னை அவரிடம் கொண்டுவிட்டுத் திரும்பினார். நான் பம்பாயில் குடும்பம் நடத்த ஆரம்பித்தேன்.

நான் அவரிடம் சென்றதிலிருந்தே என்னை மிகவும் கொடுமை யாக நடத்தவேணுமென்றே கங்கணம் கட்டிக்கொண்டுவிட்டார் என் கணவர். நான் அழகில்லாவிட்டாலும் சமையல் மிகவும் நன்றாகச் செய்வேன். என் கணவருக்குப் பிடித்தமான சமையலை மிகவும் ருசியாகச்செய்து அன்புடன் அவருக்குப்போடுவேன். ஆனால், அதற்காக அவரிடமிருந்து எனக்குக்கிடைக்கும் வெகுமதி என்ன வென்றால் "உன் கையால் தொட்டதைச் சாப்பிடக்கூட எனக்குப் பிடிக்கவில்லை. மூதேவி! சமையல்கூட வழியாகச் செய்யத்தெரியவில்லை. என் கண்முன் நில்லாமல் எங்கேயாவது மறைவான இடத்திற்குப்போய்விடு!" என்பார்.

சியாமளா! நீயும் பெண் ஜன்மம்தான் எடுத்திருக்கிறாய். ஆதியில் சித்தியிடம் ஹிம்சைப்பட்டுக் கணவரிடமாவது சந்தோஷ மாக இருக்கலாம் என்று நினைத்துக் கோட்டைகட்டிவந்த எனக்கு என் கணவரின் வார்த்தையும் நடத்தையும் இதயத்தை எத்தனை புண் படுத்தியிருக்கும் என்பதை நீயே யோசித்துப்பார்! பெண்களின் கஷ்டங்கள் பெண்களுக்குத்தானே தெரியும்! மனதைச் சிரமப்பட்டு தேற்றிக்கொண்டு அவர் ஆபீஸிற்குப் போகவேண்டியதற்காக உடைகளை எடுத்துவைப்பேன்; அங்கே வந்தாலும், "உன் கரிக்கை யால் வெள்ளையான துணிகளைத் தொடாதே, உன் உடம்பில் இருக் கும் கரி அதற்கும் வந்துவிடப்போகிறது" என்று எரிந்துவிழுவார்.

"உலகில் எல்லாரும் அழகாகவே இருந்துவிடுகிறார்களா? என்னைவிட இன்னும் குரூபியாக இருக்கும் எத்தனையோ பெண் மணிகள் தங்கள் கணவன்மாரோடு ஆனந்தவாழ்க்கை நடத்த வில்லையா? நான் செய்த பாவத்தின் பயனாக இப்பொழுது அனு பவிக்கிறேன்" என்று மனத்தைச் சமதானப்படுத்திக்கொள்வேன்.

பம்பாயில் சாயங்கிரம் ஆனதும் தம்பதிகள் சந்தோஷமாக வெளியில் கிளம்புவதைப் பார்த்தால், ஒருநாளாவது எனக்கும் கண வருடன் வெளியில் சென்றுவரவேண்டுமென்று மிகவும் ஆவலாக இருக்கும். ஏதாவது இவரிடம் சொன்னால் எங்கே என்னை அறைந்து விடுவாரோ என்றபயம்; மொத்தத்தில் என்னை ஒரு வேலைக் காரிக்கும் கேவலமாகவேதான் அவர் மதித்து நடத்திவந்தார்.

ஆனால், சியாமளா! இதில் ஒருவிஷயம் குறிப்பிட விரும்பு கிறேன். என்னை அவர் அவ்வளவு கேவலமாக நடத்திக் கொடு மைப் படுத்தியும், என் பேதையுள்ளம் அவரிடம் அளவில்லாத அன்பையே வைத்திருந்தது. அவரிடம் எனக்குக் கொஞ்சமாவது

கோபமோ அல்லது வெறுப்போ இதுவரையில் ஏற்பட்டதேயில்லை. அதற்குப் பதிலாக அவரிடம் எனக்கு இரக்கமே ஏற்பட்டது. 'அவர் மனத்திற்குப் பிடித்தமான ஒரு பெண்ணை மணந்துகொள்ளாததினால்தானே இப்படிச் சிறுவயதிலேயே சந்நியாசிபோல எதிலும் வெறுப்புடன் இருக்கிறார். அழகாக ஒருத்தி வந்திருந்தால் அவர் வாழ்க்கை எத்தனை ஆனந்தமாக இருக்கும்' என்று நினைத்து அவரிடம் பச்சாத்தாபம் அடைவேன்.

பெண்ஜன்மம் எடுத்தாகிவிட்டது. அதற்கு முக்கிய லக்ஷணம் பொறுமைதான்; ஆகையால், அவர் என்னை எத்தனைபாடுபடுத்தியும் எல்லாவற்றையும் பொறுமையுடனேயே சகித்துப் பெண்மையின் மேன்மையை அவரே மெச்சும்படிச்செய்து அவருடைய அன்பை எப்படியேனும் பெற்றுவிடவேணுமென்று மிகவும் அரும்பாடு பட்டேன். எத்தனையோதரம் உடம்பு வீங்கும்படியாக அடித்து இருக்கிறார். கேட்டமாத்திரத்திலேயே உயிரை விட்டுவிடும்படியான வார்த்தைகளை எத்தனையோ நாட்களில் கொட்டியிருக்கிறார்.

என்னை இவர் இப்படிக் கடுமையாக நடத்துவதைக்கண்டு என்னிடம் உண்மையான அனுதாபம் காட்டும் ஆத்மாவும் ஒன்று இருந்தது. அவர்தான் என் கணவருடைய ஆப்த சிநேகிதரான ரமணி என்பவர். அவர் அடிக்கடி 'கோபால்! நீ செய்வது சுத்த தவறான காரியம். கடவுள் அவளுக்கு அழகைக் கொடுக்காவிட்டாலும் அமிர்தமான குணங்களைக்கொடுத்திருக்கிறார்; நீ இவ்வளவு பாடுபடுத்தியும் அவள் வாய்திறந்து ஏதாவது சொல்லுகிறாளா? உனக்குச் செய்யும் சிசுருஷைகளைத்தான் ஏதாவது குறைக்கிறாளா? சதா சிரித்த முகத்துடன் எல்லாவற்றையும் பொறுத்துக்கொண்டு இருக்கிறாள். இவ்வளவு சாந்தகுணம் படைத்த பெண் கிடைப்பது அரிது; வீணாய் அவளைக் கொடுமைப்படுத்தாதே' என்று அடிக்கடி புத்தி சொல்வார்.

இதற்கிடையில் ஒருவருஷம் கடந்துவிட்டது. அன்று ஏதோ மிகவும் அபூர்வமான சினிமா வந்திருப்பதாகச் சொல்லித் திரள்திரளாக ஜனங்கள் படத்தைப் பார்க்கப் போய்க்கொண்டிருந்தார்கள். எனக்கும் பார்க்கவேண்டுமென்று ஆசையாக இருந்ததால் அவரிடம், "ஏதோ புதிய சினிமா வந்திருக்கிறதாம்; என்னை அழைத்துப்போகிறீர்களா?" என்றேன் தயக்கத்துடன். "உன்னை என்னுடன் வெளியில் அழைத்துப்போக வெட்கமாக இருக்கிறது. தயவுசெய்து என் எதிரில் வராமலிரேன்" என்றார் சற்றுதணிவாக.

அன்று ஏனோ என்னையும்மீறி நான்கு வார்த்தைகள் அவரிடம் சொல்லிவிட்டேன். 'எனக்கு அழகில்லாவிட்டால் அழகாக இருப்பவளைப்பார்த்து மணந்துகொள்வதுதானே! கலியாணம் ஆன பிறகு என்னை ஏன் ஹிம்சிக்கவேணும்?' என்றேன் துடுக்காக.

மறுகணமே பளீர் என்று நாலு அறைஅறைந்துவிட்டு "உன் அழகுக்கு வாய்த்துடுக்கு வேறு! கட்டாயம் வேறுகலியாணம்தான் செய்துகொள்ளப்போகிறேன்" என்று ஆத்திரத்துடன் இரைந்து விட்டு வெளியே சென்றுவிட்டார்.

மறுநாள் சாயங்காலம் என் தகப்பனுர் திடீரென்று வந்ததைக் கண்டதும் எனக்கு ஆச்சரியம் தாங்கமுடியவில்லை. "என்ன அப்பா! கடிதம்கூடப்போடாமல் திடீரென்று வந்தீர்கள்?" என்றேன் ஆச்சரியத்துடன். "உன் கணவரிடமிருந்து உன்னை அழைத்துப் போகும்படி தந்தி வந்தது. உடனே புறப்பட்டுவந்தேன்!" என்ருர் அப்பா. இதைக்கேட்டதும் அப்படியே திகிலடைந்துவிட்டேன்.

பிறகு, நான் கணவரிடம் வந்திருந்து பட்டகஷ்டங்கள் ஒவ்வொன்றையும் சொல்லிக் கண்ணீர்விட்டேன். அதற்குள் என் கணவரும் வந்துவிட்டார். "உங்கள் பெண்ணை நீங்கள் தயவு செய்து அழைத்துக்கொண்டுபோய்விடுங்கள்" என்ருர். என் தகப்பனுர் எவ்வளவோ நயமாகப் பேசியும் என்கணவர் பிடித்த பிடியை விடவில்லை.

'நான் உங்கள் காலடியிலிருந்து உயிரைவிட்டாலும் விடுவேனே தவிர, ஊருக்குப் போகமாட்டேன்' என்று எவ்வளவோ நானும் சொல்லிப்பார்த்தேன். ஆனல், ஒன்றும் பயனில்லை.

ரமணிக்கு விஷயம் தெரிந்ததும் அவரும் 'ஊருக்கு அனுப்பாதே!' என்று இவரை ஆனவரையிலும் தடுத்துப்பார்த்தார். ஆனல், பயன் ஒன்றமில்லை.

நான் ரமணியிடம் "உங்களை என் சகோதரரைப்போல் எண்ணிச்சொல்லுகிறேன். நான் ஊருக்குச்சென்றபிறகு அவருடைய க்ஷேமத்திற்கும், நடத்தையில் எப்படியிருக்கிருர் என்பதற்கும் நீங்கள் கடிதம் போடவேண்டும்" என்று கேட்டுக்கொண்டு, அவருடைய மனப்பூர்வமான நல்வாக்கையும் பெற்றுக்கொண்டு, என் தகப்பனுருடன் ஊருக்குப் புறப்பட்டுவிட்டேன்.

நான் ஊருக்கு வந்துசேர்ந்ததும் என்னைக் கண்ட சித்தி கன்னத்தில் கையை வைத்துக்கொண்டு "எனக்கு அப்பொழுதே தெரியும். இவள்வாயை வைத்துக்கொண்டு ஒரு இடத்திலும் இருந்து வாழமாட்டாள் என்று! சவுகை சொல்லிக்கொள்ளவந்துவிட்டாயாக்கும்?" என்ருள்.

நான் ஊருக்கு வந்த கொஞ்சநாளிலேயே இனி சித்தியிடம் இருப்பதென்பது சாத்தியமாகாது என்று தெரிந்துகொண்டுவிட்டேன். மேலும் வீட்டிலேயும் என் கணவருடைய நினைவு சதா வந்து என்னை வேதனைப்படுத்திக்கொண்டே இருந்ததால் நர்ஸ் வேலை செய்தாலாவது மனதுக்கும் கொஞ்சம் நிம்மதி ஏற்படும்; ஜீவனத்திற்கும் பிறர் கையை எதிர்பார்க்கவேண்டாம் என்ற நோக்கத்துடனும் அப்பாவிடம் விஷயத்தைச் சொன்னேன்.

நான் ஸ்கூல்பைனல்வரை படித்திருந்ததால் அப்பா என்னை உடனேயே ஆஸ்பத்திரி நர்ஸ் வேலைக்கு சிரமமில்லாமல் படிக்க வைத்துவிட்டார். நானும் சீக்கிரத்திலேயே எல்லாவற்றையும் தெரிந்துகொண்டு அந்த ஊர் பிரதானஆஸ்பத்திரியில் நர்ஸாக அமர்ந்தேன். நோயாளிகளுக்குத் தொண்டுபுரிவதினல் என் மனப்புண் கொஞ்சம் ஆருதா என்று எண்ணி என் முழு கவனத்தையும் நோயாளிகளிடமே செலுத்தி நன்ருகக் கவனித்து அவர்களிடம் மிகவும் அன்புடன் நடந்துவந்ததால் அந்த ஆஸ்பத்திரியில் எல்லோருக்

குமே என்னிடம் நல்ல அபிப்பிராயம் ஏற்பட்டுவிட்டது. ஆனால், என் கணவரை என்னால் ஒரு நிமிஷமாவது மறக்கமுடியவில்லை.

காலசக்கரம் சுழன்று ஐந்து வருடங்கள் கடந்தன. அன்று திங்கள்கிழமை, வழக்கம்போல் என் வார்டில் உள்ள நோயாளிகளைக் கவனித்துவிட்டு வீட்டுக்குத் திரும்பினேன். அங்கே நான் கண்ட காட்சி என்னை அப்படியே திகைக்கவைத்துவிட்டது. யார் அவர்? இரவிலும் பகலிலும் எந்தநேரத்திலும் சதா என் இதயத்தில் அமர்ந்திருக்கும் என் அருமைக் கணவர்தான் அவர். சந்தேகமே இல்லை. என் வரவுக்காகத் திண்ணையில் உட்கார்ந்து காத்துக்கொண்டிருந்தார். திடீரென்று அவரைப்பார்த்த சந்தோஷத்தில் எனக்கு என்ன பேசுவதென்றே தோன்றவில்லை.

"லலிதா! நான் உன்னைக் கொடுமைப்படுத்தியதற்காக மிகவும் வருந்துகிறேன். நடந்துபோன விஷயங்களை மறந்து என்னை மன்னித்து நீ என்னுடன் குடும்பம்நடத்த வந்துவிடு. உன்னை அழைத்துப் போகத்தான் வந்தேன்" என்றார். எனக்கு வியப்பும் திகைப்பும் தாங்கமுடியவில்லை. அவரை உள்ளே அழைத்துச்சென்று "என்னிடம் தங்களுக்கு இவ்வளவு கருணைவரக் காரணம் என்ன?" என்றேன் பணிவுடன்.

"லலிதா! நான் மஹாபாபி. உன் குணத்தின் அருமை தெரியாமல் உன்னைப் படாதபாடுபடுத்தித் துரத்தியபின்புதான் என் நண்பனான ரமணிக்கு விவாகம் நடந்தது. அவன் மனைவி மிகவும் ரூபவதியாக இருந்தாள். எனக்கும் அவளைப்போல் ரூபவதியாக ஒருபெண் கிடைத்திருக்கக்கூடாதா என்று அவளைப்பார்க்கும் போதெல்லாம் எண்ணுவேன். ஆனால், அவள்வந்து கொஞ்சநாட்களுக்குள்ளேயே ரமணிக்கும் அவன் மனைவிக்கும் மனக்கசப்பு ஏற்பட ஆரம்பித்துவிட்டது. தான்மிகவும் அழகாக இருக்கிறோம் என்ற கர்வத்தில் ரமணிக்கு அடங்காமல் அவனுக்கு ஒன்றுக்குப் பத்தாக பதில்சொல்லிக்கொண்டு நாளடைவில் அவனையே மதிக்காமல் இருக்க ஆரம்பித்துவிட்டாள் அவன் மனைவி.

எப்பொழுதும் அடக்கத்தையும் பொறுமையையுமே விரும்பும் ரமணிக்கு, மனைவியின் குணம் கொஞ்சமேனும் பிடிக்கவில்லை. அவன் என்னிடம் அடிக்கடி, "விலையிலா மாணிக்கத்தைத் தொலைத்துவிட்டாய். உன் மனைவியைப்போல குணமுள்ளபெண் இந்த உலகில் கிடைக்கப்போகிறாளா? அழகு அழகென்றாயே! இப்போது அழகைப் பண்ணிக்கொண்டு நான் படும் அவதியைப் பார்" என்று என்னிடம் திரும்பத்திரும்ப சொல்லுவான்.

ரமணியின் மனைவியுடைய குணத்தைப் பார்த்தபின்புதான் உன்னுடைய அருமையானகுணம் எனக்கு கொஞ்சம்கொஞ்சமாகத் தெரியவந்தது. ரமணியும் அடிக்கடி உன்னை அழைத்துவந்து குடும்பம் நடத்தும்படி தூண்டி, உன் மேன்மையான குணத்தை என்மனதில் படும்படிச் செய்துவிட்டான். எனக்கும் நாளடைவில் அழகில் இருந்த மோகமெல்லாம் போய் உன்னை அழைத்துவந்து குடும்பம் நடத்தவேணுமென்ற ஆசை உதித்துவிட்டது. பிறகு எல்லோருமாக பம்பாய் வந்தோம்.

"திருக்கோளூர்ப் பெண்பிள்ளை"

(சென்ற இதழ் தொடர்ச்சி)

1. அழைத்துவருகிறே னென்றேனோ அக்ரூரரைப்போலே?

அக்ரூரரின் உள்ளத்தில் கண்ணனைக் காணவேண்டுமென்கிற ஆசைவெள்ளம் கரைகடந்தோடி அலைமோதுகின்றது. ஆனால், கம்ச பயமே கண்ணனைக் காண இயலாமல் தடுக்கிறது. இவ்வமயத்தில் கம்சனே அக்ரூரரை யழைத்து "அக்ரூரரே! கண்ணனை அழைத்து வருகிறீரா? நான் தனுர்யாகம் புரியப்போகின்றேன்" என்றதும் அக்ரூரரின் உள்ளம் மட்டற்ற மகிழ்ச்சியால் மலர்ந்தது. அவர் வாய் "இதோ! அழைத்துவருகிறேன்! இதோ அழைத்துவருகிறேன்" என்கிறது. "மஹாராஜா! தங்களுக்கு இத்தகைய மதி யுதித்ததற்கு அநேகம்கோடி வந்தனம்" என்றார். உடனே வாசலில் ரதம் சித்த மாயிற்று. ஒரே குதி குதித்து ரதத்தில் ஆரோகணித்தார்.

"கம்ஸன் சோறுண்டு வளர்ந்த எனக்கும் இங்ஙனேஓர் நல் விடிவு நேர்படுவதே!" என்று மகிழ்கிறார். அவர்மனம் அவரையும் அறியாமல் கம்சனைப்போற்றியது.

கண்ணனது இல்லத்தில் புகுந்தார். இராமகிருஷ்ணர்களைக் கண்டார். கண்கொள்ளாக்காட்சி கண்டு, வேரற்ற மரம்போல் அவர்களது திருவடிகளில் பணிந்தார்.

"கிருஷ்ணா! நீயறியாததா? சாது ஸஜ்ஜனங்களை நலிவுறுத்தும் கம்சன் தனுர்யாகம் புரியப்போகிறான். தனக்கு மரணத் தானே தேடிக்கொள்கிறான். இதுவே தக்க தருணம், கம்சனை மாய்ப்பதற்கும், தாய்தந்தையரின் அடிமைத்தளையை யகற்றுவதற்கும்; வாரும், சுவாமீ! தாமதம் வேண்டாம். கம்சன் என்னை அழைத்து, 'நான் தநுர் யாகம் புரியப்போகிறேன்; நீர் சென்று என்னருமை மருமக்கள்மாரை உடனே யழைத்துவாரும்!' என்றான். 'இதோ! அழைத்துவருகிறேன்! இதோ அழைத்து வருகிறேன்' என்றேன். உடனே ஓடோடியும் இங்குவந்தேன். தாமதமின்றி எழுந்தருள வேணும்இந்த ரதத்தின்மேல்" என்று இராமகிருஷ்ணர்களை மதுரா புரிக்கு அழைத்துச்சென்று கம்ச சம்ஹாரம் செய்துவைத்து மாதாபிதாக்களின் அடிமைத் தளையையகற்றி, உக்ரசேனமகாராஜருக்குப் பட்டாபிஷேகம் செய்துவைத்தார்.

இத்தகைய ப்ரேமைவாய்ந்த அக்ரூரரைப்போல் அழைத்து வருகிறேனென்றேனோ—என்றாள் திருக்கோளூர்ப்பெண்மணி.

இப்போது எங்களைவிட இன்பமான வாழ்க்கை ஒருவருமே நடத்தமுடியாதென்றபடி நாங்கள் இருக்கிறோம். எங்களை இனி பிரிக்காமல் இருப்பதற்கு ராமு வேறு பிறந்துவிட்டான். போதுமா, சியாமளா! என்கதை?" என்றேன்.

அன்பின் வெற்றி என்று அவள் சொல்லிக்கொண்டிருக்கையில், வெளியே சென்றிருந்த என் கணவர் "லலிதா! இன்றுபுதிய சினிமா வந்திருக்கிறது. சீக்கிரமாக டிரஸ் செய்துகொண்டு கிளம்பு என்றவாறு வந்தார்.

வீதிகள்தோறும் மாவிலைத்தோரணம், பூர்ணகும்பம். மங்கள வோசையுடன் வரவேற்கும் மக்கள் ஆவலைப்பூர்த்திசெய்ய வந்து விட்டார் ஸ்ரீ கண்ணபிரான். "அதோவருகிறார் ஸ்ரீ கிருஷ்ணன்! வருகிறார் பாண்டவதூதன்! வந்துவிட்டார் கிருஷ்ணபரமாத்மா!" என்கிற பேச்சுக்கள் அண்டத்தை யளாவுகின்றன. இத்தகைய பக்தர்கள்நடுவில் வந்துவிட்டார் கோபாலகிருஷ்ணன்.

'கிருஷ்ணா! என்வீட்டுக்கு வா' என்றார்கள் ஒவ்வொருவரும். 'கண்ணா! இது எனது மனைவியின் மன்றம்; எள்ள! எள்ள! கோபாலா!' என்றொருவர். 'இது என் பவனம்' என்றும், 'கோவிந்தா! இது என் நிலயம்' என்றும்; 'இது பீஷ்மர் மாளிகை, இது துரியோதனன் அரண்மனை; இது திருதராஷ்டிரன் கூடம்; இது த்ரோணரின் மாடம்; இது காந்தாரியின் கோபுரம்' என்றெல்லாம் பேசுகிறார்கள்.

இவற்றுக்குச் செவிசாய்த்தவண்ணம் கண்ணபிரான் வீதியின் அழகைப்பார்த்துக்கொண்டே போகின்றார். "ஆ! ஆ! இத்தகைய பட்டணத்தில் நமக்கென ஓர் இல்லம் இல்லாமல்போய்விட்டதே! எங்குகிடைக்கும் இனி' என்று மாயாவி கண்ணனின் உள்ளம் ஏங்கியது. உடன் வருபவரோடு கூறியும்விட்டார். பலனில்லை. இன்னும் சற்று தூரம் செல்கையில் விதுரர் கிரகம் வந்தது. மாயாவி பார்த்தார். "இது யாருடைய கிரகம்" என்றார். உடனே விதுரர் "இது தேவரீர் திருமனை; இதில் எள்ளி சிரமபரிகாரம் செய்து கொள்ளவேண்டும்" என்றார். இதைக்கேட்ட கண்ணன் உள்ளம் மட்டற்ற மகிழ்ச்சியுற்றது. "ஹா! ஹா! இத்தகைய பெரிய பட்டணத்தில் ராஜாதிராஜனுன துரியோதன மகாராஜாவீற்றிருக்கும் அரண்மனைக்கருகில் எனக்கும் ஓர் அகம் இருக்கின்றதா! இதோ! வருகிறேன்" என்று கூறிக்கொண்டே, விதுரரின் அகத்தில் புகுந்து தங்கிவிட்டார் ஸ்ரீ கிருஷ்ணன். நாமென்கிற ஆணவ அகம் பாவத்தை விரட்டியடித்து சுத்தசாத்விக ச்ரத்தாபக்தியுடன்கூடின பவித்ரமான விதுரரின் இல்லத்தைத் தனது அகமாகப் பாவித்து வீற்றிருந்தார். ஆனந்தக்கூத்தாடிய விதுரர்,

"முன்னமே துயின்றருளிய முதுபயோததியோ ?
பன்னகாதிபப்பாயலோ ? பச்சையாலிலையோ ?
சொன்னநால்வகைச்சுருதியோ ? கருதி நீஎய்தற்(கு)
என்ன மாதவம் செய்தது இச்சிறுகுடில்" என்றார்.

விதுரர் பஞ்சபக்ஷ்ய பரமான்னத்துடன் செய்த விருந்தைத்தடுத்து விதுரர் குடிக்கும் கஞ்சியை அமுதமாய்ச் சுவைத்துண்டு, தனது எளிமையை யாவரும் அறிய உணர்த்திய அப்பரந்தாமனின் மாயையை யாரறிவார்? விதுரருக்கு சதுர்ப்புஜதரிசனம் தந்தருளினன் கண்ணன்.

இத்தகைய மஹாமதி வாய்ந்த விதுரரைப்போன்றவளா நான்?" என்றாள் திருக்கோளூர்ப்பெண்மணி.

3. தேகத்தைவிட்டேனோ ரிஷிபத்தினியைப்போலே!

கோபகுமாரர்கள் யாகம்புரியும் ரிஷிகளிடம் சென்று, "எமது கண்ணன் மாடுகள் மேய்த்துக்கொண்டே இவ்வனத்துக்கருகில் வந்திருக்கிறார். மிகவும் பசியால் வாடுகிறார். ஐயா! கொஞ்சம் அன்னமிருந்தால் யாசிக்கச்சொன்னார். உங்களுக்கு மெத்த புண்ணியம் உண்டு. நீங்கள் தர்மவான்களென்பது உங்களது முகத்திலேயே தெரிகிறதே! ஐயா! தயைசெய்து கொஞ்சம் அன்னதானம் புரியுங்கள்; நாங்கள் மிகவும் பசியால் வருந்துகிறோம்" என்றார்கள்.

இதைக்கேட்ட அந்தணர் "அடே, பயல்களா! எங்களை என்னவென்று நினைத்தீர்கள்? நாங்கள் ஆசார சீலர்கள். சேஷம் புசிக்கமாட்டோம். இங்கு ஆயிரம் பிராம்மணாளுக்கு யக்ஞ அங்கமாக அன்னதானம் நடக்கின்றது. மற்றவருக்கு கிஞ்சித்தும் போடக்டாது. வேறு இடத்திற்குச் செல்லுங்கள். இங்கு நிற்காதே ஓடிப்போங்கள்" என்று துரத்தியடித்தனர். இவர்கள் யாகம்புரிவது யாரைக் குறித்ததோ? யக்ஞமூர்த்தியே ஸ்ரீ கிருஷ்ணபரமாத்மா என்பதை இவர்களறியவில்லை! எத்தகைய யாகம் புரிந்தென்ன?...

உடனே கோபாலர் ஸ்ரீ கிருஷ்ணனிடம்சென்று விஷயத்தை அறிவித்தார்கள். கோபாலன் கேட்டான். "சரி! தோழர்களே பார்த்தீர்களா ஆசாரத்தின் மகிமையை? அவர்கள்மேல் தப்பிதமில்லை, நாம் வேறுகுலத்தவர்கள். இருக்கட்டும். நீங்கள் அந்த ரிஷிகளின் பத்தினிகளைக் கொஞ்சம் சாதம் கேளுங்கள். அவர்கள் குடும்பப்பணியில் ஈடுபடுபவர்களாகையால் பழையவமுது எவ்விடமாவது வைத்திருப்பார்கள். அதாவது கிடைத்தால் நமது பசிதீருமே; போய்க் கேளுங்கள்" என்றார்.

இத்தகைய கண்ணனுடைய வார்த்தையைக்கேட்ட கோபகுமாரர்கள் யக்ஞபத்தினிகளிடம் சென்று "அம்மா! இங்கு அருகிலிருக்கும் வனத்தில் ராமகிருஷ்ணர்கள் மாடுகளை மேய்த்துக்கொண்டு நெடுந்தூரம் வந்ததனால் இளைப்புற்று பசியால் வருந்துகிறார்கள். உங்களிடம் கொஞ்சம் அன்னம் கேட்கச்சொன்னார்கள் பழையவமுது இருந்தாலும் போதுமாம். உங்கள் விரதத்திற்குக் கெடுதல் வேண்டாமென்று கூறச்சொன்னார்கள்" என்றார்கள்.

இதனைச்செவியுற்ற ரிஷிபத்தினிகளுக்கு சக்கரைப்பந்தலில் தேன்மாரி பொழிந்தாற்போல் ஆய்விட்டது. அவர்கள் யாரைக் குறித்து தரிசிக்கவேண்டுமென மனம் ஏங்கித் தவித்திருந்தார்களோ, அத்தகைய பரந்தாமன் 'பசிக்கின்றது பழையவமுதாவது கொடு' என்று யாசித்தால் அவர்களின் உள்ளம் எத்தகைய ஆனந்தத்தில் திகழும்! உடனே 'நான் முன்; நீ முன்' என்று போசனத்துக்கு வேண்டியதை ஸித்தம்செய்துகொண்டு கண்ணனிருக்கும் இடத்திற்கு ஒரு நொடியில் சென்று கண்ணனெதிரில் தயங்கித் தயங்கி நின்று வினயமுடன் புசிக்குமாறு வேண்டினர்.

"அடாடா! உங்களுக்கேன் இவ்வளவு சிரமம்? இந்தப் பசங்களிடம் பழையவமுதிருந்தால் கொஞ்சம் கொடுத்தனுப்பக் கூடாதா? நீங்களெடுத்திங்குவரலாமா? உங்கள் பர்த்தாக்கள்

கோபிக்கமாட்டார்களா.கற்புடைய மங்கையர்க்குக் கணவனன்றோ தெய்வம்! அவர் வார்த்தையை மீறி இப்படியும் வரலாமா? நான் புசித்தால் சேஷமாய் விடும், யாகமும் நஷ்டமாகும்; எடுத்துச் செல் லுங்கள்" என்முன் கண்ணன்.

பெண்களின் மனம் தவித்தது. "சுவாமீ! மன்னிக்கவும்" என்று கூறிக்கொண்டே கிருஷ்ணனை அடிபணிந்து, "எந்த பரமாத் மாவைப்பற்றி அவர்கள் யாகம் புரிகின்ருர்களோ, அத்தகைய பரந் தாமன் நீரென்பது அறியாமல் போனர்கள். தயவுசெய்து புசிக்க வேண்டுகிறோம். உமது தரிசனம் இவ்வன்னத்தை எடுத்துவந்த தனுல்கிடைத்தது. எங்களை ஆதரிக்கவேணும் சுவாமீ!" என்றனர்.

கண்ணன்:—"பெண்மணிகளே! உங்கள் பர்த்தாக்கள் சாமான்யரல்லர்; சகலவேதசாஸ்திர ஆகமநூலாராய்ந்த நிபுணர்கள். உங்களைச் சபித்துவிடுவார்கள். நீங்கள் செய்வது தர்மத்திற்கு விரோதம். உம்; போங்கள்; உங்கள் பதி காத்திருப்பார்கள்"

ரிஷிபத்தினிகள்:—"ஈரேழுலகத்திற்கும் நீரே கர்த்தா; நீரே ரட்சகர்....என்பதை நாங்களறிவோம். எங்கள் பதியிடம் பய மில்லை. ரட்சகரிடம் ரக்ஷிய வஸ்துவாக அடைக்கலம் புகுந்தோம். எங்களை யாதரிப்பது உமது கடமை. சாபவிமோசனத்திற்கும் சதுர் முகன் பிதா நீர் என்பதை அறிவோம். நாங்கள் யாரைக்காண வேணுமென்று தவித்தோமோ, அத்தகைய பரந்தாமருக்கு இத்தகைய போஜனத்தைக் கொடுக்கவேணுமென்று நாங்கள் உள்ளார்ந்த அன் புடன் மனமுருகி ஏங்கினேமோ, அத்தகைய புண்டரீகாக்ஷனுகிய தேவரீர் எங்களுக்குக் கிடைத்தீர். எங்கள் மனதைத் தவிக்கவிடாமல் ஏழைகள் வார்த்த கஞ்சியை அருந்தவேணுமாய் வேண்டுகிறோம்"

இவர்கள் பக்திக்கு மெச்சின பரந்தாமனும் இவர்கள் கொடுத்த போஜனத்தை வெகு ஆவலுடன் தானும் கோபகுமாரர்களும் பசி தீர உண்டுகளித்தனர். பிறகு "பெண்மணிகாள் நீங்கள் பேதை களாயிருந்தும் உண்மையை அறிந்தீர்கள். உங்கள் பர்த்தாக்கள் சகல கலைகளையும் கற்றும் அறிவிலிகளானுர்கள்" என்ருர்.

பிறகு யக்ஞ புருஷர்களும் கண்ணனிடம் வந்து "சுவாமி! உமது மகிமையைப் பெண்களறிந்தார்கள். நாங்கள் சாஸ்திரம் கற்றும் கல்லர் மூடர்களானேம். மன்னிக்கவும்" என்று பகவா னடிபணிந்து பிரார்த்தித்து தம்தம் மனைவிகளை அழைத்துச் சென் ருர்கள். இவர்களும் கண்ணனைப் பிரிய மனமில்லாது அரை மன துடனேயே திரும்பினர். ரிஷிகளும், கிருஷ்ணனருளால் ஞானம் பெற்று தங்கள்தங்கள் தவறை உணர்ந்து தங்கள்தங்கள் பத்தினி களை ஆதரித்து அவர்களுடன் கூடி யாகத்தைப் பூர்த்திசெய்தனர்.

ஆனுல், அவர்களில் கண்ணனருளுக்கு இலக்காகாத ஒருவன் தன் மனைவியை அங்கிகரிக்காமல் தடுத்துவிட்டான். அப்போதே அவளும் பகவானுடைய சாணுரவிந்தத்திலேயே தன்மனதை நிலை நிறுத்தி கர்மா-தீனமாக ரிஷிக்கு அடிமையான அந்த சரீரத்தைத் துறந்து பரந்தாமன் திருவடியையடைந்தாள்.

அதனுலேயே, "தேஹத்தைவிட்டேனே ரிஷிபத்தினியைப் போலே" என்ருள் திருக்கோளூர்ப் பெண்மணி.

என் சுய சரிதை

சகோதரி R. S. சுபலக்ஷ்மி அம்மாள்

(சென்ற இதழ் தொடர்ச்சி.)

ஊர் வம்பு

இந்த ஒரு வருஷத்தில் ஆச்ரமத்தைப்பற்றி ஊரில் பலவித அபிப்பிராயம். வம்புகள் அதிகம். ஒரு சமயம் ஆச்ரமத்துக்கு சமீபத்திலுள்ள ஒரு கிரகத்தில் ஒரு மங்களகாரியம். மேளதாளங்களுடன் ஸம்பந்திகள் வீட்டுக்குப் போய்வரவேண்டும். அதை காலை 9 மணிக்கு முன்னும் 10 மணிக்குப் பிறகும் வைத்துக் கொண்டார்கள். 9 முதல் 10 வரைக்கும் ஆச்ரமத்துப் பெண்கள் தெரு வழியாக பாடசாலைக்குப் போகும்போது அது ஒரு பெரிய அபசகுனம் அல்லவா?

திண்ணைகளில் ஊர் புருஷர்கள், வீட்டுக்குள் ஊர் பெண்கள் கூடி, வம்பர் மகாசபைகள் நடக்கும். வேண்டுமென்றே இல்லாத பொல்லாத விஷயங்களையெல்லாம் கயிறுதிரிப்பார்கள். மொட்டைக் கடிதங்கள் மிஸ் லிஞ்சம்மாளுக்கு எழுதுவார்கள். வாரம் ஒருமுறையாவது, அவசரமாகத்தன்னைவந்து பார்க்கும்படி மிஸ் லிஞ்ச் கடிதம் எழுதுவார். இந்த வம்புக்கடிதங்கள் சிலவற்றைப்பற்றிக் கேட்பார்.

ஒரு தடவை நான் போனபோது சற்றுக்கடுமையாகவே, "முதல்நாள் ஆச்ரமப்பெண்களை ஒரு விவாகத்துக்கு நீ அழைத்துப்போனதுண்டா?" என்று கேட்டார். எனக்குத் தாங்கமுடியாத வருத்தமும் கண்கலக்கமும் ஏற்பட்டுவிட்டன. நானே விவாகங்களுக்குப் போவதில்லையாது. ஆச்ரமப்பெண்களையும் அழைத்துக் கொண்டு நான் போனதாக ஒரு படாப்பழி ஏற்பட்டால் எப்படியிருக்கும்! உடனே, தான் அதை நம்பவில்லையென்றும் ஆயினும் நான் சர்வ ஜாக்கிரதையாக இருக்கவேண்டுமென்பதற்காக அவள் கேள்விப்பட்ட அந்த வம்பைப்பற்றி நான் தெரிந்துகொள்ள வேண்டுமென்பதற்காக அதை என்னிடம் சொன்னதாகவும் சொல்லி, என்னைச் சமாதானப்படுத்தினாள்.

இந்த சந்தர்ப்பத்தில் எழும்பூர்வாஸி ஒருவருடைய வம்பு ஞாபகத்துக்கு வருகிறது. அது சற்று ஸ்வாரஸ்யமாதலால் அதை எழுதுகிறேன். காலஞ்சென்ற ஸ்ரீமான் ஸர். மணி அய்யருடைய கொள்ளுப்பேத்தி 'குப்பா' என்பவள் 10 வயதிலேயே விவாகமாகி உடனே புருஷனையிழந்தவுடன் அவள்பெற்றோரும் உற்றோரும் அவளுக்கு புனர்விவாகம் செய்துவிட்டனர். ஆச்ரமம் ஆரம்பித்த புதிதில் அவர்கள் எழும்பூரில் வசித்துக்கொண்டிருந்தனர். குப்பாவின் சாந்திக்கலியாணத்துக்கு அவளது சித்தப்பாவும் சித்தம்மையும் சீர்திருத்தவிவாகத்தில் அபிமானமுள்ள இவரை அழைத்தனர். எங்கள் வீட்டுக்கு வந்து அழைத்துவிட்டுப்போனார்கள். அன்று

183151

பிற்பகல் மேற்குறிப்பிட்ட எழும்பூர்வாஸி வம்பியம்மாள் வந்து, கீழ்க்கண்டவாறு தன் அபிப்பிராயத்தை எங்களிடம் தெரிவித்தாள்.

"சமாசாரம்தெரியுமா? இன்று குப்பாவுக்கு சாந்திக்கலியாணமாம். என்னவேண்டிக்கிடக்கிறது? பேசாமல் மூலையில் அடைத்துக்கிடக்காமல் மறுபடி கலியாணமாம், சாந்தியாம். எப்ப புருஷன் இறந்தானோ அப்பவே அவள்முகத்தில் களையில்லாமல் அமங்கலிக்குறிகள் வந்துவிட்டதே! இப்ப அவள் மறுபடி விவாகம் செய்துகொண்டுவிட்டால் அதற்காக சுமங்கலிக்களை வந்துவிடுமோ? ஒருபோதும் வராது. நீங்களே அவள் முகத்தைப்பாருங்களேன் "அமங்கலி" யென்பது முகத்தில் நன்ருகத்தெரியும்; அதை மறைக்கவே முடியாது" என்று வம்புமாரி பொழிந்தாள்.

"அவள் ஏற்கெனவே ஒருமுறை விவாகம்ஆனவள் என்பது தெரியாதவர்கள் அவளை சந்தித்தால், அவர்கள் அப்படிநினைக்க மாட்டார்கள். நீ விகல்பமான எண்ணத்துடன் அவளைப்பார்ப்பதால் உனக்கு அப்படித்தோன்றுகிறது. மனைவியை இழந்த புருஷனிடம் அமங்கலத்தோற்றம் இருக்கிறதா? அதுபோலத்தானே புருஷனையிழந்த பெண்ணும். மேலும், இந்தப்பெண் சிறுவயது, உலக வியவகாரமே தெரியாதவள்" என்றெல்லாம் எத்தனை நியாயம் எடுத்துச்சொல்லியும் அவள்மனதில் அது ஏறவில்லை.

குடும்பத்துக்கு 3-வது பேரன்.

செப்டம்பர் 20-ஆந்தேதி என் சகோதரி பாலம் பிரஸவித்து ஆண்குழந்தை (சங்கர்) பிறந்தது. டாக்டர் மக்னீல் லீவு எடுத்துக்கொண்டு ஸ்காட்லாந்துக்குப்போயிருந்தபடியால் டாக்டர் முத்துலக்ஷ்மி வந்து உதவிசெய்தாள். அதற்கு முதல் வருஷந்தான் டாக்டர் முத்துலக்ஷ்மி வைத்தியப்படிப்பை முடித்து, முதல் இந்து டாக்டராகத்தொழில் ஆரம்பித்திருந்தாள். "குழந்தை சாதாரணமாக பிறக்காதுபோலிருக்கிறது. ஆயுதப்பிரயோகம் செய்தாகவேண்டும்" என்று அவள் சென்னபோது எனக்குக் கலக்கமுண்டாகிவிட்டது. பெற்றோர்கள் கோவையிலிருக்கிறார்கள். சித்தம்மை ஒரு பெரிய பக்கபலம் இருந்தாலும், அனுபவமில்லாத புதியடாக்டர் ஆயிற்றே! எல்லாம் சரிவரதிருப்தியாக நடக்கவேண்டுமே யென்று கவலை. இரவுநேரம். கடவுள் கிருபையால் எல்லாம் நன்மையாகவே முடிந்தது—மறுநாட் காலை குடும்பத்துக்கு 3—ஆவது பேரன் பிறந்த சந்தோஷத்தை பெற்றோர்களுக்கும் பாலத்தின் கணவருக்கும் தந்தி மூலம் தெரிவித்தோம். நிற்க,

ஆச்ரமம் திருவல்லிக்கேணிக்கு மாற்றப்பட்டது.

1913—ஆம் வருஷம் ஏப்ரல்மாதம் எல். டி. பரீக்ஷைக்குப் போய்த் தேர்ச்சியடைந்தேன். ஆச்ரமத்தைக் கவனிக்கவேண்டியிருந்ததால் கோடை விடுமுறைக்கு வெளியில் போகவில்லை. ஜூன் மாதம் வழக்கம்போல் ஸ்கூல்திறக்கப்பட்டு வேலை ஆரம்பித்தோம்.

ஆச்ரமத்தில் சுமார் 20 பெண்கள் வரைக்கும் வந்துசேர்ந்து படித்துக்கொண்டிருந்தனர். "எழும்பூரைவிட திருவல்லிக்கேணி ஜனநெருக்கமான இடம்; மதப்பற்றுடன் கூடிய ஆசாரசீலர்கள்

வசிக்குமிடம்—அப்படிப்பட்டவர்களுடைய அபிமானமும் ஆதரவும் நம்பிக்கையும் விதவாச்ரமத்துக்கு மிகவும் அவசியம்" என்று மிஸ் லிஞ்ச் கருதினுள். இது விஷயமாக சில பெரியவர்களுடைய ஆலோசனையைக்கேட்டு அவர்களது விருப்பப்படி ஆச்ரமத்தைத் திருவல்லிக்கேணிக்கே மாற்றுவதாகத்தீர்மானித்தாள். 1912 - ஆம் வருஷம் ஜூலைமாதத்தில் ஏற்கெனவே திருவல்லிக்கேணியிலிருந்த விஜயநகரம் பெண்பாடசாலையை கவர்ன்மெண்டில் எடுத்துக்கொண்டு P. T. ஸ்கூலிலிருந்த தமிழ் டிரெயினிங்கு வகுப்புக்களை அங்கு மாற்றினுர்கள். 1913-ஆம் வருஷம் அக்டோபர் மாதம் திருவல்லிக்கேணியில் தெளிசிங்கப்பெருமாள்கோவில் தெருவில் ஒருவீட்டை 60 ரூபாய் வாடகைக்கு அமர்த்தி அதில் ஆச்ரமத்தை மாற்றினேம். என்னையும் திருவல்லிக்கேணியில் கவர்ன்மெண்டில் எடுத்துக்கொண்ட பாடசாலையில் வேலை பார்க்கும்படி மாற்றினுர்கள். பெரிய தெருவிலுள்ள—ராமஸதனம்—என்னும் வீட்டில் பாடசாலை நடந்தது. அந்த இடம்போதாமல் T. P. கோவில் தெருவிலேயே, ஆச்ரமத்துக்கெதிரில் காலஞ்சென்ற ஸ்ரீமான் ராஜாராம ராவ் அவர்களது வீட்டையும் வாடகைக்கு எடுத்துக்கொண்டு ஹைஸ்கூல் வகுப்புகள் ராமஸதனத்திலும், உபாத்திமைப்பயிற்சிவகுப்புக்களும் கீழ் வகுப்புக்களும் ராஜாராமராவ் வீட்டிலும் நடைபெற்றன.

பெற்றோர்களையும் என் சகோதரர்களையும் விட்டுப்பிரிந்து திருவல்லிக்கேணியில் ஆச்ரமத்திலேயே என் சித்தம்மையும் நானும் போயிருக்கவேண்டியதாயிற்று. எழும்பூரிலேயே ஆச்ரமம் இருந்தபோது அடிக்கடி வீட்டுக்குப்போய்வர முடிந்தது; திருவல்லிக்கேணிக்குப் போனபிறகு அது முடியவில்லை. "அக்கா, எங்களை விட்டே விட்டுவிட்டு நீ ஆச்ரமத்திலேயே போயிருந்துவிடப் போகிருயா? தினம் இங்கேயே எங்களுடன் சேர்ந்துஇருக்க மாட்டாயா?" என்று என் தங்கை ஸ்வர்ணம் கேட்டாள். "நான் ஆச்ரமத்திலேயே இருக்கப்போகிறேன். அடிக்கடி வீட்டுக்கு வந்து போவேன்" என்பதைக் கேட்டு விக்கிவிக்கி அழுதுவிட்டாள். எனக்கும் இதுவரைக்கும் விட்டுப்பிரியாத என் அருமைப் பெற்றோரையும் குழந்தைகளையும் விட்டுப்பிரிந்து போவது மனதுக்கு மிருந்த நஷ்டத்தை உண்டாக்கிற்று. ஆயினும் நல்ல பரோபகாரமான காரியத்துக்காக விட்டுப்பிரிகிறேம் என்றும் வாரம் ஒருமுறை வீட்டுக்கு வந்துபோகலாமென்றும் சமாதானப்படுத்திக்கொண்டோம்.

விதவாச்ரமம் 1913 - 1914

திருவல்லிக்கேணியில் T. P. கோவில் தெருவில் பாடசாலைக்கு எதிரிலேயே ஆச்ரமம் அமைந்தது பெண்களுக்கு நன்மையாயிருந்தது. பாடசாலை போவதற்காக அதிகம் நடக்கவேண்டாம். ஹைஸ்கூல் மாணவிகள் மாத்திரம் ராமஸதனத்துக்குப் போய் வருவார்கள். அதிகாலையில் 5 மணிக்கு எழுந்திருக்கவேண்டும். 5½ க்கு பிரார்த்தனை. பிறகு ½ மணி நேரம் தேகாப்பியாசம். அதன்பிறகு காபி சாப்பிட்டுவிட்டு பாடம்படிப்பது. முறைப்படி அந்தந்தவகுப்பு கால அட்டவணைக்கேற்ப ஸ்நானம் செய்யவேண்டும். 9 மணிக்குச் சாப்பாடு. 10 மணி முதல் மாலை ஏறத்தாழ 4½

மணிவரைக்கும் பாடசாலை. வீட்டுக்குத்திரும்பினவுடன் சிற்றுண்டி. 7 மணிவரைக்கும் பெரியவகுப்பு மாணவிகளுக்கு நானே பாடங்கள் கற்பிப்பேன். பிறகு ½ மணிநேரம் பிரார்த்தனை. பகவத்கீதை, தாயுமானவர், ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்ஸர், ஸ்வாமி விவேகானந்தர் இவர்களது உபதேச மொழிகளிலிருந்து ½ மணி நேரம் மதபோதனை செய்வேன். வெள்ளிக்கிழமைகளில் ஸ்தோத்திரப் பாடல்கள் பாடுவது வழக்கம். பிறகு சாப்பாடும் படிப்பும். 10 மணிக்கு படுக்கை. • 10 மணிக்கு மணியடித்தபிறகு யாரும் படிக்கக்கூடாது.

பிரதிதினமும் எங்கள் சிற்றன்னை ஏகலிங்க பூசை செய்வார். மார்கழிமாதம் 30 நாட்களும் 4 மணிக்கே எழுந்து ஸ்நானம்செய்து பூஜைசெய்வார். அநேகம் மாணவிகள் பூஜைக்கு எதிரில் உட்கார்ந்து பக்தியுடன் பூஜை முடியும்வரைக்கும் பஜனைப்பாடல்கள் பாடிக்கொண்டிருப்பார்கள். நவராத்திரிமுதலான எல்லாப்பண்டிகைகளும் பக்தியுடன் கொண்டாடுவோம். வரலக்ஷ்மி பூஜையன்று லக்ஷ்மிபடம் வைத்து அலங்கரித்து வித்யாலக்ஷ்மியை பூஜித்து வித்தைவரம் வேண்டுவோம். விடுமுறை நாட்களில் சிலசமயங்களில் சிற்றன்னை மாணவிகளைச் சூழவைத்துக்கொண்டு ராமாயணம், பாரதம் முதலான இதிகாசக் கதைகளை ஸ்வாரஸ்யமாகச் சொல்லுவார்—மாணவிகளுக்கெல்லாம் சித்தியிடம் அந்தரங்கமும் சலுகையும் அதிகம். சித்தியினுடைய மேற்பார்வையில் சமையல்வகைகள் பலகார பக்ஷணங்கள் எல்லாம்முதல்தரமாயிருக்கும். மாணவிகளுக்கு உடம்பு அசௌக்கியம் ஏற்பட்டால் கைமருந்துகள் தயாரித்துக் கொடுத்துப் பத்தியமாக ஆகாரங்கள் கொடுத்து சௌக்கியம்செய்துவிடுவார். முதல் 2 வருடங்கள் டாக்டர் முத்துலக்ஷ்மியவர்கள் வாரம் ஒருமுறை வந்து மாணவிகளை கவனிப்பது வழக்கம். அவரே சிலசமயங்களில் சில கைமருந்துகளைப்பற்றி சித்தியிடம் கேட்டுக்கொண்டு போவார்.

தாய்க்கும் கல்நெஞ்சா?

எழும்பூரில் நாங்கள் இருந்தபோது எங்கள் வீட்டுக்குச் சமீபத்தில் டாக்டர் கேசவபாய் குடியிருந்தார். அவரும் அவர்மனைவியும் சிலசமயங்களில் ஆச்ரமத்து முறைகளைப்பற்றிக் கேட்டுக்கொண்டு போவார்கள். மிஸஸ் கேசவபாய், 10 வயதிலேயே வைதவ்யம் அடைந்த தன் மாமாபெண் பவானியை ஆச்ரமத்தில் கொண்டுவந்து சேர்த்தாள். விதவையான தன்பெண்ணைப் பார்க்கமாட்டேன் என்று பிடிவாதமாக பவானியின் தாயார் சொல்லிவிட்டபடியால் அந்தப் பெண் பாவம்! விடுமுறைகளுக்குக்கூட பெற்றோர்களிடம் போவதில்லை. அந்தக் காலத்தில் விடுமுறைகளுக்கு ஆச்ரமம் மூடுவதே கிடையாது. விடுமுறைகளிலும் உபாத்தினிகள் வந்து பிரத்தியேக வகுப்புகள் நடக்கும். சில பெண்கள் ஊருக்கே போகாமல் இருந்துவிடுவார்கள். பவானி யென்பவள் எப்போதாவது 1 வாரம், 10 நாட்கள்மிஸஸ் கேசவபாயிடம் போயிருந்துவிட்டு வருவாள். மற்றும், அவள்படிப்பு முடியும்வரைக்கும் 10 வருஷங்கள் அவள் பெற்றோர்களிடம் போகவேயில்லை. அவள் தகப்பனர் மாத்திரம்

வந்து அவளைப்பார்த்துவிட்டு வருத்தத்துடன் போவார். 'இப்படியும் பெற்றோர்கள் இருப்பார்களா?' என்று எனக்கு ஆச்சரியமாயிருக்கும்.

புனர்விவாகம் அவசியமா?

முத்துலக்ஷ்மி என்னும் 11 வயதுப்பெண் 1914–ஆம் வருஷம் திருவனந்தபுரத்திலிருந்து வந்துசேர்ந்தாள். அவள் பெற்றோர்களுக்கு ஒரேபெண்; தகப்பனுருடன் பிறந்த சகோதரர்களுக்கு குழந்தை கிடையாது; எல்லோருக்கும் அருமையாக இந்த ஒரே பெண். ஆகவே, அவர்கள் நிலைமைக்குச் சற்று அதிகமாகவே செலவிட்டு விவாகம் செய்து, விவாகம் ஆன 10 நாட்களுக்குள் மணமகனை இழந்து கரைகாணாத துக்கத்தில் அழுந்தினார்கள். விதவையென்னும் பட்டத்துடன் இந்தப்பெண்ணை வைத்துக்கொண்டு அழுதுகொண்டிருக்கக்கூடாது என்றும் உடனே மறுவிவாகம் செய்துவிடவேண்டும் என்றும் தீர்மானித்தார்கள். அந்தசமயம் திருவனந்தபுரத்தில் இருந்த ஸ்ரீமான் S. K. யக்ஞநாராயணய்யர் முதலான சிலபெரியவர்கள் முத்துலக்ஷ்மியின் தகப்பனார் ராமஸ்வாமிஅய்யரை சென்னைக்கு வந்து என்னிடம் ஆலோசனைகேட்டுக்கொண்டு வரும்படி அனுப்பினார்கள். சோகமே வடிவாக அவர் என்னிடம்வந்து, நடந்த வர்த்தமானங்களையெல்லாம் சொல்லிப் புனர்விவாகத்தைப்பற்றி என் அபிப்பிராயத்தைக் கேட்டார்.

நான் சொன்னதாவது—"பெண்களின் விவாகவயது உயர்த்தப்படவேண்டும்- 17, 18 வயதுவரைக்கும் பெண்களும் ஆண்களைப்போலவே கவலையில்லாமல் சந்தோஷமாக ஓடியாடி குதூகலமாய் நல்லஅறிவு உண்டாகும்படி பாடசாலைக்குச்சென்று மெட்ரிக்யுலேஷன்வரைக்குமாவது படிக்கவேண்டும் என்றும் சமூகக்கட்டுப்பாட்டுக்கு உள்பட்டு உங்கள் பெண்ணுக்கு விவாகம் செய்தீர்கள், அதுவே பாபம்; அதனுடைய பலன் சகிக்கமுடியாததாயிருக்கிறது. இப்போதேஉடனே புனர்விவாகம்செய்தாகவேண்டுமென்றுயாரும் உங்களை நிர்ப்பந்திக்கப் போவதில்லை. அறியாத வயதில் விவாகம் செய்வதே பாபம், அந்த அறியாத வயதிலேயே புனர்விவாகம் செய்வது இன்னும் பெரிய பாபம். ஆகவே, அவளை அழைத்துவந்து ஆச்ரமத்தில் படிக்கவிடுங்கள். அவள் சந்தோஷமாகக் கவலையின்றிப் படிக்கட்டும்.18 வயதுக்குப்பிறகு அவளுக்கே விவாகம் செய்துகொள்ளவேண்டுமென்னும் விருப்பமிருந்தால் நாம் எல்லோரும் சேர்ந்து அவளுக்கு விவாகம் செய்துவைப்போம்!"...

என்னுடைய இந்தயோசனை அவருக்கும் நியாயமாகத் தோன்றினமையால் அவர் உடனே ஊருக்குப்போய் அவர் பெண்ணை அழைத்துக்கொண்டுவந்து என்னிடம் ஒப்பித்தார். முத்துலக்ஷ்மி நல்ல பணிவான சாதுவான பெண். பவானியின் தாயாரைப் போலவே இவளுடைய தாயாரும் "மஞ்சளும் குங்குமமும்" இல்லாத இந்தப் பெண்ணைப் பார்க்கவேமாட்டேன் என்று பிடிவாதமாகச் சொல்லிவிட்டபடியால், பாவம், இந்தப் பெண்ணும் ஆரம்பத்தில் சிலவருடங்கள் கோடை விடுமுறைக்கும்கூட ஊருக்குப் போகாமல் ஆச்ரமத்திலேயே இருப்பதுவழக்கம். எனக்குப்

பரிதாபமாயிருக்கும். அதை வெளியில் காட்டாமல் அவர்கள் சந்தோஷமாயிருப்பதற்குவேண்டியதை சித்தியும் நானும் ஆன மட்டும் செய்வோம்.

முத்துலக்ஷ்மி S. S. L. C. முடித்து க்வீன்மேரி காலேஜில் இன்டர் வகுப்பில் இருந்தபோது அவள் பெற்றோர்களின் இஷ்டத்துக்கு இணங்கி பிரம்மஞானசபையைச் சேர்ந்த ஒரு இளைஞனை விவாகம் செய்துகொண்டபிறகுதான் அவள் தாயாருக்கு உடம்பில் தெம்பும் மனதில் சந்தோஷமும் ஏற்பட்டன. முத்துலக்ஷ்மியின் கணவர் காசியில் வேலையாயிருந்தார். முதல்குழந்தை பிறந்தவுடன் முத்துலக்ஷ்மியின் தாயார் திருவனந்தபுரத்திலிருந்து சென்னைக்கு வந்து, பேரனை என்னிடம் காட்டிவிட்டு சந்தோஷமாகப் பெண்ணையும் பேரனையும் காசிக்கு அழைத்துப்போனாள்.

புதிய சுதந்தரத்தில் புதிய மோகம்

பேதைப்பெண்களுக்கு மஞ்சள் குங்குமத்தில் எத்தனை ஆசை! அத்தனை ஆசையாயிருந்தால் புருஷன் இல்லாமலேயே அவற்றை உபயோகிக்கக்கூடாதா—? இந்தக்காலத்துப்பெண்கள் முகத்துக்கு பௌடர், பேஸ்ட், குங்குமம், தலைக்கு சுமைசுமையாகப் புஷ்பம் இவற்றை தாராளமாய் வரம்புமீறியே உபயோகிக்கும் தைரியத்தை அடைந்துவிட்டனர். அதிகமாக அழுத்தி வைத்திருக்கும் காற்றடைத்த தலையணை பாரத்தை யெடுத்தவுடன் மேலே ஒரு துள்ளுத் துள்ளும். கடியாரத்தின் நாக்கு வேகமாக ஒரு பக்கம்போனது மறுபக்கமும் போய்த்தான் நடுவுக்கு வரும். அவைபோல அதிக நிர்ப்பந்தமான கட்டுப்பாட்டில் அடங்கியிருந்த பெண்கள் இப்போது ஏற்பட்டுள்ள புதிய சுதந்தரத்தில் சற்று அதிக்கிரமித்தே போய் பிறகு நடுநிலைக்கு வந்துவிடுவார்கள்; புதிய சுதந்திரத்தி லுள்ள புதிய மோகம் அவர்களைச் சற்று மயக்குகிறது. காலக்கிரமத்தில் அது நீங்கிவிடும்.—

யுக்தியும் குயுக்தியும்

யக்யலக்ஷ்மி, கோமதி என்று இரண்டு சகோதரிகள் 1914-ஆம் வருஷத்தில் செங்கோட்டையிலிருந்து அவர்கள் தமையனால் கொண்டுவந்து விடப்பட்டார்கள். சகோதரிகள் இருவருக்கும் சேர்ந்து விவாகமாகி யக்யம் 10 வயதிலும் கோமதி 8 வயதிலும் புருஷனை யிழந்தவர்கள். தகப்பனில்லை. தமையன் ஒரு வேதாந்தி; அவர் மிகுந்த தைரியத்துடன் 12, 13 வயதான யக்யத்தையும் 10, 11 வயதுள்ள கோமதியையும் கொண்டுவந்துசேர்த்துவிட்டுவடக்கு நோக்கி ஸ்தலயாத்திரைக்குப் போனார். இரண்டு பெண்களும் கவலையின்றி சந்தோஷமாகப் படித்துக்கொண்டிருந்தனர். இவர்கள் படித்துக்கொண்டிருப்பதைப்பற்றி இவர்கள் ஊரில் எல்லையில்லாத வம்பு. இல்லாதும் பொல்லாதுமான ஊராது வம்பும் பிடுங்கலும் தாங்காது 6 மாதத்துக்கெல்லாம் இவர்கள் தாயார் இவர்களை அழைத்துப்போவதற்கு வந்தாள். படிப்பிலுள்ள ஆவலும் ஊரார் வம்பிலுள்ள பயமும் காரணமாக அந்தப் பெண்களுக்குத் தாயாரிடம் போவதற்குச் சற்றேனும் இஷ்டமேயில்லை. தங்களை

யனுப்ப வேண்டாமென்று என்னிடம் மன்றாடி அழுகிறார்கள் தாயாரோ பிடிவாதமாய் அழைத்துக்கொண்டே போகவேண்டு மென்கிறாள். 'அதுவரைக்கும் கவர்ன்மெண்டிலிருந்து வாங்கின உப காரச்சம்பளத்தைக் கட்டிவிட்டுத்தான் அழைத்துப்போகலாம்' என்று சொன்னேன். 'அப்படியா?' என்று கேட்டுக்கொண்டு தெரிந்தவர்களிடமிருந்து எப்படியோ பணத்தைச் சேகரித்துக் கொண்டுவந்துவிட்டாள்! அந்த அம்மாள் குடும்பத்துக்கு வேண்டிய வரான ஸ்ரீமான் P. K. சுப்பய்யரை அழைத்துவந்து, பெண்களை அனுப்பும்படி அவரைக்கொண்டு சிபார்சு செய்யச் சொன்னாள்.

கடைசியில் ஒரு யுக்தி செய்தேன். அந்தப் பெண்களுடைய அப்ளிகேஷன் ஒப்பந்தத்தில் அவர்களது சகோதரர் கையெழுத் திட்டிருப்பதாயும், அவர் அனுமதியின்றி அவர்களை யனுப்புவது சட்டவிரோதமென்றும், அப்படி நான் அனுப்பிவிட்டால் அவர் வந்து, தமது அனுமதியின்றி அனுப்பியதற்காக என்மேல் வழக்குத் தொடரக்கூடுமென்றும், ஆகவே அவருக்கெழுதி அவர் சம்மதம் பெற்றுவந்தால் அனுப்புவேன் என்றும் ஒருபோடு போட்டேன். கிராமவாசியான அந்த அம்மாள் அதை உண்மையென்றே நம்பி, "அவன் ஒரு பிடிவாதக்காரன் ஆயிற்றே! அவன் ஊர்ப்பெண்கள் வம்பை லக்ஷியம் செய்யமாட்டானே! மேலும் அவன் போயிருக்கும் இடமும் தெரியாதே" என்று வருத்தப்பட்டுக்கொண்டே ஊர் போய்ச்சேர்ந்தாள்.

பக்யம் கோமதிக்கு எல்லையில்லாத சந்தோஷம். அந்த வருஷம் கோடை லீவுக்கு அவர்கள் ஊருக்குப் போகவில்லை. மறுவருஷம் 1915 கோடைவிடுமுறையில் 'எப்படியோ சமாளித்துக்கொண்டு திரும்பிவந்துவிடுவோம்' என்று தைரியமாய்ப் போனார்கள். ஆனால், சிறு பெண்களான இவர்களது பேச்சு அங்கு பலிக்கவில்லை. ஊரார் பேச்சைக் கேட்டுக்கொண்டு லீவுக்குப்பிறகு அனுப்பாமல் தன் னிடத்திலேயே வைத்துக்கொண்டுவிட்டாள் அவர்கள் தாயார். அவர்களுக்கோ அங்கு இருப்புக்கொள்ளாமல் தவிக்கின்றார்கள். கடிதம் எழுதுகிறார்கள்.

கடைசியில் அவர்கள் தமையன் விலாசத்தைக்கண்டுபிடித்து அவர்வந்து அவர்களை அழைத்துக்கொண்டுவந்துவிட்டது பிரம்மப் பிரயத்தனமாகிவிட்டது. ஆனால், அவர்களது படிப்பும் ஒருவருஷம் வீணாகிவிட்டது. அதன்பிறகு அதிக சிரமமின்றி அவர்கள் படித்து ஒருத்தி B. A. யும் ஒருத்தி இன்டரும் முடித்துவிட்டு தற்சமயம் கவர்ன்மெண்ட் வேலையில் இருக்கிறார்கள்.

இப்படியே, அநேகம் மாணவிகளின் படிக்கவந்த வர்த்த மானமும் கேட்பதற்கு ருசிகரமாயிருக்கும். திருக்கோஷ்டியூர்— புதுக்கோட்டையில் ஒரு சிறுகிராமம். அங்கு ஒரு ஏழைக் குடும்ப பத்தில் 10 வயதிலேயே விதந்துவாய்ப்போன விசாலாக்ஷி என்னும் பெண்ணை ஊர்வம்புக்குப் பயப்படாமல் கொண்டுவந்துவிட்ட அவள் தாயாரை நான் பாராட்டினேன். அந்தஅம்மாள் அவள் நாத்தனார் பெண்ணை—தாயின்றி இளைய தாயாரிடம் இருந்த விதந்து வான 12 வயது சாவித்திரியையும் சற்று கோழைமனதுள்ள அவள்

தகப்பனாருக்கு தைரியமுண்டாக்கிவிட்டு அவர் அனுமதியுடன் தானே ரயில்செலவு செய்துகொண்டு அழைத்துவந்தாள். இப்படியாக 1914-ஆம் வருஷக்கடைசிக்குள் வந்துசேர்ந்து படித்த பெண்கள் சுமார் 30-க்குள்தான்.

இறந்தபிறகும் அவமானப்படுத்தவேண்டுமா?

1915-ஆம் வருஷம் டிஸம்பரில் ஆச்ரமத்தில் முதலில் சேர்ந்த சீதாலக்ஷ்மி என்பவள் 6 மாதமாக க்ஷயரோகத்துடன் அவள் பெற்றோர்களிடமிருந்து கஷ்டப்பட்டுக்கொண்டிருந்தவள் கடவுள் பாதாரவிந்தத்தை யடைந்தாள். அவள் இறந்தபிறகு வைதிகர்களுடைய அறிவுநிறைந்த ஆலோசனைக்குட்பட்ட அவள் பெற்றோர்கள் நாவிதனையழைத்து இறந்துபோனவளுடைய கேசத்தைக் களைந்துவிட்டுப் பிறகுதான் ஸ்மசானத்துக்கு எடுத்துப்போனார்களாம்!! இதைக்கேட்ட எனக்குண்டான ஆத்திரமும் கோபமும் வருத்தமும் அவமானமும் கொஞ்சமல்ல. இறந்துபோனபிறகு கூட பெண்களை இப்படி அவமானப்படுத்தவேண்டுமா!!

அடுத்த இதழில்: இன்னும் ருசிகரமான விஷயங்கள்.



வாத்தியார்:—"வைகறைத் துயிலெழு" என்ற பழமொழிக்கு அர்த்தம் தெரியுமா?

பையன்:—தெரியும் ஸார்! அதன்படி பால்காரர்களும் ஓட்டல்காரர்களும்தான் ஸார் நடக்கிறார்கள்! —பரசு.

ஜயபேரிகை

வை.மு.கோ

86-வது நாவல்

"உலகத்தில் ஒரே சமயத்தில் ஒரே இடத்தில் ஒரே க்ஷணத்தில், ஆண்களும் பெண்களும் ஏகோபித்த இதயத்துடன் மெய்மறந்த ஆனந்த நிலையை அடையச் செய்யும் சக்தியை உலகளந்த உத்தமன் ஒரே ஒரு காரியத்தில்தான் கண்கூடாகக் காட்டி இருக்கிறான். அது எது தெரியுமா! அதுதான் விவாகத்தின்போது முகூர்த்தமாகும் சமயத்தில் திருமங்கல்யதாரணம் செய்யும்போது மேளமும் பாண்டும் முகூர்த்தத்தை அறிவிக்கும்படி கெட்டியாய் வாசிப்பதும், வாத்தியார் மங்களகரமான மந்திரம் உரக்கச் சொல்வதும், சுமங்கலிப்பெண்கள் லக்ஷ்மீகல்யாணம் பாடுவதும் "ஜயவிஜயீபவ!...தீர்க்கசுமங்கலீபவ!...தீர்க்காயுஷ்மான்பவ!...சர்வமங்களானிபவந்து!...மகாராஜர்களாய் வாழவேண்டும்...நித்யமங்களம் ..சர்வாபீஷ்டமஸ்து!" என்று ஒவ்வொருவர் ஒவ்வொரு விதமாகக் கூறி அட்சதையை தம்பதிகளுக்குப்போட்டு ஆசி கூறுவதும், உள்ளமும் கண்களும் ஆனந்தப் பரவசமடைய தம்பதிகள் ஒருவரையொருவர் பார்த்துப் பூரிப்புறும் அடாடாடா! அந்த அத்புத சக்தி வாய்ந்த

ஆனந்தத்தை அனுபவித்தால்தானே தெரியும்? அதோ கெட்டி மேளம்....பாருமய்யா பாரும்...நான் சொன்னது சரியாயிருக்கிறதா இல்லையா? எத்தனை பேர் கண்களில் ஆனந்தபாஷ்பம் பெருகுகிறது பாரும்!"......என்று ப்ரம்மாண்டமான பந்தலில் நடக்கும் விவாகத்திற்கு வந்திருந்த ஒருவர் மற்றொருவரைப் பார்த்துக் கூறினார்.

அதேசமயம் "ஆனந்தமானந்தமாச்சுதே" என்று பாண்டும் நாகஸ்வரமும் சேர்ந்து வாசித்தார்கள். உண்மையில் ஆனந்தபரவசத்தினால் உள்ளம் பூரித்த அம்மனிதர் "வாஸ்தவம் ஸார்! இந்த ஒரு விஷயத்தில் மட்டும் ஆதிகாலம்முதல் ஒரே கொள்கைப்படி மாறாதிருக்கிறது. எத்தனையோ விதத்தில் அனேக மாறுதல்களும் முறைகளில் பேதங்களும் இருப்பினும் தாலிகட்டும் சமயத்தின் மனோகரமான உணர்ச்சியை ஒருவராலும் மாற்றமுடியவில்லை. ஆனால், இத்தகைய சிறந்த ஆனந்தத்தைக்கூட சில ப்ரக்ருதிகள் அனுபவிக்காமல் இருப்பதைப் பார்க்கும்போது வியப்புறாமலிருக்க முடியுமா?"......என்றார்.

முதல்வர்:—என்ன! என்ன! இங்கு சதஸ்ஸில் கூடியிருப்பவர்களிலா நீங்கள் சொல்கிறீர்கள்? காது கேளாத ஊமைக்குக்கூட இந்த உத்க்ருஷ்டமான பேரானந்தத்தைப் பார்த்தவுடனே உணர்ச்சிமேலிட்டு வாயைப் பிளக்கும் என்றால், உணர்ச்சியற்ற அத்தகைய ஜடம் யாரது?

இரண்டாமவர்:—ஏதோ இடமில்லாது சொந்தக்காரன் தவிக்கிறானே என்று பச்சாத்தாபப்பட்டுத் தானே இடங்கொடுத்து உதவவேண்டியது போக, பலபேர் சிபார்சுசெய்து கெஞ்சியபிறகு இந்த வீட்டை விச்வநாத சர்மா விதியே என்று ஒழித்து விட்டார். ஆனால், அவர்வீட்டில் கல்யாணம் நடப்பதாகவோ, அதில் தான் கலந்துகொண்டதாகவோ தெரிகிறதா! பாருங்கள்.

முதல்:—தேவலையே; நீங்கள்கூட அதைக்கவனித்தீர்களா! அடாடா! அதோ தம்பதிகளின் முகமலர்ச்சியைப் பாருங்கள். வாழ்க்கையில் எத்தனையோ விதமான புயலடித்து எத்தனையோ விதமான அனுபவங்களைஎல்லாம் அறியச்செய்யும் பகவான் இத்தகைய ஒரு அபூர்வ சக்திநிறைந்த விவாகம் என்கிற சந்தர்ப்பத்தை உண்டாக்கி அதில் அடிக்கும் இந்த கெட்டிமேளத்தையே மனோகரமான வாழ்க்கையின் ஜெயபேரிகையாக முழங்கச்செய்கிறான். இதுதானய்யா ஆச்சரியத்திலும் ஆச்சர்யம், இந்த சடங்கில் கொட்டும் கெட்டிமேளமே அனேகருடைய தாம்பத்ய வாழ்க்கையை மிக மிக ஜெயப்ரதமாக நடத்திக்கொண்டுபோகிறது. சிலருடைய வாழ்க்கையிலோ, இந்த கெட்டி மேளத்தில் அபஸ்வரங்களும் கூட்டத்தில் அஸம்பாவித அபசகுனிகளும் கலந்துவிடுவதால், வாழ்க்கையின் சக்கரமும் கோணல் வழியிலேயே சென்று பலபல பள்ளத்தாக்குகளில் இறங்கி வழிதப்பிப் பாதைதெரியாது சிதறியும் போகிறது...சார்! சார்! அதோ பார்த்தீர்களா? துண்டை உதறித்

தோள்மீது போட்டுக்கொண்டு இச்சமயத்தில் வெளியே போகிறார் பாருங்கள்...முகத்தில் என் இத்தனை கடுகடுப்பு?....

என்றுஇவர்கள் பேசும்போது ஆனந்தமானந்தம் ஆச்சுதே என்ற அதிமனோகரமான பாட்டை சில சுமங்கலிகள் கணீர் என்று குரலெடுத்துப்பாடும் ஆனந்த த்வனியைக்கேட்டு எல்லோரும் அந்தப்பக்கமே திரும்பிப்பார்த்தார்கள். பெண்ணும் பிள்ளையும் கைகோத்துக்கொண்டு அக்னிவலம் வரத்தொடங்கினார்கள். தாலி கட்டும்போதிருக்கும் ஆனந்தம், ஆரவாரம் தனித்த ஒரு உத்ஸாகம் உணர்ச்சி இவைகள் அந்த நிமிஷத்திற்குப் பிறகு தானே குறைந்து மாறிவிடுவதும் அவரவர்கள் அப்படியப்படியே பிரிந்துசெல்வதும் தாம்பூலம் பெற்றுக்கொண்டு வீட்டிற்குச் செல்வதுமே ஸகஜம். அதேபோல் இங்கும் பலவிதமாக ஜனங்கள் பந்தலைவிட்டுச் சிதறினார்கள்.

அங்கும்இங்கும் சிட்டுக்குருவிபோல் பறந்துத் திரிந்துகொண்டிருந்த தேவகியைப்பார்த்து எல்லோரும், "அடுத்தது இதேவீட்டில் உன்கல்யாணம் நடக்கவேண்டும்" என்று கேலிசெய்துகொண்டிருந்தார்கள். வாய்திறந்து பதிலே பேசாமல் சிரித்தாள்.

அதில் ஒரு பெரிய அம்மாள், "ஏண்டியம்மா தேவகி! உங்கப்பாவை நானும் நேற்றுமுதல் பார்க்கிறேன். கடுகடுவென்று ஏதோ மாதிரி இருக்கிறாரேயன்றி சாந்தமோ, சிரிப்போ காணவில்லையே! தன்வீட்டில் ஒரு உறவுக்காரர்கள் கல்யாணம்செய்ய வந்திருக்கிறார்கள் என்றால் இவர் சிரித்தமுகத்துடன் உதவிபுரியவேண்டாமோ! முகூர்த்தகாலத்தில்கூட எங்கேயோ போய்விட்டாரே!"... என்று கேட்கும்போது தேவகியின் முகம் மாறி தலைகுனிந்தது. எனினும் தனது மாறுதலைக் காட்டிக்கொள்ளாமல், "எங்கப்பா சிடுமூஞ்சி பாகவதரில்லை மாமீ! அவருக்கு நான்கு தினங்களாக உடம்பு சரியில்லை. அதனால் டாக்டர்வீட்டிற்குப் போயிருக்கிறார். கல்யாணவீட்டில் தனக்கு உடம்பு என்று எதற்குச் சொல்லவேண்டும் என்பது அவருடைய எண்ணம்." என்று மழுப்பிக்கூறும்போது, இவளுடைய தமயன் தேவராஜன் கூப்பிடுவது கேட்டு மாடிக்குஓடி "என்ன அண்ணா! எதற்கு அழைத்தாய்? என்று அன்பொழுகக் கேட்டாள்.

தேவ:—அப்பா எங்கே! கல்யாண தம்பதிகளுக்கு ஏதாவது பரிசு வழங்கினாரா, இல்லையா?...

தேவகி:—நானும் எத்தனையோதரம் சொன்னேன். "நாம்தான் வீட்டையே ஒழித்துக் கொடுத்திருக்கிறோமே? அதுவே 50 ரூபாய் லாபமில்லையா? 5 ரூபாய் ஓதியிட்டால்போதும்" என்று சொல்லிவிட்டு வெளியில் போய்விட்டார். புளியேப்பக்காரர்களுக்கு டீபார்டியும் டின்னர்பார்டியும் வைத்து வீண்செலவு செய்வதற்குத் தானே அவருக்கு மனம்வரும்? சமயாசமயமறிந்து தக்காருக்குத் தக்கபடி செய்து மரியாதை பெறுவதற்கு அவருக்கு மனமே வருவதில்லையே!...என்னசெய்வது?

தேவ:—தேவகி! அப்பாவுக்கு ஒரு கவர் வந்திருக்கிறது. அதில் ப்ரத்யேகம் (பர்ஸனல்) என்று எழுதியிருக்கிறது. அதை நான் உடைத்துப்பார்த்துவிட்டுத்தான் அவரிடம் கொடுக்கவேண்டும் என்று எண்ணுகிறேன். நீ என்னசொல்கிறாய்?...வரவர அப்பாவின் செய்கையும் போக்கும் கொஞ்சங்கூட நன்றாகவேயில்லை. நாளுக்குநாள் புதியபுதிய சகவாஸங்கள் உண்டாகிறதன் பலன், அவர் கேவலமான நிலையில் இறங்கிப் பிறர் நகைக்கும் வழியில் ப்ரவேசித்திருக்கிறார்.

தேவகி:—அண்ணா! உரக்கப்பேசாதே; கல்யாணவிடு நினைவிருக்கட்டும். யார் காதிலாவது பட்டால் விண் பரிகாஸத்திற்கு இடமாகும். நான் உன்னைவிட வயதில் சிறியவள். ஆனால், உன்னைவிட அதிகமாகவே எனக்குப் பலவிதத்திலும் அனுபவம் உண்டாகிவிடுகிறது. நேற்று கல்யாணக்காரர்கள் வந்து இறங்கியதுமுதல் கல்யாணப்பெண்ணின் உறவினரான ஒரு தகுந்த வயதுடைய பெண்ணை அப்பா பார்க்கும் பார்வையும் அசட்டுத்தனமாக அவளுடன் பேசுவதும் எனக்குக் கட்டோடு பிடிக்கவில்லை. இதைப் பார்த்துச் சிலர் குசமசவென்று பேசிக்கொள்கிறார்கள். அப்பாவைப் பார்த்துச் சிரிக்கிறார்கள். எனக்கு எவ்வளவு தலை இறக்கமாக இருக்கிறது தெரியுமா! இம்மாதிரி அசட்டுத்தனம் செய்கிறவர் கல்யாணத்தில் கலந்துகொள்ளவே இல்லை. இதைப்பற்றி என்னைக் கேட்கவும் கேட்டார்கள். என்ன செய்வது? அண்ணா! அவசியம் பார்க்கவேண்டுமென்றால் கடிதத்தை நீ தனியிடத்தில் போய்ப் பாரு. இந்த கலாட்டாவில் பார்க்காதே.

தேவ:—எனக்குமட்டும் தெரியாதாம்மா! இந்தக்கடிதத்தை நீயும் பார்ப்பதற்காகவே கூப்பிட்டேன். இங்கு யாரும் வரமாட்டார்கள். நீ வாசற்படியருகிலேயே நில்லு. நான் மெல்லப் படிக்கிறேன் என்று கூறிப் படித்தான்.

“கனம்பொருந்திய சர்மா அவர்களுக்கு,

உபயக்ஷேமம். உங்கள் கடிதம் வராமலிருந்தால் நான் குழந்தை குஞ்சலாவுடன் வந்தே இருப்பேன். யாரோ உங்கள் விட்டில் கல்யாணம் செய்யப்போவதாகவும் நீங்கள் இப்பொழுது வரவேண்டாம் என்றுமட்டும் தாங்கள் எழுதியிருக்கிறீர்களேயன்றி, பணம் அனுப்புவதாக முன் கடிதத்தில் எழுதியபடி அதற்கு என் எத்தகைய தகவலும் எழுதவில்லை. குழந்தைக்கு வைரநெக்லேஸ்மீதும் வைரவளையல்மீதுந்தான் அதிக ஆசையாயிருக்கிறதாம். அவளே அதை எழுதச்சொன்னாள். ஆகையால் உடனே பணத்தையனுப்பவும். எனக்குத் தெரிந்த வைரவியாபாரியிடம் நான் வாங்கிவிடுகிறேன். குழந்தை சதா உங்கள் நினைவாகவே இருக்கிறாள். அவளுடைய சந்தோஷம் சொல்லிமுடியாது. மகா புத்திசாலியாகையால், தான் எப்படி குடித்தனம் செய்யவேண்டும் என்றெல்லாம் இப்போதுமுதல் அவள் திட்டம் வகுப்பதில் மும்முர

மாக ஈடுபட்டிருக்கிறாள். இதைக்கேட்டால் நீங்கள் சந்தோஷப்படுவீர்களே என்று இதை எழுதுகிறேன். உங்கள் விவரமான கடிதத்தை எதிர்பார்க்கும்

சோமசர்மா"

தேவ:—தேவகி! நம் அப்பாவைப்பற்றி நான் சந்தேகித்தது மிகவும் உண்மையாகிவிட்டது. பார்த்தாயா, இதென்ன அக்ரமம்? இவர் யார் யாருடன் சிநேகம் செய்கிறார் என்பதை சில நாட்களாக நான் கவனித்துத்தான் வருகிறேன். அதுமுதல் நான் சந்தேகப்பட்டது இன்று உண்மையாகவே ஆய்விட்டது...

தேவகி:—நம் அன்னை இருக்கும்பொழுது யாரோ ஒரு அண்ணாசாமி என்பவரைப் பார்த்தாலே அவர்களுக்குக் கோபம் வரும். 'குடிகெடுக்கும் பிசாசு, இந்த உருவத்தில் வந்திருக்கிறது' என்று திட்டுவார்களல்லவா?...அதே அண்ணாசாமியுடன் இப்போது அப்பா அதிகுகியலாகப் பழகுகிறார். இப்போதுகூட அவருடன்தான் வெளியே போயிருக்கிறார். அந்த அண்ணாசாமி என்பவன் எப்படிப் பட்டவன்? எனக்கொன்றுமே புரியவில்லையே...

தேவ:—அவனா? அயோக்கிய ராஸ்கல். அவன் கல்யாணத் தரகன். எங்கெங்கு வயதானகிழவன்கள்—அதிலும் பணக்காரக் கிழவன்கள் இருக்கிறார்கள், எங்கெங்கே ஏழைப்பெண்கள் இருக்கிறார்கள் என்று கழுகுக்கண்களைப் போட்டுக்கொண்டு பார்த்து பொய்யும் பித்தலாட்டமும்கூடிய நாட்டியமாடி முடிபோட்டு வைக்கும் மகாபாவி அவன். நம் தாயாரின் சகோதரியை ஒரு நோயாளிக்கு மணம் செய்வித்துக் குடும்பத்தையே நாசம்செய்து விட்ட பாவியாகையினல்தான் அம்மாவுக்கு அவனைக்கண்டாலே பிடிக்காது. அப்பாவின்போக்கைப்பார்த்தால் மறுவிவாகம்செய்து கொள்ளவேண்டுமென்கிற எண்ணம் மும்முரமாகத் தலைக்கேறி விட்டதுபோல் தெரிகிறது,...

தேவகி—அண்ணா! அதோ அப்பா வருகிறார். இப்படியே நான் பின்பக்கமாக இறங்கிப்போய்விடுகிறேன். நீ கடிதத்தைக் கொடுப்பதானல் அப்பாவின் மேஜையின் மீது வைத்துவிடு. இல்லையேல்...

தேவ:—நான் கடிதத்தையே காட்டாது கிழித்துவிடப்போகிறேன். இதற்குமேல் என்ன நடக்கிறதோ பார்க்கலாம். நீபோய் விடு....என்று அனுப்பிவிட்டு, கடிதத்தைத் தன்பெட்டியில் ரகஸ்யமாகப் பதுக்கிவிட்டான். தந்தையின் முகத்தைப்பார்ப்பதற்கே அவனுக்கு வெறுப்பாயும் கோபமாயுங்கூட இருந்தது.

—o—

2

"என்ன சர்மாஜீ! முகூர்த்தஸமயத்திற்கு எங்கேயோ போய்விட்டீர்களே வாருங்கள்; இப்படிஉட்காருங்கள். மாப்பிள்ளை எப்படி இருக்கிறார் பார்த்தீர்களா? ஜோடி எப்படி இருக்கிறது

பார்த்துச் சொல்லுங்கள் சார்!" என்றார் கல்யாணப்பெண்ணின் தகப்பனர்.

சர்மா:—ஹி!...ஹி...ஹி....ஜோடி வெகு தரமாயிருக்கிறது... எனக்கு அவசரமாக ஒரு வேலையிருந்ததால் சற்று வெளியே போய் வந்தேன்...என்று சொல்லிக்கொண்டே மாடிக்குப்போனர்.

இவர் போகும் ஜோரைப் பார்த்துக் கல்யாணப் பந்தலில் உட்கார்ந்திருந்த சிலர் சிரித்துக்கொண்டு ஒருவரையொருவர் பார்த்தார்கள். அதில் ஒருவர், "சார்!' 'இங்கு வேறு யாருக்கோ கல்யாணம் நடக்கிறதே. நமக்கு நடக்கக்கூடாதா! நாம் சிறிய குமாரனாக ஆய்விடக்கூடாதா! ஏன் இப்படி வயதாகிவிட்டது!' என்ற கவலை பாவம்! முகத்தில் ஏதாவதொரு பெருந்தன்மையான களை இருக்கிறதா! பாருங்கள்" என்றார்.

மற்றொருவர்:—பெருந்தன்மையான களையோ! பலாசக் களையோ! எதிருந்தால் என்ன? பெரிய உத்தியோகமும் மாதாமாதம் சொளைசொளையாய் ஆயிரம் ரூபாய் சம்பளமும் பெரிய மனிதர்களின் ஆடம்பர படாடோப சினேகமும் தாராளமாக இருக்கின்றன. இந்த மூஞ்சியைப் பார்த்து எப்படித்தான் வேலை கொடுத்தார்களோ!

இன்னொருவர்:—சார்! இதற்குத்தான் அதிர்ஷ்டம் என்று பெயர். இந்த மனிதர் ஆதியில் 50 ரூபாய் சம்பளத்திற்குத்தான் வேலைக்குப்போனர். இவருடைய தாயார் மகா சீலவதி. பரம பக்தை. அந்த அம்மாளுடைய கல்லொழுக்கத்திற்கும் சிறந்த குணத்திற்கும் பகவான் க்ருபைசெய்துதான் இந்த பதவியை இந்த ப்ரக்ருதிக்குக் கொடுத்திருக்கிறார். "ஏர் பிடித்தவன் என்ன செய்வான்? பானை பிடித்தவள் பாக்யசாலி" என்பது பழமொழி. இந்தக் குடும்பத்திற்கு இப்பழமொழி வெகு நன்றாகப்பொருந்தும். இந்த மனுஷ்யனுடைய தகப்பனும் இவரைப்போன்ற பேர்வழிதான். அந்தம்மாளால் குடும்பத்தில் இத்தகைய பாக்யலக்ஷ்மியும் செழுமையும் நிறைந்திருக்கிறது. பாட்டியைப்போல் முகச்சாயல், குணவிசேஷம், பக்தி, பரோபகாரசிந்தை முதலியவைகள் பேத்தியிடம் நிறைந்திருக்கின்றன...என்பதை நான் இந்த கல்யாணத்தில் தான் கண்டு சந்தோஷப்படுகிறேன்.

வேறொருவர்:—இந்த இரண்டுநாளில் என்னத்தைக்கண்டு விட்டாராம். ஏதோ! அடக்க ஒடுக்கமாக இருப்பதை நடையிலேயே பார்க்கிறோம். அவ்வளவுதான்...என்றதை இடைமறுத்து முன் பேசியவர் "ஸார்! அப்படி சொல்லிவிடக்கூடாது. இந்த சிடுமூஞ்சி சர்மாவிடம் இந்த குழந்தை இருக்கிறது பாருங்கள். அதுவே பெரிய அத்தாட்சியாகுமய்யா...கல்யாணப்பெண்ணின் தூரத்து பந்து அதோ நிற்கிறதே அந்தப்பெண் நேற்று ஜானுவாஸ ஊர்வலத்திற்கு வராமல் முகத்தையொருமாதிரி வைத்துக்கொண்டு நின்றுவிட்டது பாவம்! இந்த தேவகி அந்தப்பெண்ணை அணுகி விசாரித்துத் தன் பட்டுப்புடவைகளில் ஒன்றைக்கொடுத்து அவ

ளுக்கு சந்தோஷத்தை உண்டாக்கித் தன்னுடன் கூடவே அழைத்துச் சென்றாளாம். அதை அந்தப்பெண்ணின் பாட்டியும் தாயாரும் சொல்லிச் சொல்லிப் பூரித்துப்போகிறார்கள். முதலிலிருந்தே இத்தகைய நல்ல குணம் இருந்தால் அவர்களுடைய பிற்காலத்து வாழ்க்கை எத்தனையோ பயனுடையதாகவும் ப்ரகாசமாயும் இருக்கும்...

பின்னோனவர்:—வாஸ்தவம் ஸார்! இம்மாதிரி இருப்பவர்களைப் பார்த்து நாம் என்னசொல்கிறோம்?—பெரியார் செய்த பூஜா பலன், வாழையடி வாழையாக வரும் புராதனப் பழக்கம். முன்னோர்களின் ஆசீர்வாதம்—என்றெல்லாம் ஏதேதோ சொல்கிறோமல்லவா! அஸத்துக்குடும்பமாயிருந்தாலும் அதையும் இப்படியே சொல்கிறோம்.—என்று பொதுஜன அபிப்ராயத்தை வைத்துக்கூறினார்.

“ஏன்ஸார்! இந்த மனுஷ்யன் ஏன் இப்படி இருக்கிறார்! இதற்கு என்னகாரணம்? இவர்கூட மறுபடியும் விவாகம் செய்துகொள்ளப் போவதாக ஒரு வதந்தி இருக்கிறதே. அது உண்மையாக இருக்குமா இவருடைய மனைவி எப்போது இறந்துபோனார்?” என்றார் ஒருவர்.

முன்னவர்:—அந்த வெட்கக்கேட்டை ஏன் கேட்கிறீர்கள்? பணக்காரர்கள் எதுசெய்தாலும் கேள்வியேயில்லை. இந்த மனிதனுக்கு இவருடைய தாயார் தனது சொந்தத்திலேயே விவாகத்தைச் செய்து வைக்க ஆசைப்பட்டு நாத்தனாரின் மகளை விவாகம்செய்துவைத்தாள். நாலைந்து வருஷத்திற்குள்ளேயே அந்தப்பெண் இறந்துவிட்டது; மறுமுறையும் சொந்தத்திலேயே ஒரு ஏழைப்பெண்ணை இரண்டாந்தாரமாக விவாகம் செய்துவைத்தாள். போதாக்காலக் கொடுமை அந்த பெண்ணும் தவறிவிட்டது.

இரண்டாமவர்:—மனுஷ்யன் நல்லபாக்யசாலிதான். அப்புறம்..

முன்னவர்:—அப்பறமாவது...தாயார் தகப்பனார் பார்த்து செய்த விவாகம் உருப்படவில்லை. ஆதலால் இனி தானே தேடி தனக்கிஷ்டப்படிதான் செய்துகொள்ளப்போகிறேன் என்று பிடிவதாம்செய்து தானேஒரு பெண்ணைப்பார்த்து விவாகத்தைச்செய்து கொண்டாராம்.

மூன்றாமவர்:—ஐயையோ! மூன்று கல்யாணமானவரா நாலாவது செய்துகொள்ள அடிபோடுகிறார்? அப்றம்...அந்த புண்யவதியின் பசங்கள்தானா இவர்கள்?

முன்னவர்:—ஆமாம். அப்போதே இவருக்கு 500 ரூ. சம்பளமாகிவிட்டது. முத்துமுத்தாக இரண்டு குழந்தைகளும் பிறந்தன. நன்றாகத்தானிருந்தார்கள். அதிர்ஷ்ட ஹீனனாகிய இவரதுபாவம் அந்தம்மாளையும் விழுங்கிவிட்டது. மூன்றுதாரம் மணந்தும் மூன்று மனைவிகளும் இறந்துவிட்ட அவமானத்தினால் மனுஷ்யன் குன்றிப் போய்விட்டார். தாயார் தகப்பனாரும் தவறிவிட்டார்கள். ஆனால், செல்வம் வரும் விஷயத்தில் இவர் அபார அதிருஷ்டசாலி. சம்பளம் ஆயிரம்ரூபாயாயிற்று. மக்களும் புத்திசாலிகளாகி நன்றாக வளர்ந்திருக்கிறார்கள். இத்தனை வைபவங்களிருந்தும் சபலபுத்திவிடவில்லை,

என்று இவர்கள் பேசிக்கொண்டிருக்கையில் விவாகமாகி தம்பதிகள் மணையைவிட்டு எழுந்திருக்கும் விஷயத்தை அறிவிப்பது போல் கணீரென்று மங்களம்பாடி ஆரத்தி எடுக்கும் குரல்கேட்டதும் எல்லோரும் எழுந்துசென்றார்கள்.

மேலே சென்ற விச்வநாத சர்மா தன் தனியறையில் ஈஸிச்சேரில் சாய்ந்து ஏதோ ஆழ்ந்தயோசனையிலீடுபட்டிருந்தார். சற்று நேரத்திற்கொருதரம் வீதிப்பக்கம் எட்டிஎட்டிப் பார்ப்பதால் யாருடைய வருகைக்கோ இவர் மும்முரமாக எதிர்பார்ப்பதாகத் தெரிந்தது. மணியைப்பார்க்கிறார்; வாசலைப்பார்க்கிறார். "உபத்திரவத்திற்குத்தான் இந்த கல்யாணம் இங்கு நடக்கிறது. மணி 12 அடிக்கப்போகிறது. இன்னுமா தபால்காரன் வரவில்லை!... ஒரு வேளை கல்யாண கலபையில் யாரிடமாவது கொடுத்துவிட்டுப் போயிருப்பானோ! ஐயையோ! அப்படியானால் பெரிய விபரீதத்திலல்லவா முடியும்! இந்த உபத்திரவம்பிடித்த கல்யாணக்காரர்கள் இங்கு ஏன் வந்தார்கள்?" என்று தனக்குள் கூறியபடியே அங்குமிங்கும் கூண்டிலடைபட்ட சிங்கம்போல் கைகளைப் பின்கட்டு கட்டிவிட்டு உலாவுகிறார். முகத்தில் எள்ளும் கொள்ளும் வெடிக்கிறது.

அச்சமயம் கல்யாண வீட்டில் சாப்பாட்டிற்கு அழைக்க ஒருவர் வந்தார். தன்னுடைய ஆத்திரத்தை ஒரு சிறிது அடக்கிக்கொண்டு "சார்! "நான்பிறகு சாப்பிடவருகிறேன். எனது ஆபீஸ் விஷயமான தபால் ஒன்றை நான் அதிகஅவசரமாக எதிர்பார்க்கிறேன். இத்தனை நேரமாகியும் நாசமாய்ப்போன தபால்காரன் இன்னும் வரவில்லை. என்று இவர் முடிப்பதற்குள் வந்த மனிதர், "ஸார்! 10 மணிக்குமுன்பே தபால்காரன் வந்து உமதுபேரைச்சொல்லிக்கூப்பிட்டான். யாரோ வாங்கிக்கொண்டு உம்மிடம் கொடுப்பதாகச் சொன்னார்களே....இன்னும் கொடுக்கவில்லையா?" என்றார்.

அவ்வளவுதான். விச்வநாத சர்மாவின் தேகம் பூராவும் கோபாக்கினி பிடித்துக்கொண்டு தகிக்கவாரம்பித்தது, "என்ன! தபால்காரன் வந்துகடிதம் கொடுத்துவிட்டானா? உண்மையாகவா!ஐயயோ குடிமுழுகிப்போய்விட்டதே!...யாரிடம் கொடுத்தான்? எனக்கு வநத கடிதத்தை எந்தமடையன் கையை நீட்டி வாங்கிக்கொண்டான்! பத்துமணிக்கு வந்த தபாலை இன்னும் என்னிடம் கொடுக்கவில்லையே! போராத காலத்திற்குத்தான் இந்தக் கல்யாணத்திற்கு இங்கு இடம்விட்டேன்போலிருக்கிறது." என்று கூச்சலிட்டவாறு "ஒவ்வொருவரையும் கடிதம் உங்களிடம் கொடுத்தானா?" என்று விசாரித்தார்.

"என்னிடமில்லை. உன்னிடமில்லை." என்று எல்லோரும் சொல்லச் சொல்ல இவருடைய கோபம் சாக்ஷாத் விச்வாமித்திரருக்கும் மேலாக வந்துவிட்டது. அதில் ஒருவர், "சார்! உங்கள் பிள்ளையிடந்தான் கொடுத்ததுபோல ஞாபகம்" என்றார்.

உடனே மாடிக்கு ஓடினார். தேவராஜன் ஏதோ ஆழ்ந்த கருத்துடன் எழுதிக்கொண்டிருந்தான். அவன் நடுநடுங்கும்படியான

குரலில், "எனக்குத் தபால் வந்ததாமே எங்கே அது! உனக்கு அறிவு இருக்கிறதா இல்லையா! எனக்குவரும் தபால்களை நீ என வாங்கவேண்டும்? அல்லது இத்தனைநேரம் என்னிடம் ஏன் கொடுக்கா திருக்கவேண்டும்!" என்று கூச்சலிட்டார்.

தேவ:—நீங்கள் அப்போது எங்கேயோ வெளியே போயிருந் தீர்களப்பா! அதிலும் இது ஒரு சர்வசாதாரணமான கார்டு. ஊரில் இவ்வருஷம் விளைவே இல்லாததால் வரிப்பணம் கட்டுவதற்கு இங்கிருந்து அனுப்பவேண்டுமென்று குமாஸ்தா எழுதியிருக்கிறார். அதோடு எர்கட்டும் பெரியஜதை மாடு வேண்டுமாம். 500 ரூபா யாகுமாம். உடனே அனுப்புவது என்று எழுதியிருக்கிறார். இவ்வளவுதான். இந்தாருங்கள்." என்று கவருடன்கூடவந்த கார்டைக் கொடுத்தான்.

சர்மா:—இது ஒன்றுதானா வந்தது! வேறு கவர் ஒன்றும் வரவில்லையா?

தேவ:-வேறு வந்தால் கொடுத்திருக்கமாட்டேனா? இதொன்று தான் வந்தது...என்றான். சர்மா கடிதத்தை வாங்கிக்கொள்ளா மலேயே விருவிருஎன்று போய்விட்டார். தேவநாதன் தனக்குள் ளேயே சிரித்துக்கொண்டான்.

சர்மாவுக்குள்ள மனக்கொதிப்பில் கல்யாண தம்பதிகளைப் பார்க்கப்பார்க்க இன்னும் வயிறறெரிச்சலும் ஆத்திரமும் பத்திக் கொண்டுவந்ததால்,பசித்தவன் பழங்கணக்கைப்பார்த்தானும் என்பது போலும் வேண்டாதமனைவியின கைப்பட்டாலும் குற்றம், கால் பட்டாலும் குற்றம், என்றபடியும் கல்யாணக்காரர்களமீது கடுங் கோபமுண்டாகி "வீட்டைப் பாழாக்கிவிட்டீர்கள். அங்கு குப்பை இங்கு சத்தை, ஒரே நாத்தம் நாறுகிறது. கண்டஇடத்திலும் அடுப்பைமூட்டி கரியாகிவிட்டது; சுவரெல்லாம் பாழாகிவிட்டது. இதற்காகத்தான் ஒருவருக்கும் தாக்ஷண்யப்படுவதே இல்லை. நாளையதினம் என்னுடைய முக்யமான சினேகிதர்கள் வரப்போ வதால் விருந்துநடக்கவேண்டும. இன்று இரவே வீட்டை ஒழித்துக் கொடுத்துவிட்டுப் போய்விடவேண்டும்" என்று கலயாணக் காரர்களிடம் இரைந்துபேசிக் குதித்தார்.

இதைப் பார்த்த பந்துக்களில் சிலர் அருவருப்புடன் உடனே போய்விட்டார்கள். சிலர் எள்ளமர்கப்பேசினார்கள். சிலர் கடிந்து பேசினார்கள். "இதே கல்யாணப்பெண்ணை இவருக்குக் கொடுக்க வில்லையே என்கிற பொறாமையினால் முதலில இடமே விடமாட் டேன் என்றார். ஏதோ தாக்ஷண்யபபட்டவர்கள் வந்து கேட் டார்களே என்று கடுவன்பூனை சிடுமூஞ்சி இடத்தைக்கொடுத்து விட்டது, இப்போது தமபதிகளின் அழகையும கல்யாண விமரிசை யையும் பார்த்துக் கிழத்திற்கு வெடித்துப்போகிறது. வெட்கங் கெட்ட மனுஷன்! இவன் முகத்தைப்பார்த்து ஆயிரம் ரூபாய் எப்படித்தான் தூக்கிக்கொடுக்கிறார்களோ?" என்று தமதம மனம்

போனபோக்கில் பேசிக்கொள்வதை சர்மா மேன்மாடத்திலிருந்து எப்படி அறியமுடியும்?

கல்யாணப்பிள்ளைக்கே இந்த விஷயம் கோபமுண்டாக்கியதால், உடனே தாங்கள் இறங்கியுள்ள சிறியவீட்டிற்கே எல்லோரையும் அழைத்துக்கொண்டு போய்விடலாம்—என்றான்.

பெண்ணின் பிதாவுக்கு அசாத்யமான கோபம் வந்துவிட்டது. வேண்டுமென்று இந்த மனிதன் தங்களை அவமானப்படுத்துவதாகவே எண்ணி விபரீதமான சண்டையில் வாக்குவாதம் வலுத்துவிட்டது. நீ...நானு...என்று ஏக வசனத்தினால் திட்டவும் ரகஸ்ய விஷயங்களை வெளியிட்டு, த்வேஷத்தீயை வளர்க்கவும் முற்பட்டுவிட்டார்கள்.

தேவநாதன் இவர்களைத் தடுத்து எத்தனையோ பணிவாயும் சாந்தமாயும் பேசி சமாதானத்தைச் செய்துவைப்பதற்குள் அவன் பாடு போதும், போதும் என்றாகிவிட்டது. எனினும் கல்யாணப் பெண்ணின் தகப்பனாராகிய கணேசனுக்கும் சர்மாவுக்கும் ஏற்பட்ட பகைமட்டும் மாறவே இல்லை. அன்றிரவே கல்யாணத்தை முடித்துக்கொண்டு தம் வீட்டிற்கு எல்லோரும் போய்விட்டார்கள். கும்பல் கலைந்தபிறகு ஏதோ பெரிய பதவியும் சாந்தியும் உண்டாகியதுபோல் சர்மாவின் மனத்திற்குத் தோன்றியது.

3

மேலும் இரண்டு நாட்களாயின; எத்தகைய விசேஷமும் இல்லை. வீட்டில் தேவநாதன், தேவகி, சர்மா மூவரைத்தவிர குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் யாருமே இல்லை. ஒரு பெரிய வீட்டில் — சுமார் 25 பேர்கள் வஸிக்கக்கூடிய இடத்தில் — இம்மூவர் மட்டுமிருப்பது ஏதோமாதிரி, பார்ப்பவர்களுக்குத் தோன்றும். ஒரு சமையல்காரன், ஒரு வேலைக்காரி, ஒரு தோட்டக்காரன் ஆக மூவர் தான் பணியாளர்கள் இருந்தார்கள்.

சர்மாவின் தாயார் காலம்முதல் இம்மூவரும் இருந்து பழகியவர்களாதலால் தேவகிக்கும் தேவநாதனுக்கும் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள்போலவே ஒரு நிம்மதியும் அவர்களிடத்தில் சுதந்திரமும் உண்டாகியிருந்தன. தேவநாதனுக்கும் தேவகிக்கும் வீட்டு வேலைக்காரிதான் சகலமும் கவனித்துவருகிறாள். இவர்களுடைய தாயார் இறந்து சுமார் 7, 8 வருஷமாயின. தாயற்றக் குழந்தைகளின் போஷணைக்காக அவர் மனைவியின் தூரத்துப் பந்துக்கள் தாம் வந்துஇருப்பதாகக் கூறியும் சர்மா அதற்கு இசையவில்லை. படாடோபமும் ஊதாரித்தனமும் வெளிவேஷத்தின் மதிப்பும் இவருடைய சுபாவமேயன்றி, 'எது நன்மை? எது தீமை? யார் அந்தரங்கமாகச் செய்யக்கூடியவர்கள்? யார் வேஷக்காரர்கள்?' என்பதை நினைப்பதே கிடையாது. மனைவி இறந்தபிறகு அவர்க

ளுடைய மனிதர்கள் வீட்டுப் படியே ஏறக்கூடாது என்று திட்டம் போட்டுவிட்டார்.

சர்மா வெறும் கர்மி என்பது யாவருமறிந்த விஷயமாதலால், அவரிடம் நெருங்கவே சிலர் வெறுத்தார்கள். தேவகியின் தாயார் இறந்த புதிதில் அதே ஏக்கத்தில் குழந்தை தவிக்கும்போதுகூட சர்மா கூடவிருந்து எதையும் கவனிக்காமல் மாணிக்கம் என்கிற வேலைக்காரிக்கே சகல பொறுப்பையும் கொடுத்திருந்தார்.

அன்று கல்யாணவீட்டுக்காரர்களுக்கும் சர்மாவுக்கும் நடந்த விகார சண்டையின் அனுவசிய த்வேஷத்தைக் கண்டு எல்லோரும் சர்மாமீதுதான் கோபித்துக்கொண்டு கூடிக்கூடி சர்மா செய்தது குற்றம் என்று மறைவில் திட்டினார்களேயன்றி, நேரில் எஜமானர் முன்பு சொல்வதற்கு யாருக்கு தைரியமுண்டு பாவம்? தேவகி அறியாத சிறுமியாகையால் நடுநடுங்கிப்போய் கல்யாணப் பெண்ணிடம் கெஞ்சிக் கூத்தாடி "கண்ணம்மா! இந்தச் சண்டையை இதோடு விட்டுவிடச்சொல்லு. உங்க அப்பா அதிகமான த்வேஷத்தைப் பாராட்டிப் பேசுகிறதைப் பார்த்தால் பயமாக இருக்கிறது. எனக்காகவும்என் அண்ணனுக்காகவும் உங்கஅப்பாவைமன்னிக்கும் படிக்குச் சொல்லு. நமக்குள் இதுபரியந்தமிருந்த நேசப்பான்மையும், உறவுமுறையும் வ்ருத்தியாகாவிடினும் இக் கல்யாணத்தின் நிமித்தம் பகைமையும் நீடித்த விரோதமும் ஏற்படக்கூடாது. இது தான் என் ப்ரார்த்தனை. என் தகப்பனார் பேசியது தப்பிதந்தான்; எனினும், அவர்மீது உங்கஅப்பா வீண் அபவாதங்களைக் கூறி,லஞ்சம் வாங்குகிறான், கொள்ளையடிக்கிறான், பெண்பித்துகொண்ட ஹீன புத்தியுடையவன், கருப்பு மார்க்கெட்டு கொள்ளைக்காரன்"...என்றெல்லாம் பலர் முன்னிலையில் அக்ரமமாய் அவதூறாகப் பேசுவது என் இதயத்தைப் பிளக்கிறது. இம்மாதிரியான வார்த்தைகளே த்வேஷத்தைப் பின்னும் வளர்க்கக்கூடிய கருவிகளாகிவிடும். என்னுடைய வேண்டுகோளை உன் பிதாவிடம் தெரிவித்து இந்தத் தீயை நீ உன் சாமாதானமென்கிற தண்ணீரைவிட்டு அவித்துவிடு" என்று மன்றாடிக் கேட்டுக்கொண்டாள்.

எது எப்படியிருப்பினும் கல்யாணத்தன்று ஆரம்பித்த த்வேஷம் வெகு உக்ரமாகப் பற்றிக்கொண்டுதான் வந்தது. சர்மா கடுவன்பூனைபோல் அங்குமிங்கும் உலாவியவாறு தபால்காரனை மறுபடியும் எதிர்பார்த்துக்கொண்டிருந்தார்...."சார்! தபால்"... என்ற குரலைக்கேட்டவுடனே,—பசி, பசி என்று பறக்கும் ஆத்மாவுக்கு இதோ விருந்து என்று கூவினால் எப்படி இருக்குமோ அத்தனை ஆர்வத்துடன், பரபரப்புடன் ஒரே ஓட்டமாக ஓடினார்.

தபால்காரன் ஒரு கவரையும் ஒரு பத்திரிகையையும் நீட்டிவிட்டுச் சென்றான். கவரின்மேல் விலாசத்தை வெகு துடிதுடிப்புடன் பார்த்தார். ஸ்ரீமான் தேவநாதனுக்கு, என்ற இருந்ததால் இதுபரியந்தமிருந்த பரபரப்பும் துடிதுடிப்பும் ஒரே நிமிஷத்தில் படுசூர்ணமாகிப் பல்லைக்கடித்துக்கொண்டே "இவனுக்கு யார் கடிதம்

எழுதுகிறவர்கள் இருக்கிறார்கள்? இவன் ஏதாவது தனித்த வேட்டையாடக் கிளம்பிவிட்டானா?''...என்ற ஆக்கிரகத்துடன் கடிதத்தைத் தாமே உடைத்துப்பார்த்தார்... அதில் 25 ரூபாய்க்கு ஒரு செக்கும் ஒருகடிதமும் இருந்தன. கடிதம் வருமாறு:—

"அன்புள்ள ஐயா!

தாங்களனுப்பிய "மனிதன் பழுத்தால்" என்கிற கட்டுரை வெகு அத்புதமாயிருந்ததால் எங்கள் "கடமை" என்கிற பத்ரிகையில் இவ்வாரத்து இதழில் ப்ரசுரித்து, இவ்வாரத்து உயர்ந்த கட்டுரைகளில் முதல்ஸ்தானம் கொடுத்து அதற்காக 25 ரூபாய் அன்பளிப்பாக அனுப்பியிருக்கிறோம். இது போன்ற ருசிகரமான விஷயங்களை அடிக்கடி எழுதி எங்கள் வாசகர்களின் நன்மதிப்பைப்பெற்று சிறந்த இலக்கிய சேவை புரியும் எழுத்தாளராகவேண்டுமென்று கேட்டுக்கொள் கிறோம்.

இங்ஙனம்
கண்ணப்பன்."

என்றிருந்ததைப் படித்ததும் உலகத்துத் தந்தைகளுக்கு உண்டாகும் சந்தோஷமோ, பெருமையோ ஏற்படாமல்..."மொட்டைப் பயலுக்கு இதுவேறு ப்ரவர்த்தகமா?...படித்துப் பட்டம்பெற்று உயர்ந்த உத்யோகப்பதவி வகித்துப் பெருமையும் புகழுமாய் சம்பாதிக்காமல் எழுத்தாளனும் எழுத்தாளன்! பிச்சைக்காசுக்குப் பறக்கிறான தடியன்? கட்டுரையாம் கத்திரிக்காயாம். பேரைப் பாரு. மனிதன் பழுக்கிறதாவது, மாங்காய் கொழுக்கிறதாவது!" என்று வெறுப்பும் ஆத்திரமும் அலக்ஷியபாவமும் நிறைந்த ஆத்திரத்துடன் பத்ரிகையைப் பிரித்தார். அதில் கொட்டை எழுத்தில் "மனிதன் பழுத்தால்" என்கிற வாக்கியத்தை போட்டு அதன்கீழ் "ஸ்ரீமான் V. தேவநாதன் எழுதியது" என்பதை மத்யஎழுத்தில் போட்டிருந்ததோடு, "இக்கட்டுரையின் ஒவ்வொருவரியும் உணர்ச்சி ததும்பும் உண்மைச்சரக்குகளை அள்ளிவீசி அபூர்வயாகச் சித்திரித்திருக்கிறார். வாசகர்களுக்கு இக்கட்டுரை ஓர் அபூர்வ விருந்து என்பதில் ஐயமில்லை."— பத்திராதிபர் —

என்று எழுதியிருந்ததைப் பார்த்துப் பின்னும் முகத்தைச் சுளித்துக்கொண்டு விஷயத்தில் கண்களைச் செலுத்தினர்.

"உலகம் உருண்டைவடிவத்திலிருக்கிறது. மனிதனுடைய அங்கங்களில் மிக ப்ரதானமான தலையும் உருண்டைவடிவத்தில் தான் அமைந்திருக்கிறது. உலகத்திற்கும், மனிதனின் தலைக்கும் எத்தகைய சம்பந்தமும் இல்லை என்றே மக்கள் நினைக்கலாம். ஆனால், உலகத்தைப்படைத்த பகவான், மனிதனின் தலையைப் படைத்தபகவான் இவ்விரண்டிற்கும் வெகுவெகு ஸூக்ஷ்மமான பொருத்தத்தை மிகத்தெளிவாகக் காட்டியிருப்பதைக் கூர்ந்து அறிவதுதான் மனிதனின் கடமையாகும். ஆதியந்தமற்ற எம்பெருமான் உலகத்தை ப்ரதானமாக ச்ருஷ்டிசெய்து அவ்வுலகத்தின் மூலம் மற்ற சகல அம்சங்களை ச்ருஷ்டித்திருக்கிறான். அதேபோல்

மனிதனை ச்ருஷ்டித்த பகவான் அந்தத் தலையின்மூலந்தான் மனிதனை மனிதனுக்கக்கூடிய அதிஅத்புத சக்திவாய்ந்த மூளையை உண்டாக்கி இருக்கிறான். அந்த மூளையின் விசாலத்தினால்தான் மனிதன் சகல வித அறிவையும் பெற்றுப் பிறர் மதிக்கக்கூடிய உயர்ந்த நிலையை அடைகிறான். அதனால்தான் எண்சாண் உடம்பிற்குச் சிரசே ப்ரதானம்; தலையில்லா முண்டமும் தலைவர்களில்லா வீடும் ஒன்று; தலைக்குமிஞ்சிய ஆக்கினை இல்லை; கோவணத்திற்கு மிஞ்சிய தரித்திர மில்லை" என்றெல்லாம் சிறந்த பழமொழிகள் பிறந்திருக்கின்றன. உருண்டையான உலகத்திற்குள் மக்களும் மக்கள் வாழ தானிய சம்பத்துகளும் வழிபட்டுத் தொழுது முக்தியடைய சிறந்த ஆலயங்களும் சத்சங்கங்களும் இன்னும் மற்ற இயந்திர சாலைகளும் எப்படி அமைந்திருக்கிறதோ அதேபோல் உருண்டைவடிவமான தலையில்தான் மனிதன் சகல அம்சத்திலும் சிறப்புற வாழுவதற்கான சமஸ்த உறுப்புகளும் அமைந்திருக்கின்றன. முக்யமாக மூளையை உத்தம வழியில் திருப்பும் உறுதியைக் கொடுக்கக்கூடியது புத்தி. அதை பகவான் உருண்டை வட்டமாகிய தலையின் முன்பாகத்தில் நெற்றிப்புரையில்தான் அமைத்திருக்கிறான். உலகத்தை எல்லாம் பார்க்கவும் நன்மைதீமைகளை நன்கறிந்து தன் வாழ்க்கையைச் செப்பனிட்டு நடத்திக்கொண்டுபோகும் அரியவஸ்துக்களாகிய கண்களையும் தலையின் உருண்டை வட்டத்துக்கு முகப்பில்தான் கொடுத்திருக்கிறார். கண்களில்லாவிடில் உலகத்தைக் காண முடியுமா?

மனிதன் ஆத்மரக்ஷணத்திற்கான எந்த விஷயத்தையும் அறிந்து உணர்ந்து நடத்தும் பஞ்சேந்திரியங்களில் ப்ரதான இந்திரியங்களை தலையின் வட்டத்தில்தான் அமைத்திருக்கிறார். பகவந்நாமத்தைச் சொல்லி மகிழவும் பகவானை தரிசிக்கவும் பரிமளமிகு வாசனை த்ரவ்யங்களால் அலங்கரிக்கப்பட்டுள்ள பகவானை ஸேவிக்கையில் அந்த ஆநந்தத்தை அனுபவிக்கவும் பகவானைப்பற்றி இசைபாடும் இன்பத்தைக்கேட்டு மகிழவும் சதா நெஞ்சில் எண்ணிப் பூரிக்கவு மான சகல இந்திரியங்களையும் உருண்டை வடிவத்திலுள்ள சிரசே தாங்குவதனால்தான் ஒரு நாட்டின் அரசனுக்குச் சிரசில் முடி சூட்டி பட்டாபிஷேகம் செய்கிறார்கள். சாதாரண ஏழை மனிதன் கூட தன்சரீரத்தைக் கட்டாந்தரையில் கிடத்திவிட்டுத் தன் காத்தைத் தலைக்கு மரியாதையாக அணைகொடுத்துப் படுக்கிறான். செல்வந்தர்கள்முதல் சகலரும் தலைக்குத் தலையணை இல்லாது படுப்ப தில்லை. இது வெகு சர்வசாதாரணமான வழக்கம் என்றுதான் உலகத்தோர் எண்ணி இருக்கிறார்கள். ஆனால், ஊன்றி கவனித்துப் பார்த்தால் தலைக்கு நாம் செய்யும் சிறந்த மரியாதையே இந்த முறையில் வளர்ந்து பரவி இருக்கிறது என்று நாம் கொள்ளவேண்டும். சிறந்த ஞானிகளையோ, ஆசாரியனையோ, பகவானையோ நமஸ்கரிக்கும்போது சிரசை அவர்கள் பாதத்தில் பதியவைத்துத் தான் நமஸ்கரித்து ச்ரேயஸைப் பெறுகிறோம்.

மனிதசமூகத்தையே மதிக்கச்செய்யும் ப்ரதான உறுப்பு உருண்டைவட்டமான தலையே என்பதை இன்னொரு உதாரணத்தினாலும் காணலாம். நாம் நமஸ்கரிக்கும் பெரியவர்கள் தலையில் தம் கைகளைத்தடவித்தான் "தீர்க்கஸுமங்கலீபவ...தீர்க்காயுஷ்மான் பவ. தீர்க்க ஆயுஷ்மதீபவ. சகலாபீஷ்டஸித்திரஸ்து"...என்றெல்லாம் வாழ்த்துகிறார்கள். முதுகையோ, தோள்களையோ தொட்டு வாழ்த்துவதில்லை. அக்ஷதையைத் தலையில்போட்டு ஆசீர்வதிக்கின்றார்களேயன்றி சரீரத்தில் போடுவதில்லை. தலையை ப்ரதானமாகக் கொண்ட சரீரத்தின் உறுப்புக்கள் ஒவ்வொன்றும் பகவானின் புனித கைங்கர்யத்திற்கே உதவவேண்டும் என்ற கட்டளையை நமக்கு இடுவதே தலையிலுள்ள மூளைதான்.

அத்தகைய சிறந்த சிரசிலுள்ள ரோமங்கள் வளர்ந்து பழுத்து மனிதசரீரம் வ்ருத்தாப்யத்தை யடைந்துவிட்டதாகக் காட்டுவது போல் வெளேரென்று நரைத்துவிடுகின்றன. நரையை எவரும் சாதாரணக் கண்களுடன் பார்க்கும்போது "ஐயோ! தலைநரைத்துவிட்டதே! யௌவனம் குன்றி கிழத்தனம் உண்டாகிவிட்டதே! அதைக் கருக்கடிக்கச்சாயமாவது பூசிக்கொண்டு போலி யௌவனத்தை வரவழைத்துக்கொண்டு பிறர்பார்வைக்கு அழகாக இருக்கலாமா! தலைநரைத்துவிட்டதால் அவமானமாயிருக்கிறதே!" என்று அவிவேகத்தினால் எண்ணி கருப்புமை பூசிக்கொண்டு பழைய யௌவனத்தை அடைந்துவிட்டதாக எண்ணி மகிழ்கிறார்களேயன்றி சரீரத்திற்கு ப்ரதானமான சிரசு தனது ரோமத்தின் துல்யமான வெண்மையைக் காட்டி மனிதனின் ஆசாபாச அழுக்காறுகள் நீங்கி சுத்த சத்துவநிலையை அடைந்து தூயமார்க்கத்தில் மிச்சமுள்ள காலத்தைக் கழித்து முக்தியடையவேண்டும் என்கிற ஆச்சரியமான தத்துவத்தை எடுத்துக்காட்டுவதாக எவரும் நினைப்பதே இல்லை.

மனிதன் பழுத்தால்கூட பழுக்காத இளமை சரீரத்தவனாகவே தன்னைச் செயற்கையும் போலியும் நிறைந்த அலங்காரத்தினால் கிழத்தனத்தை மறைத்துவிட்டால் மட்டும் கிழத்தனத்தை மறைக்க முடியுமா! காலத்தின் விபரீதத்திற்குச் சினிமா ஏற்பட்டிருப்பதால் அதன் அலங்காரப்படி ஏதேதோ பூசி சுருங்கியதோல்களைப் பிரித்து செழுப்பாகச்செய்துகொண்டு சில ஆண்களும் பெண்களும் உலாவுவதை நாம் பார்க்கிறோம். இது எப்படி இருக்கிறது என்றால் எருமைக்கு அலங்காரத்தைச்செய்து அது பசு, என்றுசொன்னால் எத்தனை பொருந்துமோ அத்தனை பொருத்தந்தான் கிழவர்கள் சிறு வயதினர்களைப்போல் சிங்காரித்துக்கொள்வதில் காண்கிறோம்.

என்று பிறந்தோமோ அன்று இறப்பு நிச்சயம்! ஆனால் இறப்புநிச்சயத்தைப்போல் பிறப்புநிச்சயம் கிடையாது. மனிதன் தன் கடமைகளைச் சரிவரச் செய்து சிறந்த உத்தமசீலனாய் தர்மகாரியங்களைச்செய்து சத்யவானாக இருந்து அவன் இறந்தால் அவனுக்குப் பிறப்பு இல்லாமல்போகிறது. பிறந்துவிட்ட எவருக்

கும் இறப்பு நிச்சயம். மறுபிறப்பு இல்லாதிருக்கவேண்டிய எண்ணத்துடன் தன் வாழ்நாளை ஜெயப்ரதமான முறையில் நடத்த முதலிலிருந்தே அறிவைத் துணைகொண்டு பழகினல் பிறப்பைக் கட்டாயம் தவிர்க்கமுடியும்.

மனிதஜென்மம் எடுத்தபிறகு அதன் உண்மைத் தத்துவத்தைப் பற்றி அறியக்கூட நினைக்காமல் அழகு, யௌவனம், ஆடல் பாடல் ஊடல், பொருள் தேடல் ஆகிய மார்க்கங்களில் காலத்தைச் செலவிட்டு முக்கால்வாசி ஆயுளையும் கழித்துவிடுகிறோம். அதன்பிறகாவது மனிதன் என்கிற தத்துவத்தை அறியும் ஞானமார்க்கம் பிறக்கிறதா! அதுதானில்லை. ஐயோ! பல் விழுந்துவிட்டதே. ஸெட்டுப்பல்லை மாட்டிக்கொண்டு அந்த ஊனத்தை மறைக்கவேண்டும். தலைக்குக் கருப்பு மை பூசி அந்த விகாரத்தை மாற்றவேண்டும். தேகம் கட்டுத் தளராது இருப்பதற்கு அவுஷதங்களும், கோழிமுட்டை முதலிய தகாத பதார்த்தங்களும் தின்று சதைச் சுருக்கத்தைப் போக்க வேண்டும். நடையில் விருவிருப்பு குறையாதிருக்கக் கால்களுக்குத் தைலம் தடவி உருகி பட்டைகள் கட்டி புஷ்டிஉண்டாக்கிக்கொண்டு தம்மை இளம் வாலிபன் என்று தன்னைத்தானே நினைத்துக் கொண்டு மணம் செய்துகொள்ளவும் சில கிழங்கள் துணிந்து முன்வருகிறார்கள்......

இந்தப் பாகத்தைப் படிக்கும்போது கிழவரின் கண்கள் முக்கண்ணனின் நெற்றிக்கண்ணைப்போலவே தீப்பொறி கக்க வாரம்பித்தன ...பல்லைக் கடித்து முணமுணத்தவாறு கையிலிருந்த பத்ரிகையை டார்ர்ர்ரென்று கிழித்து எறிந்துவிட்டு நேரே கடிதத்துடன் தன் மகனின் ரூமுக்குச் சென்றார். அங்கு தேவநாதனைக் காணாததால் கோபக்கனல்வீச மறுபடியும் தன்னிருப்பிடம்வந்தார். கிழித்துப்போட்டுள்ள பத்ரிகைத் துண்டுகள் கிழவரைப் பார்த்துச் சிரிப்பதுபோல் ஒரு அதிர்ச்சியான தோற்றம் தோன்றி அவருடைய ஆத்திரத்தைப் பின்னும் கிளறின.

4

"தேவகி! தேவகி! இன்று ஏதாவது பத்ரிகை தபாலில் வந்ததா! நான் ஒரு கட்டுரை எழுதி கடமை என்கிற பத்ரிகைக்கு அனுப்பி இருந்தேன். அது ப்ரசுரமாகியிருக்கிறதாம். என் சினேகிதர்கள் படித்துவிட்டு எனக்கு ப்ரமாதமாய்ப் புகழ்மாலை சூட்ட வந்துவிட்டார்கள். நான் இன்னும் பார்க்கவே இல்லை. இன்று தபால்களை யார் பார்த்தார்கள்?"......என்று ஆவலே வடிவாகக் கேட்டான்.

சிரித்த முகத்துடனும் ஆனந்தத்துடனும் வந்த தேவகி..."உன் கட்டுரையா அண்ணு, பத்ரிகையில் வந்திருக்கிறது? ஐயோ! நான் பார்க்கவேண்டுமே...இன்று தபால்காரனையே நான்பார்க்கவில்லை, அப்பாவிடம் கொடுத்திருக்கிறுனே என்னவோ! அப்பாவின்

ரூமைத்திறந்து பார்க்கிறேன்" என்று கூறியவாறு தேவகி ஓடிச் சென்று ஏமாற்றத்துடன் திரும்பிவந்து, "அண்ணு! இன்று என்னமோ புதியமுறையாய் அப்பா தன் ரூம்கதவைப் பூட்டிக்கொண்டு போயிருக்கிருரே, இதென்ன வழக்கம் அண்ணு?" என்று வியப்புடன் கேட்டாள்.

தேவநாதன்:—பூட்டியிருக்கிருரா!......பேஷ்! தேவகீ! இந்த உலகம் ஒரு நாடகமேடை. இதில் எத்தனையோ விசித்ரங்களெல்லாம் நாடகமாக நடக்கும். அவைகளைக்கண்டும், கேட்டும், படித்தும், உணர்ந்தும், அனுபவித்தும் அறிந்தால்தான் உலகானுபவமும் பொறுமையும், தெளிந்த ஞானமும், சிறந்தவிவேகமும், ஒழுக்கமும், அன்பும், பக்தியும் உண்டாகும்...என்று நம் தாயார் அடிக்கடி சொல்லியபோது அதன் உண்மையை நான் உணரவில்லை. பெரியவர்கள் ஏதோ சொல்கிருர்கள் என்று எண்ணி விளையாட்டாகப் போய்விடுவேன். அந்த மந்திரவாக்கியங்களின் உண்மை இப்போதுதான் எனக்குத் தெரிகிறது. தேவகீ! நீ எதையும் காதில் வாங்கிக்கொள்ளாதே. நீயோ வயதில் சிறியவள்; இருப்பினும் உன்னை முதலில் நல்ல இடத்தில் விவாகத்தைச் செய்துகொடுத்து விட்டால் எனக்கு மனத்திலுள்ள கவலை முதலில் நீங்கும். நம் தாயாரின் ஆத்மா சாந்தியடையும்— என்று முடிப்பதற்குள் வெட்கத்தினுல் தலைகுனிந்த தேவகி "போ அண்ணு! இதற்குள் கல்யாணம் என்ற பேச்சை எடுக்காதே; நான் விவாகமே செய்து கொள்ளாது டாக்டர் தொழிலுக்குப் படித்து பாஸ்செய்து உலகத்திற்கு உபகாரமான முறையில் ஸேவைசெய்வதையே நான் விரும்புகிறேன். அதற்கு அநுகூலமாகவும் எனக்கு த்ருப்தியாகவும் உள்ள உத்தமபுருஷன் கிடைத்தால் பிறகு விவாகத்தைப்பற்றிச் சிந்திக்கலாம். இப்போது அதைப்பற்றிப் பேசாதே அண்ணு! என்னைவிட, அப்பாவிடம் சொல்லி உனக்குத் தகுந்த பெண்ணைத் தேடி விவாகம் செய்துவிட்டால் வீட்டில் அலங்காரமாயும் ஆதரவாயும் பொறுப்பேற்றி நடத்தத் தலைவியாயும் மன்னி இருப்பாள். எனக்கும் அதில் ஆதரவு உண்டாகும். அதைச்செய்யாமல்... என்று பேசிமுடிப்பதற்குள் தேவநாதன் தங்கையின் முதுகில் தட்டிக்கொடுத்துவிட்டு,

"போதும் போதும். சிறத்தம்மா கண்ணு! நூத்துப்பாட்டியைப்போல் நீ பேசவேண்டாம்." என்று கூறிக்கொண்டே மாடிக்குப் போய்விட்டான்.

வழக்கம்போல் அண்ணனுடன் பலகாரம் சாப்பிட்டுப் பின் தலைவாரிப்பின்னிக்கொண்டு உடைமாற்றியபிறகு அண்ணனுடன் பீச்சுக்கு உலாவப்போவதற்காகக் காத்திருந்தாள். வழக்கத்திற்கு விரோதமாய் 5 மணிக்குள்ளேயே சர்மா ஆபீஸிலிருந்து வந்துவிட்டார். பாவம்! தேவகிக்கு அன்று நடந்தவிஷயம் எதுவும் தெரியாதாகையால் "அப்பப்பா! நம்ம அண்ணு ஒரு கட்டுரை எழுதியிருக்கிருராம். அது ஒரு பத்திரிகையில் வந்திருக்கிறதாம்.

காலேஜிலிருக்கும் சினேகிதர்கள் சந்தோஷத்தையும் பாராட்டுதலையும் தெரிவித்து அண்ணாவை ப்ரமாதப்படுத்துகிறார்களாம். அந்த பத்திரிகை நமக்கு வந்ததாப்பா! நான் படிக்கவேணும்" என்று சகோதரனிடத்திலுள்ள அதிக ப்ரீதியையும், அவன் மேதைத்தனத்தைத் தான் ஆனந்தத்துடன் அனுபவிக்கும் சந்தோஷம் த்வனிக்க, அக்கட்டுரையைப் படிக்கவேண்டுமென்கிற பேராவலையும் காட்டிக் கள்ளங்கபடற்ற நிலையில் கேட்டாள்.

ஏற்கெனவே கோபமும் ஆத்திரமும் தாண்டவமாடும் ம்ருகாவேசம் நிறைந்த சர்மா பெண்ணை ஒரு முழி முழித்துப்பார்த்துவிட்டு, "பாராட்டுதலாம். பற்றிஎரிவதாம. காலேஜில் படித்துப் பட்டம் பெறும் அழகு இதுதானா! உன் அண்ணனின் விபரீதப் போக்கை இனி என்னால் பொறுக்கமுடியாது. பணத்தைக்கரைக்கும் கரையானா உன் அண்ணன்? இனி இம்மாதிரி மதிப்பற்று கண்ணியம் இழந்து தான்தோன்றித்தனமாய் திரிய நான் விடமாட்டேன். இம்மாதிரி இவன் செய்வதாயின் படிப்பை நிறுத்திவிட்டு நாடோடியாய்த் திரியட்டும். ஒரு கண்ணியம் வாய்ந்த பெரிய உத்தியோகஸ்தனின் மகன் என்ற முறையில் நடக்கத்தெரியாமல் கேவல்மான முறையில் புத்திபோவதை என்னால் பொறுக்கமுடியாது. ஜாக்ரதை. இனி அந்த புத்திகெட்டவனுடன் நீ கூட அதிகமாகப் பழகவேண்டாம்" என்றபடியே மாடிக்குப்போய்விட்டார்.

எத்தனையோ ஆவலுடன் பிதாவைக்கேட்டதற்கு, பேரிடி இடித்ததுபோல் கூறிய வார்த்தையையும் கடுமையான திட்டத்தையுங்கேட்டு இடியோசையைக்கேட்ட நாகம்போல் நடுநடுங்கி அலறிப்போய்க் கணணீர் பெருகத்தம்பித்து நின்றுவிட்டாள்.

இந்த தடுமாற்றமான நிலைமையில் திடீரென்று அவளுடைய தாயாரின் நினைவு வந்து அவள் நெஞ்சைபள்ளியதால் அவளையறியாமல் தேம்பித்தேம்பியழுதவாறு "ஐயோ! அண்ணாவிடமா பேசக்கூடாது? அண்ணாவா அயோக்யன்?...அம்மா! நீ இறந்துவிட்டதனால்தானே இத்தகைய நிலைமை எங்களுக்கு உண்டாகிவிட்டது. எத்தனையோ உத்தமனாகவிருக்கும் அண்ணனை அப்பா சொல்லும் அனியாயம் என்சின்னஞ்சிறு மனத்திற்கே தாங்கமுடியவில்லையே. நீ இருந்தால் இப்படி எல்லாம் நடக்கவிடுவாயா! நடந்தால்தான் பொறுப்பாயா!" என்று எண்ணி விசும்பிவிசும்பிப் புலம்புகையில் மாடிக்குச்சென்ற தேவநாதன் உடைகளை மாற்றிக்கொணடு வருகையில் தேவகி அழுவதைககணடு மனம் துடிததவனாய், "தேவகி! ஏம்மா! ஏன் அழுகிறாய்? என்ன சமாச்சாரம? எங்காவது அடிபட்டுவிட்டதா? தேள கொட்டிவிட்டதா; என்ன நடந்தது சொல்லம்மா!" என்று தன்னுள்ளத்தில் கொந்தளிக்கும் ப்ரியம் பூராவும் காட்டிக்கேட்டான்.

தேவகி விசும்பியழுதுகொண்டே நடந்ததைக்கூறி மீண்டும் துக்கம் பொங்கியழுதாள். தேவநாதனுக்கு ஒன்றுமே தோன்ற

வில்லை. "இதென்ன அனியாயச் செய்கை? இத்தனை வயதாகிய பிறகு தன் புத்தி கோணவழியில் செல்வதைத் தடுக்கமுடியாமல் அந்த வேகத்தின் கொடுமையில் தான் பெற்ற மக்கள்மீதுகூட குற்றமும் குறையுங்கொண்டு இம்மாதிரி த்வேஷத்தை வளர்க்கத் துணிவதுண்டா! உலகமறியாத சிறுமி அவளுடைய இளந்தளிர் போன்ற உள்ளத்திலா இத்தகைய மித்ர த்வேஷவிதையை விதைத்துக் கலக்குவது? மனிதத்தன்மைகூடவா இந்தக்கண்மூடித் தனமான அல்ப சபல ஆசையில் புதைந்துவிடும்?" என்று தனக்குள் தான் நினைக்கும்போது எதிர்காலத்தின்போக்கும் பயங்கரமும் மின்வெட்டுப்போல் அவன் உள்ளத்தைத் தாக்கியது.

தகப்பனாரின் வார்த்தைகள் அவன் இதயத்தில் அம்பு பொத்துவதுபோல் குத்தின. எனினும், தான் தகப்பனாருக்கு அடங்கியவனாகவே நடக்கவேண்டுமேயன்றி அவருக்கு மிஞ்சி நடக்கக் கூடாது என்கிற உத்தமலக்ஷணகுணத்தையே அவன் அனுஷ்டித்து வருவதால் தகப்பனார்மீது கடுமையான கோபம் வந்தபோதிலும் அதையடக்கிக்கொண்டு தன் கண்களில் உதிரும் நீரைத்துடைத்தவாறு தங்கையை முதுகில் தடவிக்கொடுத்து "அம்மணீ! அழா தேம்மா! நீ அழுதால் என் உள்ளம் உருகுகிறது. எத்தனைதான் அப்பா திட்டியபோதிலும் நாம் நமது கடமையையும் அன்னையும் பிதாவும் முன்னறிதெய்வம், என்று சிறியபிராயத்தில் நாம் படித்த மந்திரவாக்யத்தையும் நாம் மறக்கக்கூடாது. நமக்கு அவரே கதி. அவரே நமது க்ஷேமத்தைக் கோருகிறவர். இருப்பினும் ஏதோ காலவித்தியாஸத்தினால் புத்திமாறாட்டத்தில் எப்படியோ முறை தப்பி நடக்கிறார். நீ கோபித்துக்கொள்ளாதே. அன்பினாலேயேதான் அவருடைய மனத்தை நாம்மாற்றவேண்டும். ஆகையால் நீ அவர் சொல்லியதுபோல், என்னுடன் அதிகம் நெருங்கிப் பழகாததுபோலவே அவர் எதிரில் நடந்துகொள். அதற்குப் பிறகு என்ன நடக்கிறதோ பார்க்கலாம். அதோ அப்பா இறங்கி வரும் ஓசை கேட்கிறது. அவருக்கு வழக்கம்போல் நீ காப்பி, டிப்பன் கொண்டுவந்துகொடு" என்று சமாதானம் செய்துவிட்டுப் பின்புறம் சென்றுவிட்டான்.

தான் எதையுமே காட்டிக்கொள்ளாத முறையில் தேவகி உள்ளேசென்று தகப்பனாருக்குப் பலகாரம் காப்பி கொண்டு வந்தாள். அல்பஆசையில் மனத்தைப் பறிகொடுத்துவிட்டு மூர்க்கத் தனமாக இருக்கும் சர்மா "எனக்கு டிப்பனும் வேண்டாம். எதுவும் வேண்டாம். நாளையதினம் 20 பேருக்கு டீபார்ட்டி நடக்க வேண்டும்; வீட்டைச்சுத்தம் செய்து அதற்கான ஏற்பாட்டைச் செய்துவைக்கவேண்டும்" என்று கடுமையான கரகரத்த குரலில் சொல்லிவிட்டு "இந்தா! இக்கடிதத்தை உன் அண்ணனிடம் கொடு!" என்று சொல்லியவாறு விருவிரென்று போய்விட்டார்.

மறுபடியும் கண்ணீர் தளும்ப தேவகி நிற்கையில் தேவநாதன் அங்கு வந்தான். தேவகி கடிதத்தை அவனிடம் கொடுத்து "இதை

அப்பா உன்னிடம் கொடுக்கச்சொன்னுர்" என்ருள். கடிதத்தை வாங்கிக்கொண்ட தேவநாதன் கலக்கமும் வியப்பும் அடைந்து "எனக்கா! அப்பாவா கொடுக்கச்சொன்னுர்? மேல்விலாஸமே காணவில்லையே...என்னிடம் நேரில் சொல்லாமல் கடிதத்தில் என்ன எழுதி இருப்பார்?" என்று வியப்புடன் படித்தான்.

"பெற்றவர்களுக்கு அடங்கிக்கிடக்கவேண்டியது என்கிற கடமையைத் தன் வாழ்க்கையில் நடைமுறையில் அனுஷ்டிக்க வகையறியாது கடமையை மறந்த கயவனுகிய நீயா 'மனிதன் பழுத்தால், மாடு இழுத்தால்' என்று வெட்கங்கெட்டுக்கூற வந்து விட்டாய்? தான் சரியாக நடக்கும் உத்தமன்தான் பிறருக்கு புத்திபுகட்ட வருவதற்கு லாயக்கேயன்றி, உன்னைப்போன்று பெத்தபிதாவின் மனங்கோணும்படியாக நடக்கும் தான்தோனி



களுக்குப் பிறருக்கு உபதேசம்செய்யக் கடுகளவும் உரிமைகிடையாது. அறிவுகெட்ட மடையா! என்னைத் திருத்தவும் அடக்கவும் நீ எனக்கு எஜமானனல்ல. என்னுடைய சொந்த ஹோதாவில் நான் என்னிஷ்டப்படி நடக்க எனக்கு உரிமைஉண்டு. அல்ப நாய்களாகிய உங்களுக்காக நான் ஆண்டிப்பரதேசியாகச் சாக வேண்டுமென்று எந்த சட்டத்திலும் சாஸ்திரத்திலும் எழுதி வைக்கவில்லை; என்னிஷ்டம். நான் மறுமணம் செய்துகொள்வதில் நீ ப்ரவேசிக்கவேண்டாம். கட்டாயம் நான் கல்யாணம் செய்துகொள்ளத்தான்போகிறேன். முட்டாள்தனமாக இதுவிஷயத்தில் நீ தலையிட்டால் அதற்குமேல் விளைவதை நீ அனுபவித்துத்தானாக வேண்டும். தேவகியிடம் அதிகம் பழகவேண்டியதில்லை. குடும்பத்தின் மானத்தைக்காக்காக பிள்ளையின் நேசம் அச்சிறிய பெண்ணுக்கு வேண்டாம். என் சொத்தில் ஒத்தைக்காசுகூட பூர்வார்ஜிதம் இல்லை என்பதை மறக்காதே. உஷாராகப்பிழைக்க வழி தெரிந்துகொள்ளு. காலேஜில் உன்னுடைய நடவடிக்கைகள் சற்றும் நன்றாகஇல்லை என்று உன்னைப் போன்ற மாணவர்கள் சிலர் என்னிடம் புகார்செய்யும்போது என்மானம் சிதறிவிடும்போலிருக்கிறது. ஒருபெரிய கண்ணியம் வாய்ந்த உத்யோகஸ்தனின் மகளாகிய நீ உன்போன்ற மாணவர்களிடம் பிச்சைஎடுக்கிறாயாமே! உனக்கு வெட்கமாயில்லை?...ஏழைகளுக்கு உதவியாம். சமூக சேவையாம். க்ராமத்தொண்டாம். அனாதாலய திருப்பணியாம் ...எதை எதையோ சொல்லிப் பிச்சைகேட்டு பணம் வாங்கும் வெட்கக்கேட்டை அவர்கள் சொல்லிச் சிரிக்கிறார்கள். நானே இதைப்பற்றிக் கண்டிக்க எண்ணினேன். உன் கட்டுரையே இதைப் பற்றித்தூண்டியது. ஜாக்ரதை....

என்று எழுதியிருந்ததை முதலில் தனக்குள் படித்துக்கொண்டான். ஒருபுறம் வெட்கம், ஒருபுறம் கோபம், ஒருபுறம் துக்கம் ஆக பலவித உணர்ச்சிகளுடன் கடிதத்தைத் தங்கையிடம் கொடுப்பதா! வேண்டாமா! இளந்தளிர்போன்ற உள்ளத்தில் ஏற்கெனவே கலக்கமும் துக்கமுமிருப்பது போதும். இதைப்படித்து இன்னும் அவள் வருந்தவேண்டாம்....என்று தீர்மானித்துக்கொண்டு தன் மனோபாவங்களை எல்லாம் மாற்றி வெகு ப்ரயாசையுடன் கடகட வென்று சிரித்தான். கடிதத்தை ஜேபியில் மறைத்துக்கொண்டான். இதன் உண்மையறியாத பேதைப்பெண் "என்ன அண்ணா கடிதத்தில் என்ன இருக்கிறது? இப்படிச் சிரிக்கிறாயே!" என்றாள்.

மகா சாமர்த்தியசாலியும் சமயோசித அறிவும் உள்ள தேவநாதன் "ஒன்றுமில்லை தேவகி! எனக்கும் உனக்கும் அப்பா கல்யாணத்தைச் சீக்கிரம் செய்யப்போகிறாராம். அதைத்தான் எழுதியிருக்கிறார். அதைப்படித்ததும் சிரிப்பு வந்துவிட்டது." என்றான்.

இதைக்கேட்ட தேவகியும் தன் அத்தனை குழப்பத்தையும் மறந்து கடகடவென்று சிரித்தாள். அவளது சிரிப்பைக்கண்டதும் தேவநாதனுடைய உள்ளத்தில் சந்தோஷம் அலைமோதியது.

'தேவராஜன்' என்றிருக்குமிடங்களில் 'தேவநாதன்' என்று படிக்கவும்.

ஸத்துள்ள ஆகாரம்

(ஸ்ரீமதி V. C. அங்குளி, B. Sc., M. B. B. S)

அலமேலு:—வா, சுமதி! எது இன்று அபூர்வமாக இருக்கிறது உன்னுடைய வருகை!

சுமதி:—அதிருக்கட்டும். நீ என் இப்படி இளைத்துத் துரும்பாயிருக்கிறாய்? குழந்தைகளெல்லாம் என் இப்படி மெலிந்து இருக்கிறார்கள்? உன்னை அடையாளமே தெரியவில்லையே!

அலமேலு:—நான் என்ன செய்வேன் சுமதி? குழந்தைகளுக்கு இந்த ரேஷனினால் சரியான சாப்பாடு கிடையாது. அவைகளுக்கு ஏதோ உடம்பு வந்துகொண்டிருக்கிறது. கடைசிப் பயல் பாலு இருக்கிறானே, அவனுக்கு ரிக்கட்ஸ் (Rickets) என்ற வியாதியாம். "அடெக்ஸொலின், (Adexolin drops,) தவிர நிறைய பால் முட்டை இவைகள் கட்டாயம் கொடுக்கவேண்டும், இல்லாவிட்டால் உடம்பு ரொம்ப கெட்டுப்போய்விடும்" என்று டாக்டர் சொல்லுகிறார். அவனுக்கு மூத்தவனுக்கு பல் ஈறு கொழுத்து இரத்தம் வந்துகொண்டேயிருக்கிறது. எதுவோ விடமின் 'ஸி' யாம். (Vit C.) அந்த மாத்திரையை வாங்கிக் கொடுக்கிறேன். ஒவ்வொருத்தருக்கும் எதுவோ விடமின் குறைவு என்று சொல்லி, மாதம்பிறந்தால் குறைந்த பக்ஷம் ரூ 50-க்கு மருந்து வாங்கவேண்டியிருக்கிறது. போதாததற்கு ரேஷன் அரிசியோடு பாடுபடவேண்டியிருக்கிறது! கொடுக்கும் ஆழாக்கு அரிசியில் கல், மண், உமி மூன்றில் ஒருபாகம் போக மீதிதான் தேறுகிறது. இது போதாமல் சிலவேளை சாப்பாட்டிற்குப்பதில் பலகாரம் செய்கிறோம். அரைப்பட்டினியும் இருக்கிறோம்!

சுமதி;—அரிசியைத்தவிர, மற்றவை ரேஷனில்லையே.

அலமேலு—மற்றவை என்னத்தை வாங்கினால்தான் சரப்படுகிறது? நமக்கு அரிசிதானே பிரதானம். சாப்பாடு, டிபன் எல்லாவற்றிற்கும் அரிசிதானே வேண்டியிருக்கிறது?

சுமதி:—நானும் அப்படித்தான் நினைத்தேன், அலமு! ஆனால் காஞ்சனா அரிசி அதிகமாக உபயோகப்படுத்தாது, குழந்தைகளை நன்றாக வளர்த்துவருவதைப் பார்த்து அவளிடமிருந்து சில புதியமுறைகளைக் கற்றுக்கொண்டு வந்தேன் ... அதோபார், அவளே வருகிறாள்!

சுமதி, அலமு இருவரும்:—வா காஞ்சனா! இப்போ உன்னைப் பற்றிதான் பேசிக்கொண்டு இருந்தோம். சமயத்திற்கு வந்தாய்.

காஞ்சனா:—சரிதான். நான் என்ன தப்பு செய்துவிட்டேன்?

சுமதி:—உனக்கு எப்போதும் குதர்க்கம் செய்யத்தான் தெரியும். உன்னைப்பற்றி ஒருவரும் குற்றம் கூறவில்லை. உன் வீட்டைப்பற்றியும் உன்னுடைய சாமர்த்யக் குடித்தனத்தைப் பற்றியும்தான் பேசிக்கொண்டிருக்கிறோம். அலமுவின் வீட்டிற்கு ரேஷன் அரிசியே போதவில்லையாம். சில வேளை பட்டினியிருக்கும் படிகூட நேர்ந்துவிடுகிறதாம். நீ எப்படி ரேஷன் அரிசியை வைத்துக்கொண்டு சமாளிக்கிறாய் என்று சொல்லிக்கொடு.

காஞ்சனா:—எனக்கு என்னவோ ரேஷன் அரிசி சுமாராகப் போதுகிறது. ரேஷன் கோதுமையை என்னசெய்கிறாயாம்?

அலமு:—கோதுமையை என்றைக்காவது பூரி செய்யமுடிகிறது. அதற்குமேல் என்ன செய்யலாம்?

காஞ்சனா:—நன்றாகச்சொன்னாய்! அரிசியை விட, கோதுமையில் சத்துவஸ்துக்கள் அதிகம். எங்கவீட்டில் தினமும் கோதுமை உபயோகப்படுகிறது. நமக்கு அரிசி, கோதுமை இவைகள் இரண்டும் ரேஷன் முறைப்படியும், மற்றவையாகிய ரவை, பருப்பு, பால், பழங்கள், கிழங்கு, காய்கறி, சர்க்கரை முதலியவைகள் எவ்வளவு வேண்டுமானாலும் கிடைக்கின்றன.

இயற்கைச் செல்வம் நிறைந்துள்ள நம் நாட்டில் பெரும்பாலான மக்கள் தரித்திரத்தில் மூழ்கியிருக்கின்றனர். மூட நம்பிக்கைகளிலும் அர்த்தமற்ற பழக்கவழக்கங்களிலும் கல்வியின்மை காரணமாக அதிக ஈடுபாடுள்ளவர்களாக இருக்கிறார்களே தவிர, குறைந்தபக்ஷ ஸத்துள்ள ஆகார நியதியுள்ளவர்களாகக் காணவில்லை. சரீரத்திற்கு வேண்டிய சரியான அளவு உணவும் கிடைப்பதில்லை......பால், தயிர், வெண்ணெய் நெய் முதலியவைகளை அரிசியைவிடப் பிரதானவஸ்துவாகக் கருதவேண்டும். இங்கிலாந்தில் பால், அதனுடைய இதர வஸ்துக்கள், செலவழியும் கணக்கு எடுத்துபார்த்ததில், ஒருவருக்கு ஒரு வருஷத்திற்கு 700 பைண்ட் பால் ஆகிறது. குறைந்த பக்ஷம் ஒரு நாளைக்கு 1½படி பால் ஆகிறது.நம் தேசத்திலோ, அதில் ¼பாகமாவது ஜனத்தொகையில் கால்பங்குக்காவது கிடைக்கிறதா என்பது சந்தேகம். பாலிலிருக்கும் சத்து வகைகள் வேறு எந்த வஸ்துவிலும் இல்லை. பால் குறைத்துச் சாப்பிடுவதால்தான் நம் தேசத்தில் ரிக்கெட்ஸ், கண்வலி A, D விடமின் குறைவான வியாதிகள் நிறைய இருக்கின்றன. ஆகையால்தான் நான் ஒருவருக்கு குறைந்தபக்ஷம் ஒருநாளைக்கு அரைப்படிப்பால் என்று கணக்குவைத்து வாங்குகிறேன்.குழந்தைகளுக்கு காலையில் காப்பிக்குப் பதிலாக கோதுமைக்கஞ்சிதான் கொடுக்கிறேன். தவிர கோதுமையில் சப்பாத்தி, பரோடா, தோசை முதலியவைகள் செய்கிறேன். இரவு சாப்பாட்டில் பாதி ஐடெம் சப்பாத்தியும் பருப்பும்; வேண்டுமானால் சாதம்......

அலமு:—நீ என்னவோ சொல்கிறாய். என்ன விருந்தாலும் வயிறநிறைய சாதம் சாப்பிடுகிற மாதிரி ஆகாது.

காஞ்சனா:—நீ சொல்வது வாஸ்தவம்தான். நமக்கு வேலை செய்வதற்குச் சக்தி கொடுக்கும் ஆகாரம் அரிசி, கோதுமை,

கம்பு, கேழ்வரகு முதலிய சர்க்கரை சத்துள்ள பதார்த்தங்கள் தான். ஆனால், நாம் சர்க்கரை பதார்த்தங்களை அளவுக்கு மிஞ்சி ஜாஸ்தியாக உபயோகப்படுத்துகிறோம் என்பது என் கருத்து. சாதாரணமாகவே நாம் எல்லோரும் அதிகமாய் சாதமும், குறைவாக மற்ற பதார்த்தங்களும் உபயோகப்படுத்துகிறோம். அதற்குக் காரணங்கள் இரண்டு: ஒன்று முக்கியமாக வறுமை; இரண்டாவது அறியாமை. மற்ற பொருள்களை வாங்குவதற்கு பாமர மக்களுக்குச் சக்தி இல்லை. ஆகையால்தான் அவர்கள் சாதம் நிறைய சாப்பிடவேண்டியிருக்கிறது. சாதாரணமாக இருக்கும் மக்களுக்கு வயிறு நிறைய சாதம் சாப்பிட்டுப் பழக்கமாய்விட்டதால், வேறு ஒரு வஸ்துவும் பிடித்தமாக இல்லை. அரிசிக்குப் பதிலாக கிழங்கு வகைகளில் சர்க்கரைவெள்ளிக்கிழங்கு, உருளை முதலிய வகைகள். ஸெமொலினு ரவை, பழங்களில் வாழைப்பழம் இவைகள் (Carbohydrates) சர்க்கரை பதார்த்தங்களைச் சேர்ந்தவை. துவரை, உளுந்து, பயறு, பட்டாணி, மொச்சை, காராமணி முதலிய பருப்புவகைகளில் நிறைய (Protein) சத்தும், அதோடு கூட சர்க்கரை பதார்த்தங்களும் நிறைய இருக்கின்றன. இவைகள் எல்லாம் ஒருவாறு சீர்ப்படுத்தி நம்முடைய சாப்பாட்டில் சேர்த்துக்கொண்டால், அரிசியின் குறைவை இவைகளால் நிவர்த்திக்கலாம். மேலும், காய்கறிகள் நாம் சாதாரணமாக சாப்பிடுவது மிகவும் குறைவு. அப்படிக்கூடாது.

அலமு:—நீ எக்தெந்தசாமானை எப்படி வைத்துக்கொண்டு உபயோகிக்கிறாய்?

காஞ்:—காலை சமையலில் சாதாரணமாக ஒரு கோசுமல்லி ஏதாவது ஒருகிழங்கு பொடிமாஸ், பட்டாணி முதலிவைகளால் ஒருசுண்டல், ஒருகரி, ஒருகூட்டு ஒருபச்சடி யிருக்கும். பழங்கள் இருந்தால்கூடப் போடுவேன். வெள்ளிக்கிழமை ஞாயிறு என்று சாக்குவைத்து அன்றைக்கு ஒருதித்திப்பும் ஒருகாரமும் ஒருபாயசம் என்று சேர்த்துவிடுகிறது. ரசத்திற்கு ஒருவரும் சாதம்கலந்துகொள்வதில்லை, கிண்ணத்தில் வாங்கி குடித்துவிடுவதுதான் பழக்கம். நான் சாதத்திற்குமுன்னமே, மற்ற காய்கறி வகைகளை பரிமாறுவது வழக்கம். அவைகள் சாப்பிட்டுவிட்டால் சாதம் கொஞ்சம்தான் சாப்பிட முடியும். அதனால் உடம்பு ஒன்றும் கெட்டுப்போய்விடவில்லை.

அலமு:—டிபனுக்கு என்ன செய்கிறாய்?

காஞ்சனு:—பருப்பு, ரவை இவைகளில்தான் முக்கால்வாசி நாள் டிபன். ரவையில் சேமியாசெய்து அதைக்கொண்டு தேங்காய்ச் சாதம், எலுமிச்சம்பழச்சாதம் ஏதாவதுசெய்கிறது. ரவைஉப்புமா தெரிந்தேஇருக்கிறது. பொங்கல், தோசை, இட்லி, கேசரி, லட்டு எல்லாம் செய்வேன். மைதாமாவில் தித்திப்பும், காரம்சாமாசியும் பிஸ்கெட்டும்செய்கிறது. அடை, வடை, பஜ்ஜி, பகோடாக்கள் தெரிந்தே இருக்கின்றன. எனக்கு என்னவோ அலமு, இந்த ரேஷன் பேரில் கோபம்இல்லை. 1951-வருஷம் வரை நீடித்து இருக்கும் என்ற பேபரில் வந்திருக்கிறது. ரேஷனால்தான் மற்ற சாமான்களுக்கு

மகத்துவம் ஏற்பட்டிருக்கிறது. ரேஷனால்தான் நாம் இத்தனை விதவித மாக பதார்த்தங்கள் செய்து சாப்பிடுகிறோம்.

அலமு:—என்னவிருந்தாலும் இட்லி தோசை சாப்பிடுகிற மாதிரி இருக்குமா? இந்த ரேஷன் காலத்தில் எப்படி இட்லி தோசை சாப்பிடுகிறது.

காஞ்சனா:—எங்கள் வீட்டில் வாரத்திற்கு ஒருமுறையாவது இட்லி அல்லது தோசை செய்தாகவேண்டும். அதிலும் என் மாமனாருக்கு தோசை செய்த அடுத்தநாளுக்கு ஊத்தப்பம் செய்து கொடுத்தால்தான் திருப்தி. நான் மேற்சொன்ன மாதிரி அரிசியைக் குறைத்துக்கொண்டால் செய்யமுடியும் என்பது என் நம்பிக்கை. அலமு, நீ சத்துடைய மற்ற வஸ்துக்களை நான் சொன்ன முறைப்படி அதிகப்படுத்தி, அரிசியைக் குறைத்து சமையல் செய்துபோடு. நீ கொடுக்கும் டாக்டர் பில்லையும் மருந்து பில்லையும் சேர்த்து பாலிலும் பழம் வாங்குவதிலும் செலவுசெய், குழந்தைகள் எவ்வளவு திடமாக இருக்கிறார்கள் என்று நீயே பிறகு சொல்வாய்.

அலமு:—காஞ்சனா! எனக்கு தயவுசெய்து ஒரு மாதத்திற்கு வேண்டிய சாமான்கள் ஒருதிட்டமாக லிஸ்டு போட்டுக்கொடு.

காஞ்சனா:—இதுஎன்ன பிரமாதம்! இதோ எழுதிக்கொடுக்கிறேன்.

குஷ்டம் ★ வெண் குஷ்டம்

LEPROSY ★ LEUCODERMA.

இலவச பரீட்சை, சிகிச்சை செய்யப்படும்.

கடிதங்கள் உடனே கவனிக்கப்படவேண்டுமானால் ஆங்கிலத்தில் எழுதுங்கள். தமிழில் எழுதப்படும் கடிதங்களை புரிந்துகொள்ள முடியாது. அதனால் அவை திருப்பி அனுப்பப்படும்.

தமிழ், மலையாளம், உருது முதலிய பாஷைகளில் வெளியாகி இருக்கும் நற்சாட்சிப் பத்திரங்கள் முதலிய விவரங்களுக்கு எழுதிக்கொண்டால் இலவசமாக அனுப்பிவைக்கப்படும்.

ஆப்பிரிக்காவிலிருந்து பீஜி வரையில் எங்கள் மருந்து ஏராளமாக உபயோகப்படுத்தப்படுகிறது.

REDDY & Co., (Regd)

GOPALAPURAM. (E. G. Dt) TANUKU, M. S. M.

இதற்கடுத்த சஞ்சிகை

உங்கள் ஊரில் கிடைக்காவிடில் நேரில் எமக்கு வருடச் சந்தாவை மணியார்டர் அனுப்பிப் பெற்றுக்கொள்ளவும்.

வை. மு. கோ. நாவல்கள். (தற்போது கைவசமுள்ளவை)

ரூ. 4-8
வைதேகி (2 பாகம்)

ரூ. 2-8
உணர்ச்சி வெள்ளம்
அமுதமொழி (கிளேஸ்)

ரூ. 2-4
தயாநிதி
ஞானதீபம்
வாழ்க்கைத் தோட்டம்

ரூ. 2.
வானக்குயில்
ஆத்ம சக்தி
சந்தோஷ மலர்
கருணாலயம்
வாத்ஸல்யம்
மதுர கீதம்
அமுதமொழி (சாதா)
ஆசைப்ரவாகம்
வெளுத்த வானம்

தெய்விக ஒளி
மனத்தாமரை
அமரத்யாகி

ரூ. 1-12
அனாதைப்பெண்
புகழ்மாலை
கலாநிலயம்
இதய ஒலி
சிலாசாசனம்

ரூ. 1-8
பிரதிபலன்
பவித்திரப்பதுமை
ஓவியப் பரிசு
இசைப்புயல்
காலக்கண்ணாடி

ரூ. 1-4
கோபால ரத்னம்
மகிழ்ச்சி உதயம்
க்ருபாமந்திர்
புதுமைக்கோயில்

ரூ. 1-2
படகோட்டி
அபராதி

ரூ. 1.
வீரவஸந்தா
நளினசேகரன்
மாலதி
வத்ஸகுமார்
பிரார்த்தனை
பிரதிக்ஞை
பெண் தர்மம்
உண்மைச் சித்திரம்
தபால் விநோதம்
இனிய முரசு
ஆண்டவனின் அருள்

அணா. 12.
பக்ஷமாலிகா
சுடர்விளக்கு

அணா. 6.
உளுத்த இதயம்

நாரண நந்தவனம் (700 பக்கங்கள் 100 படங்களுடன்)
100 சகோதரிகள் சிருஷ்டித்த ருதுமலர் மாலை ரூ. 9.

ஸ்ரீ விஷ்ணுஸஹஸ்ரநாமம்.

ப்ர .ப. அண்ணங்கராசாரியர் உரையுடன் பாராயண பதிப்பு 1-0

இதுவும் ஒரு காந்தி ஸேவையாகும்

திருவல்லிக்கேணி மஹாத்மாஜி சேவா சங்கத்தின்
மாணவர் இலவசச் சம்பள நிதிக்கு நன்கொடையளிக்க
யோகி சுத்தானந்த பாரதியார் இயற்றிய

காந்தி கீர்த்தனம்

350 பக்கங்கள். ரூ. 3-8-0. உயரிய கிளேஸ் பதிப்பு.

இதைப் படித்தால் வாழ்க்கை புனிதமுறும்; சக்திபெறும். டி பதிப்பின் லாபம் சங்க இலவசச் சம்பள நிதிக்கே!

ஜகன்மோகினி காரியாலயத்திலிருந்தோ அல்லது மோகினி ஏஜண்டுகளிடமிருந்தோ அல்லது கீழ்கண்ட அன்பர்களிடமிருந்தோ பெற்று இப்புனித லைகங்கரியத்தை ஆதரியுங்கள்.

ஸ்ரீ சுத்தானந்த சமாஜம்.
சிவகங்கை.

ஸ்ரீ. D கோவிந்தராவ்
நூர்மஹால் 1st Floor Room.9
Plot 541. வின்ஸென்ட்ரோட்
மதுங்கா, பம்பாய் - 19.

JAGANMOHINI, owned and edited by V. M. KOTHAINAYAKI AMMAL is printed and published by V. M. PARTHASARATHY at the Jaganmohini Press, 26, Car St., Triplicane, Madras. 5.
Managing Editor: V. M. SRINIVASAN. M. A., B. L.,

ஐந்து ரூபாய்க்கு அரிய தமிழ் விருந்து.

வை. மு. ஸ்ரீ. 1-வது நவீனம் உதய சூரியன் ரூ. 1-4

1. மங்களபுரியில் மகிழ்ச்சி உதயம் 2. நாமகரணமும் நாற்பது திங்களும் 3. மங்களபுரியின் மூன்று திலகங்கள் 4. ஜீவியச் சுழலில் சோதனையின் கொடுமை 5. புயலும் அமைதியும் 6. குருகுல வாசமும் குமரனின் உள்ளமும் 7. ராஜ்பாபிஷேகமும் ராஜ்ய பாரமும் 8. காதல் போதனை—கம்பன் வர்ணனை 9. எதிர்பாராத சம்பவம் 10. அதிர்ச்சியும் வைராக்யமும் 11. இதய ஒலி 12. போர்க்களத்தில் மனப்போர் 13. உணர்ச்சி வெள்ளம் 14 இருண்ட வானம் 15. உதய சூரியன்.

வை. மு. ஸ்ரீ. 2-வது நவீனம் மதமா, மனமா? ரூ. 1-4.

1. சேற்றில் பூத்த செந்தாமரை 2. அகமலர்ச்சியும் ஆபத்தும் 3. பரபரப்பும் பரிதவிப்பும் 4. வாழ்வும் தாழ்வும் 5. சோகமும் வேகமும் 6. இடியும் மின்னலும் 7. பிரசாரமும் விசாரமும் 8. அன்றும் இன்றும் 9. அலறலும் ஆறுதலும் 10. விழிப்பும் உழைப்பும் 11. விளம்பரமும் விபரீதமும் 12. மனக்கண்ணாடியே உலகம் 13. இன்னலைப் புன்னகைப் போம் 14. உயிர் நிலை—உயர் நிலை 15. பொருள்—அருள்—அமைதி 16. மனதின் சூக்ஷ்மாணுக்கள் 17. அருள் நிலத்தில் அமரானந்தப் பயிர் 18. அவனியில் யாவும் அவனாலே 19. காதல் விளக்கம்—அன்பின் நாயகம் 20. மதமா, மனமா?—மனத்திருவிளையாடல்.

வை. மு. ஸ்ரீ. 3-வது நவீனம்— அவசரமூர்த்தியின் அபூர்வ டயரி ரூ. 1-8-0

நிதானகீர்த்தி தோதுத்து அளிக்கும் விவித விருந்து

1. நவீன ப்ரஹ்மதேவன் 2. நவீனங்களின் முன்னோர் 3. கடவுள் இருக்கிறார்! 4. பிரமித்துவிட்டோம்! 5. கீர்த்தனமணி! 6. ஒரு வாரம் 7. ஸர்வம் ஸங்கீதமயம் 8. இந்திரனின் புதல்வன் 9. ஸ்ரீ க்ருஷ்ணார்ப்பணம் 10. கண்கொள்ளாக் காட்சி 11. அன்பின் ஆற்றல் 12. வாழ்வின் மேடு பள்ளங்கள் 13. எதிர்பாராத அநுபவம் 14. பொன் விழா 15. ஆறுதலும் கிளர்ச்சியும் 16. திருப்பதி யாத்திரை.

வை. மு. ஸ்ரீ. 4-வது நவீனம் ராணி சீலாவதி ரூ. 1-0-0

1. உபன்யாசமும் உதாசினமும். 2. பேய்க்குக்கள் வார்த்த கதைதான்! 3. வாக்கு பலித்தது—விபரீத யாத்திரையே! 4. சிந்தனையும் நிபந்தனையும் 5. உவமையும் உவகையும். 6. வாழ்க்கைத் தோட்டத்தில் மலர்ந்த இதழ். 7. மடமையும் கடமையும் — சூழ்ச்சியின் வீழ்ச்சி 8. இனம் இனத்தைச் சேரும்—தாபமும் தாபமும். 9. விதையும் அறுவடையும் 10. தியாகச் சிகரம்—கடமையின் புண்ணிய வடிவம் 11. சீலாவதியும் சிலாவதியும் 12. ராஜரிஷியின் இதய கீதம்.

மேற்படி நான்கு நவீனங்களையும் ஒரே சமயத்தில் வாங்குவோர் ரூ. 5. அனுப்பினால் தபாற்செலவின்றி ரிஜிஸ்தர் போஸ்டில் அனுப்பப்படும். தனியே வாங்குவோர் தமக்கு வேண்டிய புத்தகத்தின் விலையுடன் 4 அணா ரிஜிஸ்ட்ரேஷனுக்காக அனுப்பவும்.

ஜகன்மோகினி காரியாலயம்

26 தேரடித் தெரு, திருவல்லிக்கேணி.